பதினெண் சித்தர்கள்

பிரமகற்பம்

தாமரை நூலகம், சென்னை – 26.

பதினெண் சித்தர்கள்

பிர்ம கற்பம்

பதிப்பாசிரியர்

ஆர்.சி.மோகன்

தாமரை நூலகம்

7. என்.ஜி.ஓ. காலனி, 3ம் தெரு

வடபழனி சென்னை-600 026

தொலைபேசி எண்:044 23620249

தாமரை வெளியீடு எண்: 269

முதல் பதிப்பு : ஏப்ரல் 2001

இரண்டாம் பதிப்பு : மார்ச் 2008

மூன்றாம் பதிப்பு : அக்டோபர் 2014

நான்காம் பதிப்பு ஜனவரி 2020

நூல் பற்றி:

உரிமை பெற்றது

நூலின் பெயர் : பதினெண்சித்தர்கள் பிர்மகற்பம்

பதிப்பாசிரியர் : ஆர்.சி மோகன்

வெளியிட்டோர் : தாமரை நூலகம்
சென்னை-26

பதிப்பு ஆண்டு : **ஜனவரி 2020**

உரிமை : பதிப்பகத்துக்கு

நூல் வடிவம் : 21 க்கு 14 செ.மீ

அச்சுத்தாள் : 16கி மேப் லித்தோ

மொத்த பக்கங்கள் : 120

விலை : ரூ. 50/-

அச்சிட்டோர் : கிரியேட்டிவ் ஆப்செட்
சென்னை-34

91/4

பதிப்புரை

ஏற்கனவே எங்களால் வெளியிடப் பெற்ற 'முப்பு எனும் கற்பமருந்து' எனும் அரிய நூலில் முப்பு எனும் அபூர்வ மருந்து வேறு எந்த மருந்துடன் சேர்க்கப்பட்டாலும் அதன் வீரியத்தைப் பலமடங்கு அதிகரிக்கச் செய்யும் என்பதுபற்றி தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்நூலில் முப்பு தயாரிப்பதற்கான பூநீர், சுண்ணங்கள் மற்றும் கல்லுப்பு ஆகியன எங்கு கிடைக்கும், அவற்றிலிருந்து எவ்விதம் முப்பு தயாரிக்க இயலும் என மதுரை வைத்தியர் அப்துல் ஜப்பார் அவர்கள் விவரித்துள்ளார்கள்.

தஞ்சாவூரை சேர்ந்த வைத்தியர் திரு. இல. தேவசங்கர் அவர்களால் புகைப்பட பிரதியாக வழங்கப்பட்ட இந்த பழைய புத்தகத்தில் முப்பு எனும் பிர்ம கற்பத்தினைப் பற்றி அகத்தியர், திருவள்ளுவர், யூகிமுனி போன்ற சித்தர்கள் என்னென்ன கூறியுள்ளார்கள், என்பதுகுறித்து விவரிக்கப் பட்டுள்ளது.

இந்த அரிய நூல் வைத்தியத்துக்கும் வாதத்துக்கும் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

ஆர்.சி. மோகன்
பதிப்பாசிரியர்



புத்தகத்தை அளித்து உதவியர்

திரு. இல. தேவசங்கர் அவர்கள் பரம்பரைச் சித்தமருத்துவர். இவருடைய முன்னோர்கள் குருமருந்து (முப்பு) தயார்செய்து, நவபாஷாணம் மற்றும், இரசகெந்தகங்களை புகையாமல் செய்து பல தீராத கர்மவியாதிகளுக்கு மருந்துவம் செய்துள்ளார்கள், மேற்படிமுறைகளை கையாண்டு இவரும் மருத்துவம் செய்து வருகிறார். தற்சமயம் இவர் அனைத்துசித்த மருத்துவர்களுக்கும் பயன்பெறும் நோக்கத்துடன், இதுவரைக்கும் இரகசியமாக இவர்கள் பரம்பரையில் செய்துவந்த மருத்துவ முப்பு செய்முறை, பாஷாணங்கள்கட்டும் முறைகள், இரசம் உருக்கும்முறைகள் பெரும் மருந்துகள் செய்யும் செய்முறைகளையும் கற்றுத் தருகிறார்.

தெரிந்துகொள்ள விருப்பம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

இல. தேவசங்கர்
பரம்பரை மருத்துவர்,
வள்ளலார் சித்த மருத்துவம்,
எண். 2235, அரண்மனை திடல்,
தஞ்சாவூர் - 613 009.

91/4

பரிபூரணச் சித்தர்கள் பிர்மகற்பம்

உ

கணபதி துணை

காப்பு

பரமதாய் ஞானோதயத்துப் பரஞ்சுட ருலகுக் கெல்லாம்
திரமதா வுதித்த ஞான திவாகரன் றிருத்தாள் காப்பு
கரமதாய் வகாரயோக மறைப்புநூற் பாடையெல்லாம்
முருகவிழ் தமிழாய்ச் செய்ய முருக னைங்கரர்தாள் காப்பே.

பிர்ம கற்பம்

இதற்கு 320-பெயர் அகஸ்தியர் பரிபாஷை
500-ல் சொல்லப்பட்டிருக்கிறது.

முதல் பெயர் வழலை.

இது கிடைத்தால் பிர்மலபி தவறிப்போகும்
அகஸ்தியர் பரிபாஷை 500-ல் 32-வது பாட்டு.

சொல்லாத பொருளையா பிர்மகற்பஞ்
சொல்லாமல் மறைத்தார்கள்சித்தர்தாமும்
கொல்லாமல் கொல்லுமையா வெளியிடாதே
கோதையர்க ளாசையிலே சிக்கிடாதே
பொல்லாத பொருளது கைக்கொண்டாயானாற்
புகலறிய பிரமலபி தவறிப்போகும்
வெல்லாமல்வெல்லுமந்த தீட்சை கண்டால்
வெகுகோடி வித்தையெலா மாடலாமே.

வழலையே அப்புப்பு-முப்பு

ஆடலா மப்பதுவும் உப்பதாச்சு
தரகர்ர உப்பதுவு முப்புவாச்சு
மீடலா மதிற்பிறந்த பிண்டமாச்சு
பிண்டத்தி லண்டமெனு மமுதமாச்சு
பாடலாம் பாலமுத மதுவேயாச்சு
பகர்மூல மென்னுமோ ரைந்துமாச்சு
காடெலாங் காயமெனு மைங்காயத்தைக்
காணாமல் மானிடர்கள் கலங்கினாரே 33

வழலையே ஐங்காயம்

கலங்காம லென்மகனே யன்பாய்க்கேளு
காயமெனு மைங்காயம் பதனம் பண்ணு
மயங்காதே மௌனமெனு மைங்காயந் தான்
மகத்தான மாரணத்துக் காதிபீடம்

தியங்காமற் சீசாவிலடைத்துக் கொண்டு
தீதிலாப் பேழையிலே பதனம்பண்ணு
வயங்குகின்ற வென்மகனே வாரந்தோறும்
வண்மையா மிக்குருவைப்புசிப்பாயே 34

நீ நினைத்ததெல்லாம் சித்தியாக வேண்டுமானால்
வழலையை ஒரு சீசாவில் வைத்து தினந்தோறும்
பூசை செய் 64+சித்து மாடும்

புசிப்பாய் நாடோறும் புசித்தாக்காற்
புகழான மாந்திரீக மிதனாலாகும்
யாசிப்பாய் சித்துகளி லநேகஞ்சித்து
மருபத்துநாலு சித்துமிதனா லாடும்
நேசிப்பாய் நாதாக்கள் மறைத்ததெல்லா
நிலவரமாய் வெளியிட்டேன் பன்பாய்ப்பாரு
வாசிப்பாய் என்னுடைய நூல்கடோறு
மறைத்ததெல்லாங் குருவாணை வெளியிடாதே 35

சாபநிவர்த்தி

அறைந்திட்டே னின்னூலை வெளியிட்டோர்க
ளண்டயிடி விழுந்து தலை தெறித்துப் போவார்,
குறைந்தும் குருமொழியை வெளியிட்டக்காற்
கோடையிடி யவர்தலையில் விழுமன்றேபார்,
சிறந்தபுகழ் சதகோடி ரிஷிகள் சாபஞ்
செகற்குருவின் சாபமது வந்துசாரும்
மறிந்தோடச் சாபங்க ளனைத்துந்தீர்த்
தேன் மகத்தான வைந்நூற்றை யடக்கம்பண்ணே 97

போகர் 60-ல்

வழலை உனக்கு இன்னது என்று தெரிந்திருந்தால் போதும்

நில்லென்றால் வாழ்வுனக்கு நிற்குமோடா
நீர்மூட மடையருக்கு கிட்டுமோ சொல்,
நேராக வழலையது சிக்கிற்றானால்
அல்லென்ற குபேரனைபோல் வாழ்வுண்டாகு
மாதித்த னுள்ளளவு முண்டுடுக்கலாகுங் -
கல்லென்ற கல்லுப்பு கட்டிற்றானால்
காரணமாஞ் சூதத்தைக் கவ்விக்கொல்லு
மல்லென்ற சூதத்தி லெட்டெட்டுஞ் சித்தி
வாய் வீணராய்த் திரிந்தால் மண்ணாய்ப் போமே

போகர் 7000-ல்

முப்பு தெரியாத உலகவாதி படும்பாடு

தானென்ற நூல்பார்த்து உலகவாதி
தவித்துமே மனம்புண்ணாய் வறுமையுற்று
வானென்ற உலகத்தோர் சிரிக்கக்கேட்டு
மருள் கொண்ட பிசாசுபோல் வாயுலர்ந்து,
ஊனென்ற சோற்றுக்கு மிடமில்லாம
லுண்பாரை யுடுப்பாரைப் பார்த்துஏங்கி,
நானென்ற ஆணுவத்தால் கெட்டோமென்று
நாய்போலே திரிந்தலைந்து மாளுவாரே.

சாகாமலிருக்க வழலையை மறையாமல் 7000-ல் ஒருசொல்லும் தவறில்லாமல் சொல்லியிருக்கிறேன் என்பதை கவனியுங்கள்

மாளாதே யிருக்கவல்லோ வழலைதன்னை
மறையாமற் சொல்லிவிட்டே னேழாயிரத்தில்,
கோளான சீஷருக்கு நூலீய வேண்டாங்
கொடுத்தாக்கால் ரவிகோடி நரகமெய்துந்,
தாளான யெந்நூலின் வழலைதன்னை
சாற்றினே னொருசொல்லுந் தவறில்லாமல்,
நாளான அம்பரத்துக் கொப்பாய்ச் சொன்னேன்
நாதாக்கள் பதமறியச் சொன்னேன் காணே.

என்று7000-ம் 700-லும்

போகர் 60-ல்

சித்தர்கள் சொன்ன கோடானுகோடி சாஸ்திரங்களைப் பார்த்தாலும் காரம்சாரம் தோற்றாது தோற்றுவதும் வழிதெரிந்து தோற்றிடாது சட்டமுனிநிகண்டிலும்வழலைதனை மறைத்துக்கூறிவிட்டார் வழலையை நாமுரைத்தோம் நான் பாடிய 7000-ம் 2-ம் காண்டத்தில் வழலைதனை ஒருசொல்லும்தப்பில்லாமல் சொல்லியிருக்கின்றேன் என்று போகர் காரசாரத்துரை 60-லும் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியானால் காரசாரம் என்பது என்ன!

காரசாரமே அண்டம் பிண்டம்
இதுவே வழலை அப்புப்பு முப்பு என்று
அகஸ்தியர் பரிபாஷை 500-ல் 5-காண்டம் 33-வது
பாட்டில் சொல்லப்பட்டிருக்கிறது.

போகர் நிகண்டு 1200-ல் 15-வது பாட்டு

படியான வழலை விட்டால் வாதமில்லை
படிப்படியா யேறுகிற முறையுமில்லை
மிடியான காயசித்தி கெவுனசித்தியில்லை
பேய்க்கூத்தாய்ச் சுட்டலைந்து பிரேதமாவான்

அடியான மரத்தி னின்று தொத்தியேற
ஆக்குநுனி மட்டுமே யேறலாகும்
முடியான வழலையுப்பை முன்னேசெய்தால்
மோசமில்லை முடிவுமட்டு மேறலாமே.

வழலையை பின்விரிவாய்சாஸ்திர ஆதரவுடன் எடுத்து காட்டப்படும்.

முப்பு ரகசியம் = பூநீர் என்பது சத்தி இதை நாதமென்றும் சாரமென்றும்

அகஸ்தியர் வழலைசூத்திரம் 7-லும் இது மண்ணும் தண்ணீரும் கூடி விளைந்தது பிண்டம் என்றும் அகஸ்தியர் வழலைசூஸ்திரம் 12-லும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஊசரம்- உவர்மண். (ரஹஎ்ட்ங்ழ் ம்ஹய்'ன் ர்ழ் ச்ன்ப்ப்ங்ழ்'ள் ங்ஹழ்ற்ட்)
(வண்ணான் அல்லது வெளுக்கக் கூடியவர்கள் உபயோகிக்கும் மண், உவர்த்தரை)
(ஆழ்ஹஞ்நீந்ன்ஸ்ட் ஏ்ற்ங்ழ்ண்ப்ங்ய்ஹய்க்)

ஊசரமாகிய பூநீருக்கு உவர்மண் என்று பெயர். இதுசத்தி. இதுபெண் இதற்கு ஆதிச்சரக்கு அமுரி. அமுரி சேர்க்காவிடில் இதின் சாரம்நிலையாது ஆனா அமுரியில் எண்ணை கக்கவைத்தால் அவனேவாதி என்று பூகிமுனி சொல்வதால் அமுரியிலுள்ள எண்ணையை நீக்கவேண்டும் எப்படி நீக்குவது! அமுரியை திராவகமிறக்கினால்தான் எண்ணைக்கக்கிவிடும். பின் பூநீர் 1 அமுரி 4 பங்கில் கரைத்து நாலாம்நாள் தெளிவிருத்து ரவியில் உலர்த்தவும்.

இப்படி தசதீட்சை செய்ய பூநீரிலுள்ள எண்ணையெல்லாம் கக்கி பூநீரிலுள்ள சுண்ணாம்புபாரம் ஓடாமல் கட்டுப்பட்டு விடுகிறது.

ஊசரம்- பூநீர் பிண்ட அடையாளம்

இது மஞ்சளுக்கு சிவக்கும் நல்ல தண்ணீர்பட்டாலும் சிவக்கும் இதிலுள்ள சுண்ணாம்புக்காரம் ஓடும் குணமுடையது. இது சத்தி அடி என்றும் நிலஉப்பு என்றும் பெயர்.

ஈசனுப்பே காரம் இது அண்டம்

என்பதை ஆராய்வோம்

முடியாகிய ஈசனுப்பிலிருக்கும் சுண்ணாம்புகாரம் ஓடாத குணமுடையது, சிவமென்றும் முடி என்றும் இதற்கும் நிலஉப்பென்றும் பெயர்.

அகஸ்தியர் பரிபாஷை 500-ல் அண்டமென்பது பூநீரில் ஜல வடிவமாயிருக்கிறது இதையே ஈசனுப்பு என்றும் காரமென்றும் வழலை சூஸ்திரம் 7-ல் சொல்லப்பட்டிருக்கிறது.

பூநீரே சாரம் சாரம் ஈசனுப்பே காரம் காரம் இது 2-ம் பூமியிலிருக்கிறது என்று சூஸ்தரம் 7-லும் இந்த காரசாரமே அண்டபிண்டமென்றும் சூஸ்திரம் 12-லும் சொல்லப்பட்டிருக்கிறது உவட்டுமண்ணில் புகுந்திருந்த உப்பே ஆகாய உப்பென்றும் அக்கினி உப்பென்றும் இது அண்டமென்றும் அக்னியும் வாய்வாகிய ஜலமும் கூடி விளைந்திருப்பதாயும் இந்த அண்டமாகிய ஈசனுப்பு பிண்டமாகிய பூநீரில் சேரும்போதுசொர்ணவித்தை கைவசமாய் சிக்கிவிடுமென்றும் ஆணுக்கு தீட்சை 1 பெண்ணுக்கு தீட்சை 2 என்றும் அகஸ்தியர் 12-ல் சொல்லப்பட்டிருக்கிறது.

பூநீரில் ரவிபட்டதும் உவர்மண்ணாக மாறிவிடுகிறது
ஜலம் சுண்டியதே காரணம்

உவர்-பெண் பூநீர்- உகாரம்
நஞ்சு-ஆண் பிர்மகற்பம்-அகாரம்
அதற்கு உடல் மனித அமுரி.

உடல்போனால் உயிர் நிலையாது என்பது போல் உயிர் நிலைக்க அமரியில் தசதீட்சை செய்யவேண்டும். (அமுரியே சிவதீட்சை செயநீர் எனல்) பிர்மகற்ப கற்சுண்ணாம்பும் அமுரியும் சேர்ந்துக் கொண்டால் குருவாச்சு சிவனுமாச்சு முப்பு மாச்சு கல்லுப்புமாச்சு என்று அகஸ்தியர் 500-ல் சொல்வதை கவனியுங்கள்.

சட்டமுனி 1000-ம் 543-வது பாட்டில் பூநீருக்கு அமுரி
சேர்க்கும்படி செல்கிறார்.

ஈசனாகிய ஆணுக்கும் அமுரி சேர்க்கும்படி அகஸ்தியர் பரிபாஷை 500-ல் 1-வது காண்டம் 18-வது பாட்டில் சொல்வதையும் கவனியுங்கள்.

கோடி என்றா லெத்தனை யென்றுரைப்பேனையா
　　கூர்ந்துபார் நாலுவகை யோனிக்கூத்தை
ஆடிநின்ற மகாபூத வண்டவித்தா
　　லப்பனே பிறந்ததுகாண் பிண்ட விந்து
தேடிநின்றலைவானே னுனக்குள்வேயே
　　செலங்குதித்தும் பனிநீர்போற் செயநீராச்சு
ஓடிய தோர் பிரமகற்ப கற்சுன்னூம்புக்
　　குயர்ந்த சிவதீட்சை யிந்தச்செயநீராமே. 18

அமுரியே-அப்பு வழலையாகிய
பிர்மகற்ப கற்சுண்ணாம்பே-உப்பு இது
ஆகாயத்திலிருந்து வந்தது.

செயநீருஞ் சுண்ணாம்புஞ் சேர்ந்துகொண்டாற்
　　சிவசிவா குருவாச்சு சிவனுமாச்சு

மயமான முப்புவென்றுரைத்த செய்தி
வகைதெரிய சொல்வதற்கென் வாய் கூசாதோ,
தயவாக நானுரைத்தேனிந்த மட்டுஞ்
சமுசயங்க டீரவென்றாற் கடைக்காண்டம் பார்
-உயிரிருக்குமிடந் தானே பிரமகற்ப
முடலிருக்கும் மிடந்தானே பிண்டவித்தே 19

வித்துக்குனின்ற ரசமப்புவாச்சு
விண்ணிழிந்து வந்தரச உப்புமாச்சு
சத்தித்த விடந்தனிலே எல்லாமுண்டு
சாகாதகால் தானே சவுக்காரந்தான்,
புத்திக்குந் தோன்றாதேற் புலத்தியா கேள்
பொருளையிந்த நுன் முடிவுக் கடைக்காண்டம் பார்
இத்தைவிட்டு நூல்பாடைக்கா யாதிபுப்புக்
கெடுத்த பரிபாடையெல்லா மியம்புவேனே 20
என்று அகஸ்தியர் பரிபாஷை 500-ல் சொல்லப்பட்டிருக்கிறது.

பிர்மகற்பம்

இது அண்டம் அக்னியும் வாயுவும் கூடி விளைந்தது
என்று வழலை சூஸ்திரம் 12-ல் சொல்லப்பட்டிருக்கிறது.

இது பூநீரில் நஞ்சாக இருக்கிறது இதுவே ஈசனுப்பு அக்னியுப்பு இதற்கு சிவமென்றும் ஆகாய உப்பென்றும் முடி என்றும் அண்டமென்றும் விந்துவென்றும் காரமென்றும் இதுவே முதல்வழலை என்றும் காந்தமொன்ற உப்பென்றும் விஷக்கல் என்றும் நிலஉப்பென்றும் ஈசனுப்பென்றும் இடியுப்பு என்றும் பிர்மகற்பமென்றும் பெயர்.

இதுவே முதல்வழலை என்றும் இது மண்ணில் 7-பிறப்பாய்
பிறந்ததென்றும், ஒன்றில் 7-வித நிறமடைந்திருக்கிறது,
7-வது பிறப்பு ஸ்படிகநிறமென்றும்
அகஸ்தியர் பரிபாஷை 500-ல் சொல்லப்பட்டிருக்கிறது
இதுவே நஞ்சு என்று திருவள்ளுவர் கெவுனமணி 100-லும்,
பிர்மகற்பமே ஈசனுப்பு நிலஉப்பு இதுவே முதல் வழலை
பச்சைநிறம் பஞ்சவர்ணமும் இதின் கீழுண்டு என்று அகஸ்தியர் முப்பு
30-லும் பிர்மகற்பம் இதுவே அண்டமென்று பரிபாஷை 500-லும்
இதுவே காந்தமென்ற விஷக்கல் என்றும் இதைத் தொட்டாலும்
தொல்லுலகில் மாண்டிடுவர் மனிதர் தாமும்
கை தொடாதெடுக்க வேண்டும் என்று
போகர் 7000-ல் 4-ம் காண்டம் 38-வது பாட்டில்
சொல்லப்பட்டிருப்பதை கவனியுங்கள்.

பாரேதான் அண்டபிண்ட மறியவேண்டும்
பாரினிலே அண்டமதை யாருங்காணார்,
நேரேதான் முப்பூவும் பூர்க்கும்போது
நெடிதான அண்டமென்ற கல்தானப்பா,
கூரான பிரிதிவினால் உற்பத்தியாச்சு
கொடிதான விஷக்கல்லு அண்டக்கல்லாம்,
சேரேதான் சிற்றண்டம் பேரண்டமென்றும்
சிறப்பான நடுவண்டமென்றும் பேரே.

பேரான சுக்கராங்கல் பிரம்மக்கல்லாம்
பெருமையுள்ள மூதண்டக்கல்லுமாகும்,
சீரான படிக்கக் கல்லென்றும் பேரு
சிறப்பான குழி யானை யென்றும் பேரு,
தாரான குடுகுடுக் கல்லென்னும் பேரு,
தாக்கான சுண்ணக்கல்லென் றும்பேரு
பாரான பச்சையென்ற சுண்ணக்கல்லு
பாங்கான உதகமென்ற கல்லுமாச்சே.

கல்லான கல்லதனைக் காணவேண்டும்
காசினியி லாருந்தான் காணமாட்டார்,
புலலான பூநீரை யறியமாட்டார்
புகழான சோணக்கல் சுண்ணமப்பா,
மல்லான மண்கட்டி யென்பார்பாரு,
வையகத்தில் தாமறியார் மகிமைதன்னை,
செல்லான புத்துக்குள்ளிருக்குங் கல்லாம்
ஜெகஜோதி மகிமைதனை காணார்தாமே.

பிர்மகற்பமே காந்தமென்ற+உப்பு
இதுவே விஷக்கல்+அண்டம் இதை தொட்டால்
மாண்டிடுவார் கைதொடாதெடுக்க வேண்டும்
இரும்பு சம்பந்தமில்லாமல் மரகைபிடி போட்ட
தங்க சல்லடையில் அரித்து எடுத்து சீசாவிலிடவும்.

காணாரே கருவாளி காண்பானாகில்
காசினியில் விண்டிடுவான் கருத்துளோர்க்கு,
தோணவே பூவுலகில் தொட்டாலுந்தான்
தொல்லுலகில் மாண்டிடுவார் மாந்தர்தாமும்,
நாணவே சாத்திரத்தை மிகவாராய்ந்து
நாதாக்கள் சொல்லுறையும் மிகவுங் கேட்டு.
நீணவே கற்பாந்திர மிருப்பதற்கு
நீனிலத்தில் கைமறைப்பு யாவுங்கேளே.

இதை அமுரியில் தசதீட்சை செய்தால் எண்ணை கக்கி கட்டிவிடும் பின் சிவஉப்பு என்று அறியவும்.

தீட்சைவிபரம் பின் விரிவாய் எழுதப்படும்

ஈசனுப்பு மஞ்சளுக்கு சிவக்காது

ஊசரம் என்ற பூநீர் சூரியன் அதிலுள்ள ஈசனுப்பு, மதியுப்பு என்றும் ரவியுப்பு என்றும் பெயர், ஈசனுப்பு இருக்கும் பூநீராகிய இந்த ஊசரத்தில் வெண்மையில்லை மஞ்சளுக்கு சிவக்காது தீயிலிட கருத்துப்போகும் இந்தவிதம் வாதிகள் கண்டெடுக்கமாட்டார் என்றும் பாமசிவனுப்பு கைத்திடாது என்றும் அகஸ்தியர் பரிபாஷை 500-ல் சொல்லப்பட்டிருக்கிறது.

இதுவே நஞ்சு, காரம் இதை பூமியிலிருந்து எடுக்கும் விதமும் பூமியிலிருந்து எடுக்க முடியாதவர்கள் பூநீரிலிருந்து அக்னியுப்பாகி ஈசனுப்பை பிரித்தெடுக்கும் விதமும் இதின் அனைத்து மர்மங்களும் கடைசியில் எழுதப்படும்.

உப்பு 1 தீட்சை 1 மறைத்துவிட்டார்கள்

நான் சொல்லகிறேன்

(பூநீரே சாரம் சாரம்) (ஈசனுப்பே காரம் காரம்)

ஈசனுப்பு என்பது பிர்மகற்பம் இதுவே முதல் வழலை

என்பதற்கு ஆதாரம்

அகஸ்தியர் பரிபாஷை 500-ல் 2-ம் காண்டம் 17-வது பாட்டு

பேசாத பூவழலை பிர்மகற்பம்
பின்னையொன்றுமில்லை நிலவுப்பே யீசன்
கூசாதே முடிதலை என்றிதற்குப் பேராங்
கொண்டரல் மதியுப்பென்றும் கூறலாகும்
பூசார மறியரக்கா லீசனுப்புப்
பொருந்தாது முதல்வழலை பொய்யாய்ப்போகும்
ஆசாரக்கள்ளருடன் பேசவேண்டா
மாதித்தனுப்பை யினி யறையக்கேளே.

அகஸ்தியர் பரிபாஷை முதற்காண்டம் 64,65-வது பாட்டு

"சாரப்பா லவணவிந்து பூமிநாதந் தனையறிந்து முடித்தவர்க்குத் தங்கமாமே-தங்கமதை யுண்டாக்கும் விந்துநாதஞ் சாரமென்றுங் காரமென்றுந் நருமேபூமி" என்று சொல்வதால் சாஸ்திரப்படி

காரம் சாரம் இன்னது என்று உறுதிப்படுத்த

அகஸ்தியர் வழலை சூஸ்திரம் 7-ல் கவனியுங்கள்

வாதமென்ற லுப்புவித்தை யறியவேணும்
வாய் பேசினால் வருமோ வாதந்தானும்
வேதமென்ற வறிவுகொண்டு நிலைக்க வேணும்
வெஞ்சினங்கள் பேசினால் வருமோ ஞானம்

காதமென்றால் வெகுதூரம் போகவேணும்
கண்மூடி யிருந்துவிட்டால் நடந்ததெங்கே
நாதமென்றால் வாசிகொண்டு வூதவேணும்
நாய்போல் திரிந்தாக்கால் நலமாகாதே. 1

வாதத்துக்கு ஆதிச்சரக்கு பூநீர்
சாரம் என்பது பூநீர் -இதுவே பூமிநாதம்

நலமான ஆயியுட நாதந்தானே
நல்லதண்ணீர் பட்டாக்கால் சிவந்துபோகும்
மலையரன மஞ்சள்பட ரத்தமாகும்
மயக்கமில்லை தேவியுட நாதமாச்சு
குலமறியா சண்டாளருலகினுள்ளே
கோதையுட யோனியினால் வடிந்த ரத்தம்
பீலமாக வாதத்துக் காதியென்று
பேசுவார் வீணரெல்லாம் பேசுவாரே. 2

கார சாரம் இவை எனல்

பேசுவார் பூநீரே சாரம் சாரம்
பிலமான பீசனுப்பே காரம் காரம்
கூசாமல் ரெண்டுக்கும் நிலமே தெய்வம்
குடியிருப்பு ஓரிடத்திற் குறித்துப்பார்க்க
தேசமெல்லாம் போனாலுந் தெரியாதப்பா
சிவயோக வாழ்க்கை வந்தால் சித்தியாகும்
.வீசுவா ருப்பறிந்தோமென்று சொல்லி
மிலேச்சர்களே பாராதே குருவைத்தேடே. 3

குருமுடிக்கும் காலம்

குருமுடிக்கும் காலமல்லோ மீனம் மேஷம்
கொண்டாட்டமாகவே குறித்துச் சொன்னார்
கருவெடுக்குங் காலத்தை குறித்துச் சொல்லி
காட்டாமல் சூஸ்திரங்கள் கட்டிப்போட்டார்
பொருள் முடிக்கப்போரதெப்போ உப்பில்லாமல்
பூநீற்றை மாத்திரமே பொசிக்கியென்ன
இருவகைக்கும் தீக்ஷைக்குநாள் மூன்று பண்ணு
எட்டுரண்டும் பாசமறிந்தெடுத்துக் கொள்ளே 4

அகாரமாகிய சிவஉப்புக்கு பிரணவ நீரில் 1-தீக்ஷை
உகாரமாகிய பூநீர் சத்தியுப்புக்கு பிரணவநீரில்
2-தீக்ஷையும் செய்தால் சூதம் பொசுங்கி நீறும்

பிரணவநீர்

எடுத்தக்கால் தீக்ஷைக்கு ஆதியென்ன
ஏகாந்தபிரணவநீ ருட்டவேணும்

குடித்தக்கால் பூதபஞ்சி கரணமாகும்
சூட்டினா லப்போதே குருவுமாகும்
பிடித்தாக்கால் நில்லாத சூதராஜன்
புலிகண்ட ஆடதுபோல் பொசுங்கிநிரும்
படித்தாக்கால் என்னவுண்டு வுள்பூறாவும்
பாறாமல் சுட்டதெல்லா பாழ்கண்டீரே 5

தீட்சை விபரம்

பாழாகப் போகாமல் ஈசனுப்பே
பதினாறு கலைமதியில் பாடம் பண்ணு
யேழ்மையாய்ப்போகாமல் தேவீயுப்பை
ஈராறு சூரியனில் ரெட்டித்தேரு
கோவாகப் போகாமலிவை ரெண்டுக்கும்
குற்றமில்லா சுத்தஜலம் குளிரத்தாக்கு
நாளாக இப்படியே மாறி மாறி
நாளொன்றுக் கிருநேரம் நயந்து செய்யே 6

செய்யயிலே யிடைபாகம் சிதறிடாதே
தீக்ஷையிலே முதல்தீக்ஷை மறந்திடாதே
சொல்வதிலே உப்பெடுக்கும் நாள் விடாதே
குருமுடிக்கும் காலமதைத் தவறிடாதே
பொய்வசன சீஷர்களைச் சேர்த்திடாதே
பூவையர் களாசையிலே புக்கிடாதே
தொய்வதிலே மருந்துகளைப் பேதியாதே
தொண்டாகவேயிருந்து தொழில்செய்யே 7

முற்றிற்று.

சத்தி சிவஉப்புக்கு அமுரி தீட்சைசெய்த பின்பு முதல்தீட்சை பிரணவநீருட்டச் சொல்கிறார் பிரணவநீர் செய்யும் விதத்தை சட்டமுலமாக பின் சொல்கிறேன் கவனிபுங்கள்

பூநீருக்கடியிலுள்ள சுக்கான்கல் அண்டமல்ல என்பதற்கு ஆதாரம்

அகஸ்தியர் வழலை சூத்திரம் 12

தாயான வுன்மனையாள் பாதம் போற்றி
சாஸ்திரமோறாயிரத்தினிருநூற்றுக்குள்
தோயாத கருவொன்று மில்லையில்லை
சொல்லடக்கமா யுரைத்தேன் வழலையென்று
காயாகுமிதைக்குருக்கி யிருநூறுஞ் சொன்னேன்
கனியான விந்தநூல் பன்னிரண்டிற்கும்
வாயாரச் சொல்லுகிறேன் வகாரமார்க்க
மதி யிரவி யண்டபிண்டம் வழலைகேளே 1

இவைகள் அண்டமல்ல

வாலையென்ற வண்டமது, முட்டையல்ல
மானிடர்கள் மண்டையல்ல சுவாசமல்ல
அளையான ரோம்மல்ல கண்ணீரல்ல
பீசன் விந்து சூதமென்பரதுவுமல்ல
தழையான மூலிகையு மதுவுமல்ல
தானிலை காய் பூவின் சத்துமல்ல
குழையான சுக்கிலத்தின் கூறுமல்ல
கொடியதொரு சுண்ணாம்புக்கூட்டந் தள்ளே 2
தள்ளப்பா சவ்வீரம் துருசுமல்ல
சவுக்கார நவலோகச் சத்துமல்ல
வீள்ளப்பா ஆணல்ல பெண்ணுமல்ல
வெடியுப்பு கரியுப்பு விஷநீரல்ல
கொள்ளப்பா மதுவல்ல மலந்தானல்ல
கோசமல்ல அஸ்தியல்ல குருவண்டல்ல
யெள்ளப்பா வஸ்துவல்ல சிறுநீரல்ல
யேதென்றாற் பஞ்சபூதியத்திலொன்றே 3

அக்கினியுப்பே அண்டம் - இது பூநீரிலுள்ள நாதமென்ற வெடியுப்பு - இதுவே சிவம்

நஞ்சு, ஆண், பிர்மகற்பம் ஈசனுப்பு, இணங்கன்
இடியுப்பு, மதியுப்பு, நிலஉப்பு என்றும் பெயர்.

பூதமென்ற வைந்துக்குள் நடுவாய்நின்று
பூரணமே தேய்வாச்சு புலத்தியா கேள்
வேதமட..ர வட்சரத்தின் கா, ரச்சு
மேலான ஆகாச வன்னியாச்சு
நாதமென்ற வெடியுப்பு ஈசனாச்சு
நலமான தலையாச்சு முடியுமாச்சு
ஓதவென்றால் ரவியாச்சு ச..பியுமாச்சு
வுவட்டு மண்ணில் புகுந்திருந்த வுப்புமாச்சே 4

வானமருந்துக்கு உபயோகிப்பது விந்து என்ற வெடியுப்பு

உப்பான வாகாசம் வன்னிபீசம்
ஓகோகோ சமாதிநிலை யப்பாஅண்டம்
அப்பான தேகத்திற் பிறந்த வன்னி
வாசைகொண்டு பிரிதிவியிலடங்கி நிற்குஞ்
செப்பாதே வண்ணானை சோதித்தோர்க்கு
சிவனை வெளியாக்குமிந்த தேவியுப்பு
துப்பான பிண்டத்திற் சேரும்போது சொர்ண
வித்தை கைவசமாய் தோற்றும் பாரே 5

பூநீர் இதுவே பிண்டம்

பாரப்பா பிண்டத்தை சொல்லவென்றாற்
பாபமில்லை சாபமில்லை பாணமில்லை
பேரப்பா பெண்ணில்லை பெண்ணாற் பெற்ற
பிள்ளையில்லை கருவில்லை பீசமில்லை
கூறப்பா மங்கையர்கள் தூரமான
குருதில்லை கும்பிடுகல் குணபீடில்லை
பாரப்பா பலசீவ செந்துமில்லை
மதுவில்லை மலமில்லை வகையாய்க்கேளே 6

(குருதியல்ல - இரத்தமல்ல)

வகையான மண்ணென்று மதிதானென்று
வருஷக்காற்றுத் தனலென்றும் ரவிரூடென்றுந்
தகையான வேழுவகைத் தோற்றத்துக்குந்
தாயென்றும் யோனியென்றுஞ் சத்தியென்றும்
திகையாதே மனமுருகி வருந்திடாதே
ஜெகமயக்கத் துள்ளுழன்று பிணமாகாதே
பகையாதே கொடிய வெள்ளைக் கரியென்றும்
பகையில்லா வுவர்நிலத்தைப் பகருவாரே 7

மண் என்பது - பிண்டம்

வரரான மண்ணல்லோ பிண்டமாச்சு
வன்னியல்லோ பூமியின் கீழண்டமாச்சு
கூறான வக்கினியும் வாய்வுங்கூடி
குடியிருந்தவுவர் நிலத்தைப் பெண்ணென்பார்கள்
நீரான தண்ணீரும் மண்ணுங்கூடி
நின்றதினாற் பெண்ணாச்சு தீயேஆண்
பேரான யிவ்விரண்டுஞ் சேர்ந்தபோது
பெரிதான வாதசித்தி பெலத்துப் போச்சே 8

ஆணுக்கு தீட்சை 1
பெண்ணுக்கு தீட்சை 2

போச்சப்பா வாணுக்கு வொன்றே தீட்சை
பேசரதே பெண் தனக்கிரண்டேதீட்சை
நீச்சப்பா பூரணநூல் தன்னிற்சொன்னேன்
நிஜமாக சொல்லிவைத்தேன் முப்பத்தொன்றில்
வாச்சப்பா மதிபாகம் ரவிபாகம்
வருடபத மாதபத மிடைபாகங்க
வேசிலப்பா சொல்லவில்லை கைபாகங்க
ளித்தனையுங் குருதன்னா லிசைந்துகொள்ளே 9

இசையவே வன்னிக்குக் கலைதானொன்று
　　யிரட்டிப்பு வேணுமடா தண்ணீருக்கு
அசையாதே மண்ணுக்கு கலைதானாலு
　　வாறுகலை வாய்வுக்கதிகம் வேண்டாம்
பசையில்லா ஆகாசங் கலந்துக்கொள்ளும்
　　பருவமா மிந்தமுறை யாடமாட்டார்
திசையான பூநீரை சிறுநீர் தன்னிற்
　　றெளிவிருத்து தீயெரித்துத் தியங்குவாரே 10

சித்திரை - பெண், பங்குனி - ஆண்

தியங்காமல் மேஷமடா பெண்ணுக்காச்சு
　　செப்புகிறேன் மீனமடா ஆணுக்காச்சு
மயங்காதே காலையிலே மாலைசேரும்
　　மத்யானந் தன்னிலே வொன்றாய்ச் சேரும்
தயங்காமல் திதி பதினைந்தென்பார்கள்
　　சூட்சமுங் காணார்கள் துடர்ந்தேயேறும்
நயங்காணும்புலத்தியனே யிந்த மார்க்கம்
　　ஞானசித்தி யோகசித்தி நல்குந்தானே 11

தானென்ற வண்டபிண்டங் குருவேசெய்ய
　　தவம்வேணும் சிவம்வேணுந் தயவு வேணும்
மானென்ற வல்லி யுமையாளும்வேணும்
　　மதிவேணும் விதிவேணும் வைராக்கியம்வேணும்
நானென்ற வானுவத்தை யொடுக்க வேணும்
　　நலமான சிவயோகம் நாட்ட வேணுந்
தேனென்ற சர்குருவை கார்க்கவேணுஞ்
　　சித்தியாய்ப் பனிரண்டுஞ் சிறக்கமுற்றே 12

அகஸ்தியர் வழலை சூத்திரம் 12 முற்றிற்று.

ரோமரிஷி வழலை சூத்திரம் 3

பொருள்கான வெண்குருவாம் புசுண்டருட பொற்பாதத்தின்
அருள்கான யானுரைத்தே விம்முன்றில்,
பொருள்கான கணபதியுந் தாயுங் கலந்து துணையாகவுமே
லர்ந்து நின்ற பூரணத்தின் மால்காப்பு

கூறுவேன் வழலையுட நேர்மை மைந்தா
　　குறிப்புடனே அகாரமது சிவம் இணங்கனாச்சு
தேரவே உகாரமது சத்தி இணங்கியாச்சு
　　திரமாகயிதுரெண்டுங் கூடினாக்கால் வங்கமாச்சு

நேராக தீக்ஷை பெற்றல் சிங்கியாச்சு
நீறினாலிதினாலே எல்லாமாகும்
சீராக வாதமொடு யோகம் ஞானம்
சித்தி முதலிதை விட்டால் செயிக்காதன்றே.

செயிக்காமல் போனதுவே யேதென்றாக்கால்
செயமில்லா வெடியுப்பு வங்கத்தாலே
செயிக்காமல் அவசரமாய் தனைச்சேர்த்து
சம்பளச்சார் எலுமிச்சம் பழமென்றெண்ணி
செயிக்காமல் சுட்டழிந்து கெட்டார் பாவி
செயிக்கவே அன்னூற்றினிடையே சேர்ந்தால்
செயிக்காமல் போகாது சிங்கியுப்பு
செயமாகும் வங்கு சிங்கு உப்பொன்றாமே.

ஜெயமுள்ள வெடியுப்பு என்பது பூநீரிலுள்ள நாதமென்ற வெடியுப்பு என்பது உறுதி.

ஒன்றான வங்கமது பீயமல்ல
ஒருநூற்றில் யிணங்கியது வெடியுப்பல்ல
நன்றானசிங்கியது ரவிமதியுமாச்சு
நயமான ரவிமதிதான் சத்தி சிவமாச்சு
ரெண்டான சத்திசிவ முவருப்பாச்சு
றெங்கிருந்த பூமியதிலிரண்டு மூன்றாச்சு
உண்டான சோதியிது ஊறுமிதில் கெங்கை
உலகத்திலிதன் பிறவி யொருவரறியாரே.

முப்பூவை 18 சித்தர்களும் மறைத்து பரிபாஷையாக பாடிவிட்டார்கள்.

முப்பு எடுக்கும் விதம், தீட்சை செய்யும் விதம், சேர்க்கும் விதம், கைபாகம் செய்பாகம், புடபாகம், எடைபாகம் அதன் பிறப்பு அடையாளங்கள் ஒரே நூலில் வரிசையாகச் சொல்லாமல் பலநூலில் பலவிதமாய் ஒளித்துப் பாடிவிட்டார்கள். அதினால் வாதம் சித்திக்கவில்லை வாதிகள் தவிக்கிறார்கள். கைபொருளையும் தோத்து மூலிகைதேடி அலைவார் கோடி, முப்பு அதோ இதோவென்று பரிட்சிப்பார் கோடி வைவார் கோடி முப்பூவை ஒன்றையொன்றாக நினைத்து உருகி மாள்வான் வாதி என்று புஜண்டமுனி சொல்வதால், முப்பூவை யார் யார் என்ன வென்று நினைக்கிறார்களோ அதற்கெல்லாம் உரையாகும்படி ஒத்துவரும் படியான சாமர்த்திய வாக்கியங்களால் அமைத்து விட்டார்கள்.

அகஸ்தியர் வழலைசூஸ்திரம் 12-ல் முப்பூவின்கைபாக செய்பாகங்களை குரு மூலமாய்த் தெரிந்து கொள்ளும்படியும் போகர் 60-ல் வழலையை உனக்கு ஆரப்பா சொல்லப்போகிறார் என்றும்

போகர் 60-ல்

சகல மூலிகைகளுக்கும் உப்பு வகை 25, பாஷாணம் 64, உபரசம் 120, நவலோகம் 11, ஆக 220-சரக்குகளும் பலிதமாக வேண்டுமானால் இத்தனைக்கும் ஏகமானது ஒன்று உண்டு அதுதான் வழலை என்கிறார்.

வழலை விளைவு 3+க்கு விபரம்

வழலை : ஜாலமும் வாய்வும் கூடி விந்தென்ற அக்னியை விண்ணிற்றோன்றி பூமியிலே 7-பிறப்பாய் சமாதிநில உப்பாக தேகமென்றும், சீவனென்றும், ஞாயமென்றும் மூன்று விதமாக விளைந்திருக்கிறது அந்த ஒரே வழலை என்கிறார்.

இதுவே சகலத்திற்கும் வித்து; 'நீரப்பா உண்டானால் விளையும் பூமி நீ அறிய வேண்டுமானால், நீர்நெருப்புங்கூடி விளைந்த வழலையை ஆரப்பா உனக்கு சொல்லப்போரார் ஆசானை 12-வருடம் காரே,' என்று போகர் சொல்வதால், அதை நான் உங்களுக்கு தெளிவாய் எடுத்துச் சொல்கிறேன் அப்படிச் சொல்வதும் சாஸ்திரப்படி சரியாயிருக்கும் வழலைதெரியாமல் உலகம் தவிக்கிறது. அக்கவலையை நீக்கவேகடவுள் என்னைப் படைத்திருக்கிறார் இனி உங்கள் கவலைதீர்ந்துவிடும் சுபம்! அப்பு, தேய்வு, வாய்வு 3-ம் கூடியது வழலை.

உ

சிவமயம்

திருவள்ளுவநாயனார் திருவாய் மலர்நதருளிய

நவரத்தின சிந்தாமணி

800+க்கு சுருக்கம் 100+ல்

வைடுரியக்கல் இதுவே சிவம்

சிவவிந்து நஞ்சு ஆண் இவை எனல்

கல்லுவிசித்தர் தரு.

செயநீர்களுக்கு மூலப்பொருள் நஞ்சு

தனந் தனந் தன தனன தன தன

தனந் தனந் தன தனன தன

வனந்தனி லுவர் பூ பூர்க்கும் மதி ரவிமுகம் படகாய் காய்க்கும்
இனம் அறிந்திடீர் புவி பூநீர்மேலிடி விழுந்திடும் மின்னல் சொழித்து மழை
த்னட சொறிந்திடும் புனலூவ ருருகி நிலம்பரிந்தீ ரமுதமது பாய்ந்து
யினந் தெறிந்தெடு மாசி பௌர்ணமியில் நிலை பிறித்திடா தெடுவீர் மனமே தனந். 91

பஞ்சநில மறிதல் அகிலபுவன மடையாளம்

அகிலபுவனமதி லடையாளம் - அஞ்சு - நிலத்திலொருநில மெய்றறிவீராய்,
பகிரண்டமீரேழு பதினாலுலகும் - பரீசோதித்திடவும் பாரில் பரிகைகூடியிந்த
மகிதல மலைகட லிவைநேர் மேற்கு - வடதிசை முதல் தென்றிசை நடுபோக்கு,
செகமிவைதனிலும் றாபட்ரிபாலை திட மிவையுந் தர்மபுரி நிலப்போக்கே தனந் 92

பஞ்சநிலத்தில் கொக்குகளிருக்கும் பாவனை

வைடூரியக்கல் நல்ல வெள்ளை நிறம்

இதை எடுக்க தர்மபுரி திடமான நிலம் என்கிறார்.

பஞ்சநில மிவை தன்னிலுவர் பூ-பூர்க்கும்
கொக்குப்பறவை களிருந்திடும் பாவனையாய்,
வஞ்சமே வெளுர் துய்ய நிறமதுவாம்
வைடூரியமெனுங் கல்லு மவை கேளாய்,
நஞ்சிவை யானுவர் பெண்ணதுவாம்
நாதவிந்திவை கூற தாயும் பிள்ளையதாம்,
கொஞ்சிடுவாரி கூறுமொன்று கூடி வாழ்தல்
நிலமறிந்தெடு மனமே தனந். 93

திருவள்ளுவர் 100-ல் பூநீரிலுள்ள
நஞ்சு இவை - ஆண் - விந்து
இதுவே சிவ உப்பு.
உவர் - பெண் - நாதம்
இதுவே சத்திபூநீர் என்று தெரிந்துகொண்டோம்.

இந்த ஆணே விண்ணுப்பு அதாவது ஆகாயஉப்பென்றும் பெண்ணே மண் உப்பு பிரிதிவி உப்பென்றும் என்னை நீக்கிய அமுரியில் தீட்சை செய்யச் சொல்வதையும் கவனத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.

என்னுரிவை மொழியிலெடுத்து ரைத்தோ
மிவை சொச்சமறிய இந்நூறிதினி லுரைத்தோம்
இனம் கண்ணும் பசுவுமொரு துரையிலும்வாழ்
இதின் கருவுங்குருவறியாதென் செய்வேன்யான்
இனி மண்ணும் விண்ணும் அறிந்தெடுத்துருவாய்
வடிபங்களின மறியாதென்செய்வோம் நாம்
ஒன்றுமிரண்டது மொன்றாய் முடிந்தாலொரு கோடி
வீதமறியலா மனமே தனந் தனந் தன தனன 94

கல்லுளி சித்தர் பாடல்.

இந்தவிதம் புவியறிந்து யெடுப்பாரில்லை
இனமறிந்து உப்பெடுத்துச் சுடுவாரில்லை,
நிந்தனை என்பேரில் குற்றஞ் சொல்வாரில்லை நீ
நினைத்தபடி முடியும் முடிப்பாரில்லை,
மைந்தனே யேலேல சிங்கா புனைபோலில்லை
மாநிலத்தோர்க் குரைப்பதில்லை
மதிப்பாரில்லைசுந்தரமே கல்லுவரு அமுரிதன்னால்
சுத்தி தசதீக்ஷையினால் சுன்னமாச்சே

நஞ்சே சிவவிந்து இதுவே கல்லுப்பு இதை வெளியிட்டால் இடிவிழுந்து தலை தெரித்துப்போகும் என்கிறார்

சுன்னமிவை மித்துரு சத்துருவுமாகுந்
தொட்டசரக்கறு பத்துநாலும் நீறும்,
முன்னமே யானறிந்துரைத்தேன் கீளிபூர்னாலும்,
ஒரு மொழிசொல் லிருமொழியாயுரைக்கும்பாரு,
இம்மொழியிற் பிழையிருந் தாலெரிந்து போடு
இல்லாட்ட லிவ்விதஞ் செய் இதையுரைப்பாராகில்,
மன்னவனே அண்டமிடித்தனேகஞ்சுக்கலாய்
தலைதெரித்து மரணமெய்து மடிவார் தாமே

அமுரி ஐந்தாண்டு உண்டபின்புவரும் அமுரியில் என்னை நீங்கிவிடும். என்னை கக்கிய அமுரியே உதக தைல மகிமை யடையுமெனல்.

அகில புவனங்கவி லலைந்தாலென்ன
அண்டரண்டஞ் சுற்றியுமே திரிந்தாலென்ன
மகிதல மென்றறிந்து கற்பங்கொண்டாலென்ன
வளர்பிறையுந் தேய்பிறையு மறிந்தாலென்ன

சுகியோடறுசுவை யகற்றி யிருந்தாலென்ன
சுத்தசைவக் கிரிகையிலுந் தெளிந்தாலென்ன
முகிவுமுடி யைந்தாண்டு நிருவியுண்டால்
முறிந்து யென்னைகக்கிவிடும் உதகமாமே

முடுகு விருத்தும்

நிருவி யைந்தாண்டு உண்ணயில் பத்தியம் சகலமும் தள்ளுபடி
நிர்விகற்ப சமாதி என்பதற்கு உரை:-
தான்வேறு கடவுள் வேறென்ற விகற்ப உணர்வற்ற யோகநிலை.
அமுரியுப்பு என்னை கழன்று விடுதல்

என்னை கக்கிவிடு மன்னமுண்டு வருமே விதிப்ப துவர்தள்விடு
உண்ணவுன்ன கடுங்காரமேறுங் கறியுப்பகற்றிவிடு மொருபோது
அன்னெடுத்த அறுசுவையகற்றிவிடு யமுது பச்சரிசி யாதலால்
விண்ணு மண்ணுஞ் சிவக்கியானமேதவிர யிருவிநீரமுதிற் கொண்டிடு
புன்னதாகும் புவிநீரகற்றிவிடு போகங்காய் கறிமீன் மாங்கிஷம்
பெண்மயற் புகைநீர் வஸ்த பினிமது பொடியரவதுங் கஞ்சாவிடு
கண்குடத்து நதிநீர் சலமொழியக் கருதொணாது வினைவனமெலாங்
கண்குடத்து சலநீரைவிட்டு மறுகாசினியிற் சலந்தள்ளிடே.

அமுரி அருந்தும்போது கற்பதேகத்திற்கு நேரிடும் வியாதிகளின் விபரமும் பரிகார மருந்துகளும்.

ஐயமீறி யனலால் சுடர்க்கனலு மங்க மாதிதமும் வீசிடில்
அக்கினி யதீதாபத்தோடு சுரமணுகிடிலுந் துய்ய ஆவின்பால்
செய்திடும் மிளகு சீரகங் கரியவேம்புடனும் புளியாரைதான்
சிறுபயருடனுந் தேனுங் கூட்டிடுதல் சீதளம் வருதலுடல்தனில்
பையரத்தையும் வேர்க்கொம்புடன் புரசை பதுமலர் அமுரி நீரினில்
பத்துக்கொன்றாய் குடிநீரருந்திட பறக்குமே சுரமுஞ் சீதளம்
கொய்யும் வாய்வுகுடி கொண்டு கொந்திவிடுங் கூறுஞ்சுக்குசிறுகீரை வேர்
குடிநீர் தன்னமுரிபத்துக் கொன்றாய் அனலிகுறுக்கி சுரசங்கொண்டிடே

பதுமலர் - தாமைப்பு

வெண்பா.

சத்திசிவ உப்பை மேற்படி அமுரியில் 10 - தீட்சை செய்யும் விதம்.

என்னை கழன்று விட்ட அமரி நாழியில் உவர்உப்பு என்ற பூநீர் பலமஞ்சும், சிவஉப்பு என்ற நஞ்சுபலம் 1-ம் கலந்து ரவியில்தீக்ஷைபத்தும் செய்யவேண்டுமெனல்

இந்தவித மருந்த யென்னை கக்குஞ் சுத்தசலம்
அந்த சலத்திலுவரைந்து பலம் – இந்த சலம்
வாரிநீர் நாழி வைடூரிய உப்போர் பலம்
தேறிவிடுந் தீக்ஷைபத்துஞ் செய்யே

முத்துச்சிப்பியையும் இப்படி தசதீக்ஷை செய்து 2-புடமிட சுன்னமாமெனல்

மேற்படி அமுரியே சுத்தஜலம்

செய்கையது முத்துச்சிப்பிக்கேத்து தசதீக்ஷைபுனல்
ஐயமிலாச் சுத்தசல மந்தவுவர் – செய்த விதஞ்
சட்டி தனிலிட்டு மறுசட்டி சிறுசாய்க்கவிய
அட்டியில்லாக் கோழிபுடமாண்டே

நில உப்பென்ற நஞ்சாகிய சிவ உப்பையும், உவருப்பாகிய பூநீர் என்ற சத்தி உப்பையும், பாறை உப்பையும் கொல்லும் வல்லமை சிப்பிச் சுன்னத்திற்குத் தான் உண்டு என்றும் முத்துச்சிப்பித் தோட்டை கடுங்காரமாய் நீற்றும் விதமும் இதைச் சேர்த்து முப்புமுடிக்கும் விதமும் அகஸ்தியர் செந்தூரம் 300-ல் சொல்லப்பட்டிருக்கிறது. இம்முறை சட்டைமுனி 1000-த்திலும் பார்த்துக்கொள்ளலாம் இம்முறையை இந்நூலிலும் பின் சேர்க்கப்படும்.

நஞ்சே வைடூரியக்கல் இதுவே சிவ உப்பு முத்துச்சிப்பி சுன்னத்தை 10-தீட்சை செய்த சத்தி சிவ உப்புக்கு கீழ்மேலிட்டு சுன்னம் செய்யும்விதம்

வாச்சுதிவை சுன்னம் மடக்கு சிறுசாயிரண்டு
ஏச்சுதிவை மடக்கிலிந்த சுன்னம்-வாச்சுதெடு
பேர்பாதியிட்டுப் பின்னும் வைடுரிய உப்பு
ஆரறிவாரோ அறியாரான்டே

சத்தி சிவ உப்பு இதுவே குருசுன்னம்

வைத்திடுமேற் பாதிவைடுரியத்தை மூடிவலு
சுத்திடும்மண் சீலைதிரி மூன்றெனில் காண்-வைத்துவிடு
குக்குடமும் பத்தெருவாங் குமுரிடுமே சுன்னமதாய்
சொக்குஞ் சரக்காதிதமுஞ் சுன்னம்

இந்த குருசுன்னத்தால் அறுபத்திநாலு சரக்கும் சுன்ன பற்பம் செந்தூரம் செய்யும்விதம்

சரக்கு பலமொன்று சற்குருவுமே கழஞ்சு
அரக்கும் உமிநீரதனா லதைகுழைத்துச்-சரக்கதுமேல்
கவசமது புகட்டிக் கதிர்முகமுங்காட்டி
அவுஷதமெனுந் தழைகொண்டாட்டே

ஒரு கழஞ்சி குருச் சுன்னத்தை உமிநீரால் குழைத்து 1-பலம் நீற்றவேண்டிய சரக்கும்பூசி உலர்த்தி எந்தமூலிகையில் எந்த சரக்கு நீருமோ அதை அரைத்துகவசித்து புடமிடச் சொல்கிறார்.

ஆட்டியதின் மேலுமப்பி திரிசீலையுலர்
வாட்டிவிடும் பத்தெருவில் வாலையாம்-ஆட்டிவிடு
எந்தயிலை யெந்த சரக்கெவ்விதமாய் செய்கினுமோ
அந்தயிலை யென்றறியு மாண்டே 105

பூநீரை காய்ச்சும்போது பூநீரிலுள்ள விஷமாகிய நஞ்சு பிரியும் விதம்.

வளையல் செட்டிகள் வளையல் செய்கிறதற்காக பூநீரை மண்பாண்டத்திலிட்டு காளவாய் கட்டி காச்சும்போது இந்த நஞ்சாகிய விஷம் பூநீரிலிருந்து பிரிந்து உரையும் காச்சிய பூநீர் கட்டியை அடுக்கி வைத்திருப்பார்கள் ஐப்பசி கார்த்திகை மழை காலங்களில் அக் கட்டிகளிலிருந்து அந்நஞ்சானது கொழுப்பு மாதிரி வடியும் அதை கத்தியால் வழித்து விற்பனைக்கு வைத்திருப்பார்கள். சேவலை சண்டைக் கட்டுக்கு விடுகிறவர்கள் இதை வாங்கி கத்திக்கு பூசி சாணை பிடித்து பின் அக்கத்தியை சேவல்காலில் கட்டி சண்டைக்கு விடுவார்கள். ஒரேயடியில் எதிரிசேவல் வீரிட்டோடும், கொழுப்பு மாதிரி வடிவதால் இந்தநஞ்சுக்கு வளையல்கொழுப்பு என்று பெயர்.

கொங்கணர் 3000-ம் 2-வது காண்டத்தில் பூநீரிலிருந்து நஞ்சு பிறக்கும் என்பதற்கு ஆதாரம்

தானென்ற மண்ணின்பாண்டந் தனக்குள்ளே பூநீரிட்டு
கானென்று அடுப்பிலேற்றி கடிகியே யெரிக்கும்போது
தேனென்றே யுருகும்போது சேர்ந்ததில் விஷங்கள் கூடி
யானென்ற காளான்போலே யப்பனே யெழும்பும் பாரே

பாரிந்த மண்ணுக்குள்ளே பரவிய விஷந்தானப்பா
காரிந்த வுவர்மண்ணிற்றான் கலந்துடனிருக்கும்போது
கோரிந்த வளையற்குள்ளே கொடியதோர் விஷமென்பார்கள்
தாரிதை வாயிற்போட தனியெட்டிக்காய்போலாமே

தொடாதீர்! கசக்கும் கை கழுவினால் போகாது.
கொடிய நஞ்சு ஜாக்கிரதை!
நஞ்சு இதுவே வளையல் கொழுப்பு

காய்போல கசக்கும் வாயைக் கடிகியே சுத்திபண்ணு
நாய்போல விழுங்கிவிட்டால் நமனுக்கு ஆளாவாய் நீ
பேய் போல காரசார பிள்ளையை யறைந்து சொல்லும்
தாய்போலே துருசுக்குள்ளே தாக்குமுன் வெளுத்துப்போமே.

வெள்ளைதா னிதனைப்போலே வேறொன்றும் பண்ணாதப்பா
தள்ளைதான் காரசாரஞ் சகலமும் வெளுத்துப்போகும்
கொள்ளைதான் துருசுக்குள்ளே கொடிதான சூதஞ்சாகும்
பிள்ளைதான் பிறந்ததென்றாற் பிர்மம்போற் சூதம் பாரே

சூதமுங் கட்டிப்போகுந் துடியான நஞ்சு பட்டால்
பேதமும் விட்டுப்போகும் பேரண்டந்தானேயாகும்
காதமுமோடிப்போக கவனமாங் காயசித்தி
வாதமுங் கிட்டும் கிட்டும் வளையலும் நீறும்பாரே

நீறுமோ சும்மாவென்றால் நீற்றுமோர் விதத்தைக் கேளு
காறுமோ காரம்வீரம் கடியதோர் நஞ்சு மூன்று
தாறுமோ சமனாய்த்தூக்கி யதற்குள்ளே ஆண்நீர் வாரு
தேறுமோ காசிக்குப்பி சேர்த்ததை யப்பிப்போடே

அப்பியே யுலர்ந்த பின்ன ரப்பனே யோட்டிலிட்டு
தப்பியே புடத்தைப்போட தனிக்குப்பி சுன்னமாகும்
ஒப்பிய குப்பிச்சுன்னத்தால் மொன்பது லோகமும் சுன்னம்
கப்பிய பாஷாணங்கள் காட்டுமுன் விறைக்கும் பாரே

நஞ்சும் மூத்தானுப்பும் சேர அண்டரண்டம் குமுரிவிடும்.

பாருநீ வளையற்சுன்னம் மாட்டிடவெல்லாஞ் சாகும்
தாருநீ மூத்தானுப்பிற் றனிவிஷம் போட்டாயானால்
கோருநீ யண்டரண்டங் குமுரிடு மெல்லாம்பாரு
காருநீ சீலைகட்ட கடுஞ்சீலை மென்றுபோமே

மென்றிடுஞ் சீலைதன்னை வெளியிலே போடவேண்டாம்
பன்றிட வேறேசீலை பரிவாக மேலேகட்டு
தின்றிட்டுப் போகப்போகச் சிறந்துநீ சீலைகட்
ஒன்றிட்டு குருவின் வேதை யுரைத்திட்டேன் முன்னேகானே

கொங்கணவர் வாதகாவியம் 3000-ம் முதல் காண்டம்
819-வது பாட்டுமுதல் 823-வது பாட்டுவரை
64 பாஷாணங்களையும் களிம்பு ஊறல் போக்கும்
வல்லமை மனித அமுரி மலத்திற்குண்டென்பதற்கு ஆதாரம்.
இதை விட்டால் வாதம் போச்சாம்.

தவறாதே பாஷாண வூறல்போகச் சாற்றுகிறேன் பிள்ளைகளே சார்ந்துகேளு
தவறாதே மலசலமும் பாண்டத்திலிட்டு கைமுறையாய் வெடியுப்பு சீனிக்காரம்
தவறாதே சாரமுடன் மூன்றும் போட்டு உத்தமனேபாஷாணம் ஊறப்போடு
தவறாதே மண்டலந்தான் ஊறினாக்கால் ஓகோகோ வூறலெல்லாம் மொழிந்து போமே.

ஒழிந்தபின்பு சத்தாகும் செந்தூரமாகு மோடுகிற வேதைக்கும் உறவாய் தாக்கும்
கழிந்தபின்பு நவலோகம் பொன்னுமாகும் காட்டுகிற சாரணைக்காங் குருவுக்காகும்
தெளிந்தபின்பு பாஷாணவகையைக்கேளு செய்தயினம் முப்பத்திரெண்டு ரெண்டு
பொழிந்து பின்பு பூமியிலேபிறந்த பாஷாணங்கேளு புகழாக முப்பத்திரெண்டு தானே.

தானென்ற அறுபத்திநாலு தாதும் சந்தேகந்தீர நன்றாய்ஊறல் போக்கும்
கோனென்ற குருசொல்ல வாதம்பாரு கூட்டுகிற வினங்கண்டு கூட்டியாடு
கானென்ற கடுங்காரம் சாரங்கட்டு கைமுறையாய் லவணத்தை முன்னே கட்டு
வானென்ற மூலத்தை யூன்றிப்பாரு வாதமெல்லாம் வாரேனென்று வருகுந்தானே.

வருகிறதோர் பாஷாணசுத்தி யேதால் வந்ததொன்றால் சொல்லுகிறேன் மக்காள் கேளு
பருகிறதோர் கல்லுப்பு மூலத்தியில் பகையாமல் வெந்தழுஞ்சி அமுரியாச்சு
பெருகிறதோர் புளியெல்லாம் மலமேயாச்சு பேணியிதன் ரெண்டின்பேர் மூத்தானப்பா
அருகிறதோர் சரக்கெல்லாம் பெருகப்பண்ணும் ஆகாதவூறலெல்லாங் கழற்றுந்தானே 822

அமுரியுப்பால் வாதம் சித்தி

சுழற்றிவைக்கும் ஊறலெல்லாங் கறுக்குந்தாது
கைமுறையாய்ச் சரக்கிலுள்ள களங்கம் போக்கும்
உழற்றிவைக்குங் கோபமெல்லா மொடுங்கப் பண்ணும்
உத்தமனே வெகுதூரமோடப்பண்ணும்

மழுற்றிவைக்கும் நோய்ப்போக்கிச் சித்திபண்ணும்
ஆடுகிற தொழில்கவெல்லா மடவாய் வாய்க்கும்
குளத்திலுள்ள நீர்வடித்த மதகு போல
கூறியதோர் மூத்தானுப்பை சேர்க்கா விட்டால் குணமில்லை
வாதமெல்லாம்குளிப்போமே.

கொங்கணவர் 3000-ம் 2-வது காண்டம்
175 முதல் 181-வது பாட்டு வரை

மூத்தானுப்பு செய்யும் விதம்

வாறுகேள் நோயில்லாத வளம்பெறும் சடத்தைப் பார்த்து
தாறுயர் பாண்டத்துள்ளே தனிமலம் விடவுஞ் சொல்லி
மேறுகேளமுரி வார்த்து விளங்கியே குழம்பு செய்து
கூறுகேள் வற்றக் காய்ச்சிகொட்டி நீ கலயம் பாச்சே

பாய்ச்சிய கலயவாய்க்குப் பதையாமல் சில்லுப்போட்டு
ஆச்சிய புடத்தைப்போடி லப்பனே தமர்கீழிட்டு
வோச்சிய தமரின் வாயி லொக்கவோர் கலயம் வைத்து
காய்ச்சிவாய் மூடிமேலே கடுகநீ புடத்தைப் போடே

அமுரிமலத்தைலம்

போட்டிடத் தைலங்கீழே புகல்மேலே சாம்பல் நிற்கும்
ஆட்டிய சாம்பலொன்றி லமுரிதான் பத்துவாரு
கூட்டியே கரைத்துவைத்துக் கொள்ளு நீ மூன்றுநாளும்
நீட்டியே தெளிவை வாங்கி நேர்படக் காய்ச்சிடாயே

காய்ச்சிடு வார்த்து வார்த்து கடுகிய குழம்பை வாங்கி
ஆச்சிடு இணங்கன் சீனம் அதனோடு வீரம் பூரம்
மோச்சிய சாரத்தோடு முருகிய துருசுச் சுன்னந்
தாச்சிய ஆறுங்கேளு தனித்தனி காசுப் போடே

போட்டுநீ முன்தைலம்வார்த்துப் புணர்ச்சியா யரைத்துக்கொண்டு
மூட்டு நீ குழம்பில் கலந்து மூதண்ட ரவியில் வைக்க
வாட்டிய பீங்கான் கிண்ணி யதற்குள்ளே யிதனை வார்த்து
கோட்டிநீ ரவியில் வைக்க குழம்பது மூத்தானாமே

ஆமிதை மூத்தானென்றே யறைந்திட்ட நாமங்கேளு
நாமிது உண்ட உப்பு தனிப்புளி ரெண்டுஞ் சென்று
காமிது நீரிலுப்பாய் கடுமலம் புளியுமா
வேமிது மூலத்தீயில் வெந்துமே பிறந்தவாறே

அமுரிமலத்தை இகழ்ச்சியாக நினைத்து விலக்கப்பட்ட பொருள் எனக்கருதி மருந்துகளில் சேர்க்காவிட்டால் வாதம் நிலையாதெனல்

பிறந்திட்ட மகிமையாலே பேராச்சு மூத்தானென்று
அறிந்திதை யெடுக்கமாட்டா ரப்பனே நிஷித்த மென்பார்
பறிந்திடும் வாதந்தானும் பார்த்திதை தூஷித்தோர்க்கு
முறிந்திடும் நூல்கவெல்லா முற்றிலுங் கிடையாதென்றே

மூத்தானுப்பு செய்யும் விதமும் அதில் குழித்தைலம் இறக்கும் விதமும் - உரை

மூத்தானுப்பு என்பது:- மனிதர் மலம் 4-படியை சிறுநீர் 16-படியில் கரைத்து சுண்டவைத்து குழம்பை வற்றக்காய்ச்சி மூடி 3-சீலை மண் செய்து உலர்த்தி அடிப்பானைத் தூரில் சிறு தமர்களிட்டு அதில் சிறுகுச்சிகள் சொருகி அதன்மேல் பீங்கான் மூடி 3-சீலைமண் செய்துலர்த்தி, பீங்கான் மறைய குழிவெட்டி சேறாக்கி அதில் பீங்கானை வைத்து நெருப்பில் தைலம் சுண்டவிடாமல் பானையைச் சுற்றிலும் 3- அங்குல உயரம் மண்போட்டு அமுக்கி 50 எருவை மேலே அடுக்கி புடமிட பீங்கானில் குழித்தைல மிறங்கியிருக்கும். சாம்பல் கருகியிருந்தால் வேறே சட்டியிலிட்டு மூடி சீலைசெய்து உலர்த்தி 100-எருவில் புடமிட வெள்ளையாயிருக்கும். (வெள்ளையாகாவிடில் அதிலிருக்கும் உப்பு பிரிந்து அமுரியில் கலந்து வராது.)

இந்தச் சாம்பல் 1-படியை 10-படி அமுரியில் கரைத்து 3-நாள் கலக்கிகலக்கி 4-ம் நாள் தெளிவிருத்து காய்ச்சிகுழம்பாக்கி வெடியுப்பு சீனிக்காரம், வீரம், பச்சைக் கற்பூறம், நவச்சாரம், துருசுச் சுன்னம், வகைக்கு ஒரு காசிடைபோட்டு மேற்படி குழித்தைலம் வார்த்தரைத்து முன்காய்ச்சிய அமுரிக்குழம்பையும் சேர்த்தரைத்து 1-பீங்கானிலிட்டு ரவியில் உலர்த்தி எடுத்த உப்புக்கு மூத்தானுப்பு என்று பெயர். (இதை சுன்னம் செய்யும்விதம் பின் எழுதப்படும்.)

மூத்தானுப்பின்சுன்னம் சேர்க்காவிடில் சரக்குகள் கட்டாது தங்கமாகாது. சவுக்காரச் சுன்னம் விட்டால் சகல சுன்னங்களும் மண்ணுக்காகா

வென்றிருப்பதால் சவுக்கரச் சுன்னத்தால் மூத்தானுப்பை சுன்னம் செய்ய வேண்டும் என்பதை கவனத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.

வீரச்சுன்னம் விட்டால் தங்கம் நீறாது அதில் வேதையுமில்லை.

கொங்கணர் 3000-ம் 3-வது காண்டம் 879-வது பாட்டு

தானென்ற மூத்தானிற் சுன்னந்தப்பிற்
சாரமில்லை கட்டாது தங்கமாக
வானென்ற சவுக்காரச் சுன்னம் போனால்
வகைவகையாய்ச் சுன்னமெல்லாம் மண்ணுக்காக
கோனென்ற துரிசியுட சுன்னம் போனால்
கொடுசிங்கி யொன்றுமில்லை கூழுக்கொக்கும்
வேனென்ற வீரத்தின் சுன்னம்போனால்
வேதைக்கு தங்கநீர் விரைந்தாகாதே 879

திராவகத்தில் சரக்குகளை அரைத்துப் புடமிடாவிடில் வேகாது வெளுக்காது.

ஆகாது செந்தூரங் கெந்திவிட்டால்
அப்பனே சூதம்விட்டால் வர்ணம்போச்சு
போகாது தூரமப்பா உபரசத்தை விட்டால்,
போக்கிலே தாயைவிட்டால் புடம் நில்லாது
வேகாது சரக்கெல்லாந் திராவகத்தை விட்டால்,
வெகுசரக்கு மெழுகில்லை செயநீர் விட்டால்
ஆகாது உப்பைவிட்டால் சுன்னமில்லை,
வாசிவிட்டால் குளிகை கொண்டுமருவாதென்னே 880
(தாய் என்பது தங்கம்)

மருவாத பூசைவிட்டால் வாதமில்லை
மனமான பொருளை விட்டால் ஞானமில்லை
தருவான தருமம் விட்டால் மோட்சமில்லை
தாயைவிட்டால் வித்தைக்குச் சாரமில்லை
கருவான நூலைவிட்டா லொன்றுமில்லை
கட்டுகிறதற்கு குருவை விட்டால் கருவொன்றில்லை
திருவான மூலம் விட்டால் சிவனுமில்லை
தேகத்தின் சித்திவிட்டால் செடம் நில்லாதே. 881

அமுரியின் மகிமை

கொங்கணவர் 3000-ம் 3-வது காண்டம் 948-வது பாட்டில் 8 வகை வேதையும் ஆகுமெனல், வாதத்துக்கு இதுவே மரமாம்

பாரப்பா அமுரியுட குருவைச் சொல்வேன்
பணபேதி சினபேதி சத்தபேதி
நேரப்பா பரிசமொடு தீபபேதி
நிலையாத தூமமொடு லேபபேதி
வேரப்பா வாசனையாம் பேதியோடு விளங்கியதோர்

வாதமென்ற விருட்சத்துக்குவிந்து அமுரி உப்பப்பா, நாதம் மலம் புளியப்பா

ஆரப்பா அறிவார்கள் சித்தரல்லால்

அறிந்தவர்கள் வாமி யென்றயானை தானே

(என்றுசொல்லப்பட்டிருக்கிறது.)

வஸ்துஉப்பு செய்யும்விதம் 899 முதல் 983 பாட்டுவரை யிருப்பதால் பின் அச்சிடப்படும்

பணபேதி என்பது–பணர்–மரக்கிளைபோல் பிரிவது இதுவே சந்தானபேதி.

சினபேதி–சினம்–கோபம் கோபப்பார்வை இதுவேதெரிசனபேதி.

லேபபேதி–லேபம்–கலவைக்கு தயாரானது இதுவே சேர்வை பேதி.

சட்டைமுனி வாதகாவியம் 1000-த்தில் 107-வது பாட்டு

8-வகை வேதைகளின் பெயர்

1. பரிசபேதி–தொட்டால் பழுப்பது
2. சத்தபேதி–7-வகை காற்றினும் ஓசை கேட்டதும் பழுப்பது
3. தூமபேதி–புகைப்பட்டதும் பழுப்பது
4. தீபபேதி–தீபச்சுடரில் வாட்ட பழுப்பது
5. சேர்வைபேதி–வேதைக்குச் செய்த மருந்துகள் நவலோகங்களிலும் கலந்து உறவாகி ரேகித்துப் பழுப்பது
6. தெரிசனபேதி–பார்த்ததும் பழுப்பது
7. வாசனைபேதி–வேதைக்குச் செய்த மருந்தின் வாசம் கண்டதும் பழுப்பது
8. சந்தானபேதி–சந்தானம் என்பது சந்ததி அதாவது புத்திர உற்பத்தியை வரிசையா யடைதல், பிண்டத்திலுள்ள நாதவிந்தால் புத்தர உற்பத்தி உண்டாகிறது. அதுபோல் அண்டத்திலுள்ள நாதவிந்தால் அமைந்தது முப்பு வரிசையாய் ஜெனிக்கும் புத்திர உற்பத்தி போல் வேதையும் சகலசரக்குகளிலும் உண்டாக்கும் வல்லமையுடையது முப்பு. இந்த முப்புவானது எட்டுவகையாய் வேதிக்கும் வல்லமையைஅடக்கிக்கொண்டிருக்கிறது. அதில் ஒன்று சந்தானபேதி என்பது. இன்னும் வேதித்த ஒன்றைத் தொந்திக்கத் தொந்திக்க பழுத்துக்கொண்டே போவது - அதற்கு எல்லையே இல்லை.

(நிற்கும்–முடிவு–இல்லாத இடம்)

இன்னும்–சந்து–ஆன–பேதி–காரியம் தங்கம் இச்த இரண்டைத் தவிர மற்ற லோகங்கள் எல்லாம் பொரையும் அணுக்கள் நிறைந்த சந்துகளையுமுடையது அச்சந்துகளைநெருக்கி இறுக்கி வேதிக்கச் செய்வது சந்தானபேதி எனவும் உரை விளங்குகிறது.

போகர் 7000-த்திலும் வழலையை

ஒருசொல்லும் தவறாமல் மறையாமல்

சொல்லியிருப்பதாய் சொல்வதைக் கவனியுங்கள்.

மாளாதே யிருக்கவல்லோ வழலைதன்னை
மறையாமற் சொல்லிவிட்டே னேழாயிரத்தில்
கோளான சீஷருக்கு நூலீயவேண்டாங்
கொடுத்தாக்கால் ரவிகோடி நரகமெய்தும்
நாளான யெந்நூலின் வழலைதன்னை
சாற்றினே னொருசொல்லுந் தவறில்லாமல்
நாளான அம்பரத்துக்கொப்பாய்ச் சொன்னேன்
நாதாக்கள் பதமறியச் சொன்னேன் காணே.

சித்தர்கள் வழலையைச் சொல்லவில்லை என்றும் போகர் பூநீரிலுள்ள விஷமாகிய வளையல் நஞ்சு வழலை

என்று 7000-ம் 2-ங்காண்டம் 429, 437-ல் சொல்வதை கவனியுங்கள்

வழலையென்ற வழலையதைச் சொல்லக்கேளு
வளமாக நாதாக்கள் மறைத்து வைத்தார்
வழலையென்று சுந்தரனார் பாடியதும் வழலையல்ல
வரிஷியுஞ் சொன்னதுவும் வழலையல்ல
வழலையென்றால் மச்சமுனி வழலையல்ல
வன்பான சட்டமுனி வழலையல்ல
வழலையென்றால் கோரக்கர் வழலையல்ல
வால்மீகர் பாடினதும் வீழலையாமே.

ஆமேதான் கொங்கணரும் வழலையல்ல
அப்பனே இடைக்காட்டார் வழலையல்ல,
தாமேதான் டமரகனார் வழலையல்ல
தாக்கான சிவவாக்கியர் வழலையல்ல,
வேமேதான் சூதமுனி வழலையல்ல
மிக்கான புஜண்டரும் வழலையல்ல,
நாமேதான் சொன்னபடி வழலை மார்க்கம்,
மற்றுமுள்ள சித்தரெல்லாம் பாடினாரே

வழலையை போகர் காரசாரம் என்று பாடியிருப்பதாய் அகஸ்தியர் பரிபாஷை 500-ல் சொல்லப்பட்டிருக்கிறது அதுபோல் வழலையை காரசாரமென்றே சகல சித்தர்களும் பாடினார்களாம். கொங்கணர் நிமிளை என்று பாடினாராம்.

பாடினார் பல்நூலில் சொன்ன சித்தர்
பழக்கமுடன் சொல்லவில்லை மறைத்துப்போட்டார்.
பாடினார் பலபலவாந் துறைகள் சொன்னார்
பக்குவங்கள் யாதொன்றும் கூறவில்லை,

பாடினாரவரவர்கள் நூல்கள் தன்னில்
பலபெயர்கள் மறைப்புகளோ காணொணாது,
பாடினார் துறைமுகமுஞ் சொல்லவில்லை
பார்த்துமே கெட்டலைந்தார் கோடிப்பேரே.

கோடான கோடிப்பேர் நூலைப்பார்த்து
குவலயத்தில் கெட்டுவிட்டார் சொல்லப் போமோ,
கோடான கோடிப்பேர் குறுக்குப் பாதை
குணமுடனே செய்யாமல் மாண்டுப் போனார்,
கோடான கோடிப்பேர் காப்பேடு தன்வி
குடிகெட்டுப் போனார்கள் கணக்கே யில்லை,
கோடான கோடிப்பேர் கடையேடு பார்த்து
குலைநாச மடைந்தவர்கள் கோடியாமே.

கோடியாந் தீட்சைவிதி யறியமாட்டார்
கோலமுடனுப்பெடுக்கும் வகையுங்காணார்
தேடியதோர் பொருளையெலாஞ் சிலவழித்து
தேசம் விட்டு தேசம்போய் தெரியாமற்றான்,
பாடிய சாத்திரத்தைப் பாடிக்கொண்டு
பத்துபேரெட்டு பேரொன்றாய்க் கூடி,
நீடியே காலமது தெரியாமற்றான்
நிச்சயமாய் பூவெடுக்கப்போவார் பாரே.

போவாரே கானகமெல்லாந் திரிந்து
பூக்காத நிலமெல்லாம் பூர்க்குமென்று,
ஆவலுடன் மலையோரம் பாறை பார்த்து
வதற்கப்பால் காதவழி சென்று, தாமும்,
காவலுடன் நடுச்சாம வேளை தன்னில்
கண்ணிருட்டு முன்பாக மதிநேரத்தில்,
காவலுடன் பலியிட்டுயெழுத்தை யோதி
சமாதிகட்டித் தானிருந்தார் பலபேர்தாமே.

பலபேராம் சாத்திரத்தைக் கையிலேந்தி
காப்பேடும் கடையேடுந் தெரியாமற்றான்,
சிலபேரும் கண்கெட்டு முழுதும் பார்த்து
சூட்சாதி சூட்சமிட மறியாமற்றான்,
மலமுடனே மூலபுளிமுப்பூவென்று
மதிமயங்கித் தெரியாமல் தியங்கியேதான்
சலமுடனே கண்ணீருமாய் காலமது
தான் கழித்தார் கசடராமே.

விஷமுள்ள பூநீரில் வளையல் செய்வார்கள் என்பதற்கு ஆதாரம்.

கசடகற்றி புத்தியுள்ள விளைஞரானால்
 காசினியி லென்னூலைக் கருதிப்பார்ப்பார்,
நிசமுடைய சாத்திரமெல்லா மகற்றி
 நேரில்லா சாத்திரங்கள் நீசமென்றெண்ணி,
விசமுடைய முப்பூவின் மண்ணினாலே
 வேண்டியதோர் வளையல்களுஞ் செய்வார் கோடி,
குசமுடைய வளையல்க்கார் காய்ச்சுமண்ணில்
 கூறவொண்ணா நஞ்சதுவு மிதக்கும் பாரே.

அண்டமாகிய சீவஉப்பை எடுக்கத் தெரியாவிடில்
சிவமாகிய வளையல் நஞ்சை முப்பூவாக முடித்தால்
புகைச்சரக்குகளை எல்லாம் ஓடாமல் கட்டி நிற்கசெய்யும்
வேதை இதிலாகும் விழலாகப்போகாது என்று போகர் 7000-ம்
2-ங் காண்டத்தில் சொல்வதை கவனியுங்கள்

பாரே தானென்னூலைப் பாராவிட்டால்
 பாங்கான முப்பூவும் காணாவிட்டால்,
சீரேதான் வளையற்கார் நஞ்சானாலுந்
 தீவீரமாய் தானெடுத்துப் பூமுடித்தால்,
நேரேதான் சரக்கெல்லாங் கட்டலாகும்
 நிலையாத சரக்கையெல்லாம் நிற்கப்பண்ணும்,
நேரேதான் வேதையிதிலாடும் வித்தை
 விழலாகப் போகாது வேண்டிச்செய்யே.

18-பேர் மறைத்த உப்பை வெளியாய்ச் சொன்னேன்

என்று போகர் சொல்வதை கவனியுங்கள்.

செய்யவே யென்னூலே மூாயிரம்பார்
 செகத்திலே மறைத்ததெல்லாம் வெளியாய்ச்சொன்னேன்,
பையவே சத்தகாண்டம் பார்த்தாயானால்
 பாருலகில் நீயுமொரு சித்தனாவாய்,
தொய்யவே பலபேர்கள் முனிவரானோர்
 தொல்லுலகில் பாடிவைத்தார் நூல்கள் பேதம்,
மெய்யவே பலதுறைகள் பார்க்கவேண்டும்
 மேதினியில் இந்நூல்பார்த் தோர் சித்தராமே. 438

சித்தர்களி மென்னூல்போலாருஞ் சொல்லார்
 செகத்தினிலேகோடான கோடி நூல்கள்

பத்தியுடனா னுரைத்தேன் மண்டலத்தில்
பாகமுடன் யென்னூலைப் பார்த்த பேர்கள்
முத்தியுடன் காண்பதற்கு வழியுங் காண்பார்
மூவுலகும் கிட்டவல்லோ கதியுங் காண்பார்
சத்தியுடன் பராபரியைத் தொழுதுபோற்றி
சட்டமுடன் சத்தகாண்டம் பாடினேனே.

போகர் பாடிய நூல் தொகுப்பு

பாடினேன் சத்தகாண்ட மேழுகாண்டம்
பாங்கான யெழுநூறுவொன்று சொன்னேன்,
பாடினே னென்னூறும் வைப்புச் சொன்னேன்
பாங்கான பலதிரட்டு வெழுநூறும் சொன்னேன்
பாடினேன் முன்னூறு வொன்று சொன்னேன்
பதிவான ஞானமொரு நூறு சொன்னேன்,
பாடினேன் கோடசமு மெட்டுஞ் சொன்னேன்
பகரவே நீ·ண்டு பெருநூலதாமே.

நுலான வாயிருத்திருநூ ¸ சொன்னேன்
நுணக்கமாஞ்சொச் சங்கஎனேகஞ் சொன்னேன்
பாலானவைனூறு கருக்கிடையுஞ் சொன்னேன்
பாலகனேயென்னூல் போலாருஞ் சொல்லார்
சேலான கருக்கிடையுஞ் சொன்னேன்
சிறப்பான சோதிடமு முன்னூறு சொன்னேன்
மூலான காலாங்கி நாயர் தம்மை
முடிவணங்கி யடியேனு மொழிந்திட்டேனே. 341

போகர் 7000-த்தில் வளையல் நஞ்சை முப்புவாக முடிக்க முறை சொல்லவில்லை

அகஸ்தியர் 8000-த்தில் தோணாத கருவெல்லாம் தோனும்தோனும் என்றும் மறைத்த சகல ரகசியங்களும் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறார் என்றும் போகர் சொல்வதால் அந்நூலை அராய்வோம். அகஸ்தியர் 8000-த்தில் வளையல் நஞ்சை சுன்னம் செய்யும்விதம் சொல்லப்பட்டிருக்கிறது.

திருவள்ளுவர்கவு⋯மணி 100-ல்
பூமியிலிருந்து எடுத்த நஞ்சை முப்புவாகமுடிக்கும்
விதம் சொல்லப்பட்டிருக்கிறது.

போகர் பலதிரட்டு 700-ல் மனித அமுரியின் பெருமையைப்பற்றி சொல்வதை கவனியுங்கள் அகாரகற்பம் அக்ஷரம் தன்னுக்குள் அமிழ்தம்

தவசமுடன் சிவயோகிசித்தரெல்லாம் என்னைவணங்கி யிம்முறைகள் கேட்டுச் செய்வார், தவசியெனும் என் மகனே நீ இக்கருவையார்க்கும் தாராதே தரணிதனில் வைத்தியஞ் செய்யே.

செய்யவே பதினெட்டுக் குட்டம் சூலை
தீரவே சிறுநீரில் சூட்சங்கேளு,
பையவே பேய்த்தேற்றான் வேரைவாங்கி
பாத்திரந்தானொன்று செய்து வைத்துக்கொண்டு,
நையவே காலைதனி லெழுந்திருந்து
நன்மையுடன் சிறுநீரிலொரு சேரை வாங்கி,
உய்யவே கடுக்காய்த்தூள் திருகடி யொன்றிட்டு
உத்தமனே தெளிவிருந்து நாளொன்று மண்டலந்தான் கொள்ளே 472

வாசிவா என்று காலை மாலை சாப்பிடவும்

குஷ்டம் தீரும் வாசி நிலைத்து நிற்கும்

மண்டலந் தானிப்படியே கொள்ளும்போது
மைந்தனே சாபத்தை நிவர்த்திசெய்நீ
மண்டலந்தான் வாசியங்கே திறமதாகி
வலுக்குமடா விந்துவிலே மருவிநிற்கு
மண்டலந்தா லிந்தவண்ணம் கொள்ளும்போது
மாசற்ற வாசிவா வென்று கொள்ளு
மண்டலந்தான் சுழிமுனைக்கண் நாடிப்பாரு
மகிமையுள்ள காயசித்தி யாகும்பாரே.

பாரே நீ குட்டமொடு குறைநோய் கட்டி
பருங்கிரந்தி யரையாப்புச் சூலை குன்மம்
பாரே நீ சிரங்கு சொறி கரப்பான் போகும்
அழுகண்ணி வெடிசூலையாறாப் பண்ணும்
சேரேசீர் புண் புரைகள் திமிர் சூலை
சேத்தமம் மதகரி தழுதனையுமுறல்
காரே நீ வாய்வோடு கர்மரோகங்கள்
காணாதே யோடுமடா கண்டுபாரே.

அமுரியினால் சர்வ நோயெல்லாம் தீரும்
உன்னுக்குள் அவிழ்தம் இருக்க
காட்டினில் ஏன் அலைகிறாய்

ஒருவருக்கு மிக்கருவை புரைக்கொணாது.

கண்டுபார் சர்வநோயெல்லாந் தீரும்
கனகமாந் தேகமது கற்ப காலம்

உண்டுவர காயசித்தி சித்தனாவாய்
ஒருவருக்கு மிக்கருவை புரைக்கொணாது
உண்டுபார் தன்னுக்குள் அவிழ்தமெல்லாம்
வீட்டில் வைத்துக் காட்டினிலே பலைகின்றார்கள்
பண்டுள்ள நோய்தீர அவிழ்தமெங்கே
பகர்கற்பக் கருவெங்கே கண்டிடீரே.

உட்கரு என்பது விந்து

சட்டைமுனி வாதகாவியம் 1000-த்தில் உட்கரு என்பது உதகம்

கருவான பஞ்சபூதச் சரக்குமெங்கே
கல்லான அண்டமெங்கே வீரமெங்கே
கருவான வழலையெங்கே முப்புவெங்கே
கரைகாணாக் கருவி புரக்கருவியெங்கே
கருவான அண்டரண்ட பிண்டமெங்கே
காரமெங்கே சாரமெங்கே பூரமெங்கே
கருவான மனமெங்கே பரமெங்கே
காயத்தின் கருவெங்கே கண்டுபாரே.

பாரப்பா பஞ்சமெனுந் தேவரெங்கே
பரையெங்கே சிவமெங்கே யொவ்தானெங்கே
பாரப்பா பரனெங்கே பதமெங்கே
பகருஅமுதமெங்கே ரவிமதியுமெங்கே
பாரப்பா வாசியெங்கே கலைதானெங்கே
பழுதில்லா ஞானமெங்கே யோகமெங்கே
பாரப்பா சரிகையெங்கே கிரிகையெங்கே
பகராதி அனாதி வஸ்து குறித்துப்பாரே.

தன்னுக்குள் சத்திசிவம் நாதம் விந்து அண்டம் பிண்டம் என்பது

இடைகலையாகிய சந்திரகலை 16-ம் நாதம் பிங்கலையாகிய சூரியகலை 12-ம் விந்து சுழிமுனைகலை 4-ம் அக்கினி.

இடைகலையில் பெண்ருபமும், பிங்கலையில் ஆண்ருபமும் நடப்பதாக அகஸ்தியர் செந்தூரம் 300-ல் சொல்லப்பட்டிருக்கிறது.

குறித்துப் பாரிவையெல்லாந் தன்னுக்குள்ளே
குறியறியாதுலகத்தில் திரிந்தார் கெட்டார்
குறித்துநின்ற தன்னையுந்தா னறியமாட்டார்
குறியறிந்தோர் சிவயோகி சித்தராவார்

குறித்து நின்ற நாதவிந்தால் எல்லாமாச்சு
கோடானகோடி சித்து மாடலாச்சு
குறித்து நின்ற விந்துநிலை காணார்காணார்
கூர்ந்துவரும் நோய்களை நீ யோர்ந்துகேளே.

கேளப்பா நாதத்தில் விந்துபுக்கில்
கெடியுட நாலாயிரங்கனிதமாச்சு
தேளப்பா கொட்டியதோர் விடங்கள் போலும்
தசநாடி யெழுபத் தீராயிரத்தில்
வேளப்பா அடங்கிநின்ற தேகமெல்லாம்
விளைந்ததடா அவரவர்கள் வினையாற்கானுஞ்
சூளப்பா நோய் விளைந்த விபரம்பாரு
சுழுனை பற்றிநின்ற நிலை நாடிப்பாரே.

பாரேதான் சகலகலை யறிந்தாற்போல
பண்டிதன் நானென்று பழிபாவஞ்செய்வான்
கூரான நோயென்பான் பேய்தானென்பான்
குலதெய்வக் குறையென்பான் வாதமென்பான்
ஆரான நோயறிந்து அவிழ்தஞ் செய்யான்
அகப்பட்ட மருந்தையெல்லாம் கொடுத்துப் பார்த்து
தீராத நோயென்று சேரத் தூரஞ்
சென்றிடுவான் அறிவுகெட்ட கசடன்பாரே.

பாரேநீ வாதியென்றாலரபத்தை தீர்ப்பான்
பலபலவாம் நோயறிந்து பாகம் செய்வான்
கூரேதான் சகலசித்துமாடச் செய்வான்
குறிப்பறிந்துவாதமுறை செய்வான்பாரு
ஆரேநீ மனமடங்கிப் போதம்பார்த்து
அறிவு குருபோதத்தில் அடங்கிநின்று
வாரே நீ குருபதத்திலடுத்தடுத்து
மாயியெனு மாயிபதம் வணங்குவாயே. (போகர்700)

மனித மூத்திரத்தில் அடியுல்கண்ட வஸ்துக்கள் அடங்கியிருப்பதாக ரசாயன பரிக்ஷையால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதாம்.

அமுரியிலுள்ள வஸ்துக்கள்

கோழை 3-பங்கும், அமுரிப்புளிப்பு 4-பங்கும், அமுரியுப்பு 5-பங்கும், கிரியாதியுப்பு 6-பங்கும், வருணகாரி வஸ்துக்கள் 7-பங்கும் தங்கச்சத்துள்ள உப்பு 8-பங்கும், கந்தககப்புளிப்பு 9-பங்கும், கறியுப்பு சுமார் 10-பங்கும், காந்தச்சத்து 11-பங்கும், தீமுறுகல்ச் சத்து 11 1/8 பங்கும், சுண்ணாம்பு 12-பங்கும், சவுட்டுப்புச் சத்து 13-பங்கும், அடங்கியிருக்கிறதாம்.

அமுரியில் நஞ்சு இருக்கிறது

என்பதற்கு சட்டம் திருவள்ளுவர் பஞ்சரத்தினம் 500-ல்
109-வது பாட்டு

ஆலகால விஷமமுரி அதுதான் பானமும்
சீலமாக அதன் நஞ்சு நீக்கியே தெளிவதாய்
காலமீதி லனுதினம் காலைமாலை நீ உண்டிடில்
ஓலமிட்டு மறலியோடு மோடுமீ துண்மையே

இந்த நஞ்சை நீக்கவே கடுக்காய்த்தூளிட்டு தெளிவை

சாப்பிட போகர் 700-ல் சொல்லியிருக்கிறார்.

ஒருசேரை அமுரியில் திரிகடி அளவு கடுக்காய்த் தூவிட்டு 10-நிமிஷம் வைத்திருந்தால் அமுரியிலுள்ள என்னையும் நஞ்சையும் கடுக்காய் கிரகித்துக்கொண்டு கீழே தங்கிவிடும் தெளிவிருத்துச் சாப்பிடவேண்டும்.

(திரிகடி என்பது 3-விரல்களால் எடுக்கும் அளவு)

(சேரை என்பது ஒரு உள்ளங்கை அளவு)

கடுக்காயின் மகிமை

விந்தை கட்டவேண்டுமானால் கடுக்காயை 3-மாதம் சாப்பிட விந்து கட்டிவிடும். 12-மாதத்திற்கும் கடுக்காய் சாப்பிட 12-வித அனுபானமுண்டு.

யோகிகட்கு அவசியமெனல்

வாசியை ரேசகம் பூரகம் கும்பகம் செய்து ஸ்தம்பித்து நெடுநேரம் நிறுத்த வேண்டுமானால் சரீரத்துக்கு பலம்வேண்டும், விந்தை செலவழித்தால் சரீரத்துக்கு பலமில்லை, ஆகையால் யோகப்பியாசிகள் விந்தைக்கட்ட வேண்டியது அவசியமாகிறது, அதற்காக அவர்கள் கடுக்காயை சாப்பிடவேண்டும்.

தாதுகட்ட

குடும்ப வாழக்கைக்குரியவர்கள் விதைநீக்கிய தனி கடுக்காய்த் தூளை 7-தரம் வடி கட்டி காலை மாலை திருகடியளவு பசுநெய்யில் காலை 6-மணிக்கு சாப்பிட்டு 10-மணிக்கு சாதம் சாப்பிடவும் மாலை, 4-மணிக்கு சாப்பிட்டு 8-மணிக்கு சாதம் சாப்பிடவும் 1-மண்டலம் சாப்பிட்டால் பழைய மலங்களெல்லாம் வெளியேறிவிடும். பசி தீபனம் அதிகப்படும் நாடி நரம்புகளுக்கு முறுக்கேற்றும் தாதை கட்டிவிடும் விந்து மணியாக விளைந்து இறுகிவிடும் இது அனுபவம்.

ரசபஸ்பத்தை கடுக்காய்த்தூளில் வைத்து பசுநெய்யில் குழப்பி 2-வது மண்டலம் சாப்பிட்டுப் பாருங்கள் அதன் பெருமையை எழுதமுடியாது. தாதுபுஷ்டிக்கு இதற்குமேல் ஒரு மருந்தில்லை இது அனுபவம் பத்தியம் கோழி, மீன், கருவாடு, புளி ஆகாது.

கற்பத்துக்கும் இப்படி விடாது 12-மாதம் கடுக்காயில் ரசபஸ்பம் சேர்த்துச்சாப்பிடலாம் அதன்மகிமையை யாரால்எடுத்துரைக்க முடியும். பத்தியம் கடுகு, நல்லெண்ணை,

புளி, புகையிலை, போகம், கஞ்சா அபின், சாராயம், கள், பிராந்தி, சுண்ணாம்பு, காற்று வெயில்கோழி, மீன், கருவாடு ஆகாது. இப்படிச் சாப்பிட்டால் நெடுநேரம் வாசியை மூலாதாரத்தில் நிறுத்த சடம் தாங்குகிறது.

போகர் காரசாரத்துறை 60-ல் 55-வது பாட்டில் கற்பத்துக்கடுத்த மூலி கடுக்காயும் ரசமுமல்லால் கானேனொன்றும் என்றும்

பூமியிலே அனந்தம் மூலி இருப்பினும் ரசத்தின் முன்னே நிற்காது என்றும் ஆனால் ரசத்தைக் கட்டவேண்டும் எப்படி கட்டுவது! பண்டுவைத்த புதையலுப்பால் சூதம் சாகும் சாகும் பாலகனே 2-ங் காண்டத்தைப் பாரே என்று சொல்வதாலும் போகர் 7000-ம் 2-ங் காண்டத்திலுள்ள புதையலுப்பு என்ன என்பதை கண்டுபிடித்து பின் எழுதப்படும்.

வாத முப்பு வைத்திய முப்பு யோகமுப்பு ஞானமுப்பு ஆக 4-ம் பின் விரிவாய் எழுதப்படும்

பூநீரில் நஞ்சு இருக்கிறது

என்பதற்கு ஆதாரம்
திருவள்ளுவ நாயனார் பஞ்சரத்தினம் 500-ல்
182-வது பாட்டில் சொல்வதை கவனியுங்கள்.

பூமிநாதமே நஞ்சு

பஞ்சபூத மொன்றுகூறல் பவிங்குபோ லதீதமாம்
விஞ்சை யுப்பென்றே வழங்கி விளையும் பூமிநாதமே
நஞ்சதாகும் நாதநீரில் நாட்டுதோஷங் காற்றினில்
பஞ்சுபோல் பறந்துபோகும் பாட்டைச்சொன்னே னாண்டையே

நாதநீரில் வளையல் நஞ்சின் குணம்

நீங்கும் என்பதற்கு பதஞ்சலி முனிவரும்
யூகிமுனியும் சொல்வதை கவனியுங்கள்.

அஞ்சு பஞ்சபூதம தாகிய வுப்பது
மிஞ்சு தீக்கி வெறுங்குகை யாய்வீடுந்
துஞ்சுமாஞ் சிவம், சத்தியின் தீக்ஷையால்
துஞ்சிடா தது தோஷமு மில்லையே
ஆழி கடைந்தமுத மாக்கறியா ரச்சலத்தில்
ஊழிபர லுப்பெடுத்து ஊட்டறியார்—ஏழுசட்டை
வாங்கிரசங் கட்டறியார் வாதிகடாம் வையகத்தில்
தூங்கிவீழு வாரெனவே சொல்

நாதநீர் என்பது சத்தி ஜெயநீர்

நாதநீர் என்பது தீட்டமல்ல, நாதம் என்று சத்திக்குப் பேர். சத்திக்கு உகாரம் என்றும், சிவத்துக்கு அகாரமென்றும் பெயர். திருவள்ளுவர் நவரத்தின சிந்தாமணி

800-ல் 449-வது பாட்டில் உகாரமென்ற புளி அகாரமென்ற மால் ஓகோகோ கோடி பொருள்கட்குப் பெயருண்டாம் என்ற சொல்லப்பட்டிருப்பதால் நாதம் என்று இந்த இடத்தில் எதைச் சொல்கிறது! நான் சட்டப்படி சொல்கிறேன்.

சத்தி ஜெயநீருக்கு 84 பெயர்

நாதநீர் என்பது சத்தி ஜெயநீருக்குப் பெயர். சத்தி இன்னதென்றும் செயநீர் பிரிக்கும் விதமம் எழுத இந்த இடம் போறாது. பின் விரிவாய் எழுதப்படும். பிரணவ நீருக்கே நாதநீர் என்றும் சோமநீர் என்றும் 84-பெயர் அகஸ்தியர் பரிபாஷை 1-47-ல் சொல்லப்பட்டிருக்கிறது.

வழலை நஞ்சாகிய உயிருக்கு, உடலாகிய அமுரிதீட்சை செய்த பின்பு நாதநீரில் தீட்சை செய்ய வேண்டும்.

நாதம் என்று பூநீருக்கும் பெயர், பாறையுப்புக்கும் பெயர், பாறையுப்பு மூத்தவள் என்றும் பூநீர் இளையவள் என்றும் பரிபாஷை 1-வது காண்டம் 54, 55-வது பாட்டுகளில் சொல்லப்பட்டிருக்கிறது 2-ம் சத்தியே, இரண்டு சத்திகளிலுமிருந்து சுத்த கெங்கையாகிய பிரணவநீர் பிரிக்கும் விதம். அகஸ்தியர் பரிபாஷை 1-வது காண்டம் 69, 70-வது பாட்டுகளில் சொல்லப்பட்டிருக்கிறது.

வளையல் கொழுப்பு என்ற வளையல் நஞ்சு கருப்புநிற மாவதற்கு காரணம்

மண்ணாகிய பூநீரை வளயைல்களாகச் செய்வார்களாம் கருப்புவளையல் செய்வதற்கு ஆதியில் பூநீருடன் தாம்பூரம் போட்டு மண் பாண்டத்திலிட்டு காளவாய் கட்டி எரிக்கும்போது உருகி கட்டியாகி கருப்புநிற மடைகிறதாம் அந்த கட்டியின் மேலே படர்வது வளையலுப்பு. இதை தனியே எடுத்துக்கொண்டு பூநீர் கட்டிகளை அடுக்கி வைத்திருப்பார்கள் அதில் மழை காலங்களில் கசிந்து வருவது கருப்பு நிறமான வளையல் கொழுப்பாம்

போகர் 50 ஏட்டுப்பிரதியில் வளையல் செய்ய
மேற்குறிப்பிட்ட வளையல் கட்டிகளை உருக்கும்போது மிதந்துவரும்
நுரைகளை வழித்தெரிந்து காச்சுவார்களாம்
இந்த நுரையே நஞ்சு என்று பின் காட்டப்படும்.
வளையலின் பூவேநாதம், மன்னயன் விந்துவாகும். வளையலிலுள்ள
விந்து வழலை வெடியுப்பென்றும், வழலைக்கு 320 பெயர்

போகர் சொல்வதால் நாதமாகிய பூநீரிலுள்ள விந்தே முதல் வழலை, பிர்மகற்பம் இதுவே ஈசனுப்பு இடியுப்பு இதுவே நாதமென்ற வெடியுப்பு சிவஉப்பு அக்கினி உப்பு அண்டம் என்றும் தெரிகிறது இந்த வழலை உப்பிற்கு 320 பெயர் அகஸ்தியர் பரிகபாஷை 1-26 முதல் சொல்லப்பட்டிருக்கிறது.

*சிவஉப்பு இன்னதென்று தெரியாமல்
மயங்கிய சிவயோகிக்கு கருவளையலை யணிந்த
கையை தாய் நீட்டிக் காட்டினாள் என்றும்
சொல்லப்பட்டிருப்பதால் வளையலில் உள்ள
விந்தாகிய நஞ்சே சிவஉப்பு என்று நன்றாய்த்தெரிகிறது*

இதினால் சிவஉப்பு வளையலிலிருக்கிறது என்று தாயே
காட்டியிருப்பதால் வளையல் நஞ்சே சிவஉப்பு
எனத்தெரிந்துகொண்டோம்.

*பூநீர் என்ற சத்தி, சிவஉப்பை யுண்டு
வளையலுப்பைப் பெற்றாள்*

என்பதற்குச் ஆதாரம்

அகஸ்தியர் பரிபாஷை 2-ம் காண்டம் 15, 29, 84-வது பாட்டுகளில் சத்தியாகிய பூநீரில் வளையல் செய்வதாயும் அந்த சத்திக்குள் ஈசனுப்பு - தண்ணீறாயிருப்பதாயும்- இந்த சத்தியாகிய மண்ணே பூநீர் - பிர்மாவென்றும் அந்த பூநீரிலுள்ள ஜலமே மாலும் ஈசனாச்சு என்றும் அந்தமாலே ஈசனானான் என்றும் ஊஷரத்துக்கு அடுத்திருந்த உப்பே ஈசன் - ஈசனுப்புக்கு மேலிருந்த மண்ணே சத்தி - தாசிகட்கு இந்தமண்ணன்றோ வளையலாச்சு, சத்தியாகிய பூநீரை விட்டால் ஈசனுப்பு தானேபோச்சு, என்றும் மேற்படி 29-வது பாட்டில் - ஈசன் விந்தைகிரகித்து நிற்கும் பூநீர் என்றும். வளையல் செய்வோன் உப்பை வேறாய்ப்பண்ணுவான் அந்தஉப்பு பாழ்தாமே என்றும் 2, 85-வது பாட்டில்- அடியுப்பாகிய - நிலஉப்பு என்ற பூநீறாகிய சத்தி, சிவஉப்பாகிய சிவ விந்தைச் சாப்பிட்டு வளையலுப்பைப் பெற்றாள். பூநீரே தாய் வளையலுப்பு பிள்ளை என்றும் சொல்லப் பட்டிருப்பதால் - வளையல் செய்யும் பூநீரில் - பூநீருண்ட சிவவிந்தாகிய ஈசனுப்பு என்ற சிவ உப்பு இருக்கிறது என்று அகஸ்தியர் பரிபாஷை மூலமாயும் நன்றாய்த் தெரிகிறது.

திருவள்ளுவர் 100-ல்

பூமியிலிருந்து நஞ்சாகிய சிவஉப்பை எடுத்து. 5-வருடம் அமுரி கற்பம் சாப்பிட்டு அமுரியில் என்னை கக்கிய பின் அதில் முப்பு முடிக்கச் சொல்கிறார்.

போகர் வளையல் நஞ்சை முப்பு முடிக்கச் சொல்கிறார். போகர் அமுரியின் பெருமையை எழுதியதையும் தெரிந்து கொண்டோம். கற்பம் சாப்பிடாமல் அமுரியில் என்னையை நீக்கும் விதமும், நஞ்சை முப்புவாக முடிக்கும் விதமும் வேண்டியதிருப்பதால் அதற்கு வேண்டிய நூல் ஆதரவை எழுதுகிறோம்.

*அகஸ்தியர் 2000-த்தில் வளையல்
வழலை இதுவே வளையல் நஞ்சு*

என்றும் வளையல் செய்வோர் இதை எரிந்து விடுவார்கள்
இதை குருவாக முடிக்கும் விதம் சொல்லுகிறேன் கேள்
புலஸ்தியா என்று சொல்வதை கவனியுங்கள்.

அகஸ்தியர் 8000-ம் 3-வது காண்டம் முதல் பிரிவு 272-நம்பர் முதல் 276-நம்பர் வரை இருக்கும் விபரம்.

வளையல் வழலை - இதன் அடையாளமும் சுன்னம் செய்யும் விதமும்

காணுதற்கு வழலையொன்று சொல்லக்கேளு
கடைதனிலே விற்காது கருத்தாய் கேளு
ஊனுகின்ற வளையல் செய்யும் பேரிடத்தில்
உத்தமனே அது உண்டுஉண்டு கண்டுபார்
தோனுகின்ற உப்பதுவும் காச்சும்போது
சுகமாக வெள்ளைநுரை வந்ததெல்லாம்
வேனுமென்று ஓட்டிலே வழித்து வைப்பார்
வெள்ளைநஞ்சாய் காய்ந்துறைந்து வெளுப்பாய் பாரே (1)

நஞ்சு வெண்ணைபோலிருக்கும் இதை இழுக்காகச் சொல்லக்கூடாது

வெளுப்பாக வெண்ணையது போலே காணும்
வியப்பான வெள்ளைநஞ்சு என்று சொல்லி
துளுக்கான சரக்குகளை வெளுப்பாய்ப் பண்ணும்
அப்பனே காரமது கொடிய காரம்
இளுக்காக சொல்லவுந்தான் கூடாதப்பா
இதைவாங்கி ஒருபலந்தான் இயம்பக்கேளே
கேளப்பா சூடனது சரியாய்ச்சேரு
செடியான வீரமதில் பாதிசேரு (2)

அகஸ்தியர் பரிபாஷை 2, 29-பாட்டில் வளையல் செய்வோன் உப்பை வேறாய் பண்ணுவான் அந்த உப்பு பாழதாமே என்று சொன்னவர் இந்தப் பாட்டில் வளையல் நஞ்சை கேவலமாகச் சொல்லக்கூடாது என்கிறார்.

இதற்கு வேண்டிய வெடியுப்பு ஜெயநீர், மேற்படி 3-வது காண்டம் 134-வது பாட்டிலிருக்கிறது.

நாளப்பா வெடியுப்பு நீராலாட்டி
நயமான சுண்ணத்தில் புடத்தைப்போடு
வாளப்பா சுன்னமது கடுங்காரமாச்சு
மகத்தான சரக்குகளில் மாட்டக்கேளு
தாளப்பா சாரமது சரியாய்ச் சேரு
சட்டமுடன் ஜெயநீராம் சாற்றக்கேளு
தூளப்பா சவ்வீரம்பொடித்துப்போட்டு
சுகமான பீங்கானில் ஜெயநீர் விட்டு (3)

வழலை செயநீரில் தங்கம் வெள்ளி கரைந்து வெண்ணையாவது

விட்டுமே சொல்லுகிறேன் தங்கம் வெள்ளி
விதமான தகடாக்கி அதனில் போடு
பட்டுமே தகடதுவும் வெண்ணைபோலாம்
பாங்கான வெண்ணைதனை கல்வத்திட்டு
முட்டுமே லிங்கமொடு, கவுரி, வெள்ளை
முனையான தாளகமும் கெந்தி சேர்த்து
வட்டுமே போலாக அரைத்து வில்லை
வளமாக ரவிதனிலே காயப்போடு (4)

7-வகைச் சுன்னத்தால் ரசமணி செய்யும்விதம்

ஒட்டுமே அஞ்சுன்னக் குகையில் வைத்து
உத்தமனே புடம்போட வெளுத்து நீறும்
நீறுமே சுண்ணாம்பாய் எடுத்துக்கொண்டு
நிலையான கல்வத்திலிட்டு நீயும்
வேறுமே ரசமதுவும் சமனாய்த் தூக்கி
விட்டுமே அரைத்திடுவாய் முலைப்பாலாலே
சேறுபோல் வெண்ணையுமாய் உருட்டியப்பா
திறமான கரண்டிதனிலிட்டுக் கொண்டு (5)

ரசமணிக்கு கவசம்

கூறுவேன் பழச்சாற்றால் சுறுக்குப் போட்டு
குணமான செருப்படியின் சாற்றில் சாய்ப்பாய்
சாய்த்திடவே ஏரண்டத்தென்னை குத்தி
தப்பாமல் உருக்கிவிடு மணியாம் பாரு
ஏத்திடவே புடம்போட சொல்லக்கேளு
என்மக்கான் கல்லுப்பு காரம் சாரம்
மாய்த்திடவே சீனமொடு வெடியுப்புந் தான்
வராகி தன்னாலே மாட்டியாட்டு (6)

பழச்சாறு என்பது–இந்த இடத்தில் எலுமிச்சம்பழச்சார் தான். ஏரண்டந்தென்னை என்பது–பெரிய ஆமணக்கு எண்ணை. வராகி–பன்றிமொத்தை அதாவது சிறுகுறட்டை கொறட்டை என்பது–பனங்கோவை என்றும் சிறுகுறிஞ்சா செடி என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. சவுரிப்பழத்திற்கும் கொறட்டைப் பழம் என்றும் பேர்.

இந்த இடத்தில் வராகம்–பன்றி, வராகி-பன்றிப்பால். ரசமணியை உருக்கிக்கட்டும் கவசமருந்தை அரைக்க வேண்டியதிருப்பதால் பன்றிப்பாலுக்கு ரசத்தை உருக்கும் குணமிருப்பதால் பன்றிப்பாலில் மேற்படி சரக்குகளை அரைத்து கவசமிடவேண்டும் காரம் சாரம் என்பது இந்த இடத்தில் வெண்காரம் நவச்சாரம் தான்.

ரசமணி அஷ்டமாசித்தி ஆடும்

காய்த்திடவே மணிதனுக்கு கவசம் செய்து
கனமான ஏழுசீலை மண்ணுஞ் செய்து
செய்துமே முழப்புடந்தான் போட்டுத் தீரு
திறமான மணியென்ன குளிகைக்காகும்
கையுமே செம்புதனில் வேதை காணும்
நலமான அஷ்டமா சித்தியாடும்
துய்யுமே செந்தூரம் செய்தாயானால்
தூம்புரமாம் ரவிதனிலே பழுக்கும்பாரு (7)

ரசமணியை செந்தூரம் செய்யும் விதம்

ஐயனே செந்தூரம் செய்யக்கேளு
அழகான கல்வத்தில் நொறுக்கிக்கொண்டு
கொண்டபடி சீனமொன்று தாரமொன்று
குணமான கெந்தியது சமனாய்ச்சேர்த்து
விண்டேனே பொற்றலையின் சாற்றாலாட்டி
வெய்யலிலே காயவைத்து பொடிதான் பண்ணி
பண்டெனவே குப்பிதனிலடைத்துக்கொண்டு
பரங்காக ஏழுசீலை மண்ணும் செய்து (8)

தாரம்--தாளகம்

காயகற்பம்

அண்டிடவே வாலுகையில் தீயை மூட்டு
அப்பனே முச்சாமம் மூன்று தீயும்
தீயாரி எடுத்துப்பார் செந்தூரமாகும்
சிகப்பென்ன முருக்கன்பு ஒப்பாதப்பா
காயான குப்பிதனில் பதனம் பண்ணு
காயசித்திக் கொற்றதொரு கற்பமப்பா
பேயர்கள்தான் அறிவாரோ செந்தூரத்தின்
பெருமைதனை நன்றாக பேசக்கேளு (9)

செம்பு வேதையாதல்

வாயான நீர்தனிலே குழைத்துக்கொண்டு
மைந்தனே செம்புதனில் பூசி நீயும்
பூசியே புடம்போட்டு உருக்கிப்பாரு
பொன்னென்ன மாற்றெட்டு பொலிவாய்க்காணும்
பூசியே புடம்போட தங்கமாகும்
புகழாதே செந்தூரம் அருமை பாரு
நேசியே மண்டலந்தான் கொண்டாயாகில்
நெடுநாள் வியாதியெல்லாம் நீங்கும்பாரே (10)

சத்தி சிவஉப்பு 2-லும் உள்ள எண்ணையால் 2-ம் காரம் குணம் கெட்டுவிட்டதாம்

அகஸ்தியர் பரிபாஷை 500 2-ங் காண்டம் 31, 32-வது பாட்டு

தாழ்வில்லாப் பூநீரைச் சுன்னமென்று,
சாற்றுவார்தமைகளிலே தானே பூட்டி
வாழ்வுபெற சலமெடுத்து வேதை பார்ப்பார்
மைந்தனே யதினாலே வன்னமில்லை
தாழ்விலா சத்தியுவர் சாரத்தெண்ணெய் தான் கலந்து,
சிவசுன்னந் தணிந்து போச்சு,
நாளிலே சிவஉப்பை சத்தியுண்டு
நாரிமருந்தே பெரிதாய் நடப்புமாச்சே. 31

நடப்பான சத்தியெனுஞ் சாரம் மிஞ்சி
நற்சிவனாற் காரமன்றோ நட்டமாச்சு
தடிப்பான கரத்தை யுண்ட சாரம்
தன்குணமு மாறியன்றோ தவறிப்போச்சு
அடைப்பான கானகத்திற் புலியுங்கண்டே
யப்புலியால் கானகமு மழிந்தாற்போல
உட்போனா லுயிர்நிலையா வாறுபோலே
ஓகோகோ காரசாரங்கள் போச்சே. 32

சத்திசிவ உப்பில் எண்ணை இருக்கிறது என்பதற்கு ஆதாரம்

எண்ணையுள்ள பூநிரில் சிவஉப்பு கலந்துவிளைவதால்' சிவஉப்பின் காரம் கெட்டுப்போயிற்றாம், எண்ணையுள்ள சிவஉப்பை சத்தியுண்டு பூநீரின் குணமும் கெட்டுவிட்டதாம். ஆகையால் சத்திசிவ உப்பில் இருக்கும் எண்ணையை நீக்க வேண்டும் என்று நன்றாய்த் தெரிகிறது.

எண்ணையை நீக்க 10-தீட்சை செய்யவேண்டும் எதில் தீட்சை செய்வது! பரிபாஷை 500-ல் 1-வது காண்டம் 32-வது பாட்டில் உடல் போனால் உயிர் நிலையாது என்று சொல்லப்பட்டிருப்பதால் உயிராகிய பிர்மகற்பம் என்ற சிவஉப்புக்கு, உடல் மனிதர் அமுரி என்று அகஸ்தியர் பரிபாஷை 1-வது காண்டம் 18-வது பாட்டில் சொல்லப்பட்டிருப்பதாலும் சிவஉப்புக்கு உடலாகிய அமுரி சேர்க்க வேண்டும். எப்படி சேர்ப்பது! அமுரியிலுள்ள எண்ணையை நீக்கிச் சேர்க்கவேண்டும். எப்படி எண்ணையை நீக்குவது! அமுரியை திராவகமிறக்கினால் எண்ணை நீங்கிவிடும் என்று பூகிமுனியும் யாக்கோப்பும் சொல்வதால் அமுரியை திராவகமிறக்க வேண்டும்.

இனி அமுரியை திராவகமிறக்கி பூநீரைச் சேர்த்தால் பூநீரிலுள்ள எண்ணை நீங்கி சவுக்காரமாகி பூநீர் கொடிய சுன்னமாகுமாம். பூநீர் சுன்னமானால் சூதத்தை கொல்லும், என்று பூகிமுனியும் சூதம் செத்தால் பரவிய உடம்பு பொன்னாம் என்று கொங்கணர் 3000-த்திலும் சொல்லப்பட்டிருப்பதால் சத்திசிவ உப்பில் இருக்கும் எண்ணையை நீக்க அமுரி திராவகமே சிறந்தது என்று நன்றாய்த்தெரிகிறது.

சத்தியாகிய பூநீர் இது மண், ஜலமாகிய சிவம் இது நஞ்சு.

இது 2-ம் குடித்த என்னையை கக்காமல் குளிர்ச்சியீந்தால் சவுக்காரமாகிய முப்பு துணிவெளுக்கத்தான் ஆகும் என்று சொல்லப்பட்டிருக்கிறது என்பதற்கு ஆதாரம்.

கூற்றான மண்ணுக்குந் தண்ணீருக்குங் குடித்த எண்ணெய் கக்காமற் குளிர்ச்சி ஈந்தார் - பார்த்தாவதொன்றுமில்லை வண்ணானுக்குப் பழஞ்சீலை வெளுப்பதற்காகுமென மேற்படி பரிபாஷை 2-ங் காண்டம் 46-வது பாட்டில் சொல்லப்பட்டிருக்கிறதால் முதலில் என்னையை நீக்க அமுரிதிராவகத்தில் பஞ்சசுன்னம் கலந்து 10-தீட்சை செய்து என்னை நீக்கியீ பின்பே குளிர்ச்சி கொடு என்பதால் நாதநீராகிய பிரணவநீரில் 10-தீட்சை செய்யவேண்டும் என்று தெரிகிறது. சிவமுப்பு 50-ல் பிரணவநீரில் தசதீட்சை செய்யும்படியும் சொல்லப்பட்டிருக்கிறது. பிரணவநீர் பிரிக்கும்விதம் பின் எழுதப்படும்.

வளையல் நஞ்சு

அகஸ்தியர் 8000-த்தில் என்னையை நீக்கும்விதம் சொல்லாமல்
சுன்னம் செய்யும் விதம் சொல்லியிருக்கிறார்.
அகஸ்தியர் பரிபாஷை 2-ம் காண்டம் 38-வது பாட்டில்

ஒன்றான உப்பொன்று தீட்சை ஒன்று

ஒவித்தே பரிபாஷை 500-க்குள் பரிபாஷையாகப் புதைத்து பாடியிருப்பதாய்ச் சொல்கிறார். அவர் மறைத்த படியே 8000-ம் வளையல்நஞ்சை தீட்சை செய்யும் விதம் சொல்லாமல் மறைத்துவிட்டார்.

அகஸ்தியர் ஒளித்த உப்பு ஒன்றையும் தீட்சை ஒன்றையும் நான் கண்டுபிடித்து சொல்கிறேன்

அகஸ்தியர் சிவஉப்பு குருநூல் 50-ல் பூநீர், இடியுப்பு, பாறையுப்பு, மூன்றையும் பரிபாஷைப்படி பஞ்சசுன்னம் செய்து சோமநீரிலூட்டி 10-தீட்சை செய்யும்படி சொல்லப்பட்டிருப்பதால் சோமநீர் என்பது என்ன! சோமநீர் என்பது பனிஜலம் என்று போகர் 7000-த்தில் சொல்லப்பட்டிருக்கிறது ஆனால் பனிஜலமல்ல பிரணவ நீருக்கே சோமநீரென்று பெயர். ஆதாரம் பின் காட்டப்படும்.

பரிபாஷையில் உடல்போனாலும் உயிர் நிலையாது என்று சொல்வதாலும் பிர்மகற்பமாகிய உயிருக்கு உடல் மனித அமுரி என்று முன்தெரிந்து கொண்ட படியாலும் திருவள்ளுவர் 100-ல் நஞ்சை அமுரியில் தீட்சை செய்ய சொல்லியிருப்பதாலும் முதல் முதல் உடலாகிய அமுரி திராவகத்தில் பஞ்சசுன்னம் கலந்து தீட்சை செய்ய வேண்டும் என்று நன்றாய்த் தெரிகிறது. அகஸ்தியர் சிவமுப்பு குருநூல் 50-ல் அமுரியை தீட்சைக்குச்சொல்லாமல் மறைத்திருக்கிறார்.

தீட்சை விபரம்

அமுரியை திராவகமிறக்க அமுரியிலுள்ள எண்ணை நீங்கிவிடும் அகஸ்தியர் பரிபாஷை 1-வது காண்டம் 60, 70-வது பாட்டுப்படி பஞ்சசுன்னம் செய்து வகைக்கு 1. ரு எடையை அமுரி திராவகம் 1-படியில் கலந்துதெளிவிருத்து நஞ்சை 10-தீட்சை செய்து எண்ணை நீக்கி பின் குளிர்ச்சிக்காக பிரணவநீருட்ட வேண்டும்.

முதல் வழலையாகிய பிர்மகற்பம் என்ற அக்கினியுப்பு வளையல் செய்யும்பூநீரில் பச்சைநிறமாயும் மஞ்சள்நிறமாயும் விளையும் என்று ஒருசித்தர் சொல்வதை கவனியுங்கள்

ஒன்றான வழலையென்ற அங்கியுப்புக்
கொப்புமுண்டோ யென்னாலே புரைக்கப்போமோ
குன்றான பூமியெல்லா மோடினாலும்
குருவழலை யுப்பறியக் கூடாதையா
மன்றான பூமடவார் கையைப்பாரு
வல திடைக்கை பூண்டகங் கணத்தைப் பாரு
நன்றான ரெங்கிருந்த பூமிபாரு
நல்லபச்சை மஞ்சள்நிறம் நாடிப்பாரே

ரெங்கு என்பது அண்டக்கல்:- காந்தமென்ற விஷக்கல் இந்த அண்டக்கல் இடியினாலுண்டானது, ஆகையால் இதற்கு இடியுப்பு என்றும் அக்கினி உப்பு என்றும் பெயர் இந்த அண்டக்கல்லிலிருக்கும் பூமி அடையாளம் பின் எழுதப்படும்.

சிவரெங்கு என்பது நஞ்சு, சத்தி ரெங்கு என்பது பூநீர்
ரெங்கு இருந்த பூமியில் 2—3 விளைகிறது என்பதற்கு ஆதாரம்.

5-வகை நில விபரம்

பாரடா அந்த நிலம் உனக்கே சொந்தம்
பரங்கிவளை செய்திடுவோர் தனக்கே சொந்தம்
ஊரடா வெளுக்கும்வண் ணானுக்குச்சொந்தம்
உன்னிலமும் அவர்நிலமும் வேறே யுண்டு
சேரடா குறிஞ்சி நெய்தல் மருதம் முல்லை
தீயான பாலைநிலம் அஞ்சுக்குள்ளே
நீரடா பாலைநிலம் கசிவு கண்டால்
நிலத்தலே குடிசைகட்டி நிலைத்துக்கொள்ளே

கொள்ளப்பா கசிவெடுக்கும் நாள்தானொன்று
(கசிவெடுக்கும் என்பது சுத்தகங்கை எடுக்கும் நாள்ஒன்று)

கூறினால் சித்தர்பகை குற்றமாகும்
விள்ளப்பா பிர்மகற்பம் மேற்கேயென்பார்
வீரான பாறையுப்பு கிழக்கே யென்பார்
துள்ளப்பா இதுமூன்றும் பூமிநாதம்
சோதித்தால் ஓரிடத்திலிருக்குதப்பா
தள்ளப்பா அஞ்சிலே ரெண்டே நன்று
தானறிந்தால் சமுசயங்கள் தள்ளிப்போச்சே

அஞ்சிலே இரண்டு நன்று என்பதற்கு உரை:-

சத்தியுப்பு 3

உவர்நிலம் 96-ல் 5-வகை பூநீர் உப்பு விளையும் 1,2,3,-நாளும் விளையும் பூநீர் 3-ம் சத்தி பெண்.

சிவஉப்பு 2

4, 5, நாட்களில் விளையும் பூநீர் 2-ம் ஆண் சிவம். இந்த இரண்டையுமே நன்று என்று சொல்கிறார்.

இவை விளையும் விபரம்

ஐந்துவகை நிலத்திலும் பத்தினி சித்தினி அத்தினி சங்கினி என நாலுவகை ஜாதியுண்டு பத்தினி ஜாதி பூமிசிவந்தநிறம் இதுவே உயர்ந்தது என்று அகஸ்தியர் சொல்கிறார்.

சிவந்த பூமியிலும் களர் பூமியாயிருக்கவேண்டும். அதில் ஒன்றும் விளையாது விளைவற்ற பொட்டல் மாடு கழுதைமேயும் இதில் வெண்சாரையும் நஞ்சம் விளையும்

சத்தியாக 3-ம் சிவமாக 2-ம் விளையும். எப்படி உற்பத்தியென்றால் மேகம் ஆர்பாட்டம்கொண்டு இடி மின்னலுண்டாகி இந்த உவர்நிலங்களில் இடிவிழுந்ததாலும், மின்னல் பாய்ந்ததாலும் பூமிவெந்து உவர் பொங்கி உப்பாயுரையும் இதுவே அண்டக்கல் இதின் சத்தியால் வெண்சாரையும் நாதமென்ற வெடியுப்பாகிய நஞ்சு முண்டாகும்.

இடியே ஈசன், மின்னல் சத்தி

அண்டக்கல்லைத் தொட்டால் கொன்று விடும்

ஆகாயத்தில் இடியும்-மின்னலும் கூடி உறவாகியதும் படீரென்று வெடித்து பூமியில் பாய்ந்ததால் அண்டக்கல்லுண்டாயிற்று. அதிலிருந்து சந்திரன் ஒளியால் பூநீரும் சூரியன் காங்கையால் சிவஉப்பும் உண்டாயிற்று. இந்த அண்டக்கல்லை கண்டவர்களில்லை. சுக்கான்கல்லுக்கும் கீழிருக்கிறது. இதைத்தொட்டால் கொன்றுபோடும்

இடியினாலுண்டான அண்ட உப்பினால் 5-வகை பிண்டமாகிய பூநீர் பூர்க்கும். முதல்நாள் பிறந்த பூநீர் பெண் வளையல் செய்பவர்களுக்காகும். 2-ம் நாள் விளையும் பூநீர் பெண் அழுக்ககற்றும் வண்ணார்க்காகும். 3-ம் நாள் விளையும் பூநீர் பெண் வைத்தியர்களுக்காகும். 4-ம் நாள் விளைவது ஆண் வாதத்திற்காகும் 5-ம் நாள் விளைவது ஆண் அதாவது சிவஉப்பு கற்பத்திற்காகும் பூர்வ பட்சத்தில் சத்தியாயும் தேய் பிறையில் சிவன் கூறாகவும் விளையும் 2-விதமும் எடுத்து தனித்தனி 10-தீட்சை செய்யவேண்டும்.

பனி பெய்யும் காலங்களில் தை, மாசி, பங்குனி, சித்திரை மாதங்களில் பூநீரில் சூரியன் படுமுன் மேலேகண்ட 5-வகையும் தெரிந்தெடுப்பவன் வாதி.

ர்றப்பு

கடைச்சல் தீக்ஷை செய்யும் விதம்

சத்தி சீவ உப்பிலுமுள்ள, உவர் கசிவு எண்ணை மூன்றையும் நீக்கும் வல்லமை பனிஜலத்திற்குண்டு. 1-படி பூநீரை 4-படி பனிஜலத்தில் கரைத்து மண் தூசி விழாது மூடி வைத்திருக்கவேண்டும், 3-நாள் காலை மாலை மூங்கில் குச்சியால் கலக்கிவந்து 4-நாள் கலக்காமல் மூடிவைத்திருந்து 5-நாள் காலையில் தெளிவை மட்டும் இறுத்து மத்தால் கடையவும். கடைந்து ஆடை போக்கி ரவியிலுலர்த்தி 10-தீட்சை செய்யவேண்டும். 1-க்கு 4-பங்கு பனிஜலத்தில் கரைத்து நன்றாய் சுழலச் சுழலக் கடைந்தால் பூநீரிலுள்ள உப்புக் கசிவும் எண்ணையும் உவரும் நுரையாகப் பொங்கிவரும், இந்த நுரைகளை எல்லாம் எடுத்து எறிந்துவிடவும். கடைந்த ஜலத்தை பீங்கானிலிட்டு மண் தூசி படாமல் மெத்தையின்மேல் உலர்த்தவும் அல்லது வாசலில் ஒருபந்தல் போட்டு பந்தலின் மேல் வைத்து ரவியில் உலர்த்தி உப்பாக்கவும் இதற்கு ஒரு தீட்சை என்று பெயர். இப்படி 10-தீட்சை சத்தியுப்பையும் சிவஉப்பையும் தனித்தனி தீட்சை செய்யவேண்டும். எண்ணை நீங்கிவிடும்.

நெருப்பில் காச்சாதே கடையாமல் செய்துகெட்டார்கள். எண்ணைகழறுமட்டும் 10-தடவையும் கடைந்துகடைந்து நுரைபோக்கி ரவியிலுலர்த்தும்படியும் திருவள்ளுவர் ஏணியேற்றம் என்ற நூலில் சொல்லப்பட்டிருக்கிறது.

வறுத்த வித்து மானிலத்தில் முளைக்குமோ என்று அஃகஸ்தியர் பரிபாஷையிலும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் சத்தி சிவஉப்பு இரண்டையும் நெருப்பில் காய்ச்சி தீட்சைசெய்யக்கூடாது என்று நன்றாய்த் தெரிகிறது.

கடைச்சல் 32-செய் யும்படி அகஸ்தியர் சொல்லுகிறார் அது விபரமும் மகா அருமையான கொணங்கனர் கடைச்சல் முறையும் பின் எழுதப்படும்.

ஒன்றுக்கொன்று சத்துரு சரக்குகள் விபரம்

ஒரு சித்தர் சொல்வதை கவனியுங்கள்

நஞ்சு—சிவம் .... பூநீர்—சத்தி
சவுக்காரம்—சிவம் ....
சீனம்—சத்தி

வெடியுப்பு–சிவம்	.....	புளி–சத்தி
கறியுப்பு–சிவம்	.....	கங்கை–சத்தி
சிறுநீர்–சிவம்	.....	உவருப்பாகியபூநீர்–சத்தி
நிலஉப்பு–சிவம்	.....	கங்கை–சத்தி
கொளுஞ்சிகாயிலிருக்கும்		
குருவண்டு–சிவம்	.....	மின்மினிப்பூச்சி–சத்தி
சூதம்–சிவம்	.....	கெந்தி–சத்தி
சவ்வீரம்–சிவம்	.....	லிங்கம்–சத்தி
சூடம்–சிவம்	.....	தாளகம்–சத்தி
கோழிமுட்டை		
வெண்கரு–சிவம்	.....	மஞ்சள்கரு–சத்தி
அண்டத்தோடு–சிவம்	.....	கங்கை–சத்தி
நாகம்–சிவம்	.....	மணல்த்தவளைநெய்–சத்தி
பூநாகம்–சிவம்	.....	பச்சைக் கற்பூரம்–சத்தி
புனுகு–சிவம் கோஜம்	.....	கோரோஜனை–சத்தி பீஜம்
கல்லுப்பு–சிவம்	.....	நாயுருவி–சத்தி
வெங்காரயம்–சிவம்	.....	நவாச்சாரம்–சத்தி
ரோமம்–சிவம்	.....	குரும்பி–சத்தி
துருசு–சிவம்	.....	பச்சைக்கற்பூரம்–சத்தி
தேன்–சிவம்	.....	துத்தம்–சத்தி
கடல்நுரை–சிவம்	.....	மனோசிலை–சத்தி
சிப்பித்தோடு–சிவம்	.....	உட்கரு–சதை–சத்தி
கற்சுன்னம்–சிவம்	.....	கங்கை–சத்தி
வெள்ளை அப்ரேகம்–சிவம்	.....	கங்கை–சத்தி
வெள்ளை அப்ரேகத்திற்கு இரும்பு மித்துரு		
பூநாகம்–சிவம்	.....	பசும்பால்–சத்தி
பூமியில் மின்னல் பாய்ந்ததால் பூநாகம் விளைந்தது.		

மேற்படி நெய்யில் முப்புச்சுன்னம் போட்டுச் சுருக்கிட நாகம் கட்டும். சத்தியாகிய பூநீருக்கு சிறுநீராகிய அமுரி சத்துரு என்றும் சிவம் என்றும் தெரிவதால் அதை இந்தயிடத்தில் சேர்க்கப்பட்டது. மேலும் பசும்பாலில் பூநாகம் ஊறப்போட்டால் பாலை சாப்பிடும். பாலைச் சாப்பிடுவதால் பேதியாகி மண்ணை எல்லாம் கக்கிவிடுகிறது.

சத்தியுப்பு-3 என்பது முதல்

ஏணி ஏற்றம் 200-லிருந்து எடுத்து எழுதப்படுகிறது.

சிவந்து பூமியிலும் களர் பூமியாயிருக்கவேண்டும். அதில் ஒன்றும் விளையாது விளைவற்ற பொட்டல் மாடு கழுதைமேயும் இதில் வென்சாரையும் நஞ்சும் விளையும் இதிலிருந்து

சத்தியாக 3-ம் சிவமாக 2-ம் விளையும். எப்படி உற்பத்தியென்றால் மேகம் கல்மழைகள் பெய்ய மேகம் ஆர்பரித்து பொங்க மின்னி மண்ணில் இடி வீழ.

விழ்ந்த இடி மின்னலாஜ் வெந்ததுபார் மண் என்கிறார் மேற்படி உவர்நிலங்களில் இடி மின்னல் வீழ்ந்தாலும், பூமி வெந்து உவர்பொங்கி உப்பாயுரையும். இதில் அண்டக்கல் இதுவே நஞ்சு ஆண் 1-ம் பிண்டக்கல் இதுவே சத்தி. வெண்சாரை அதாவது பூநீர் 2-ம் உண்டாகும் என்கிறார்.

இடியே ஈசன், மின்னல் சத்தி.
வெண்சாரை என்பது: பெண் - சத்தி - சாரம் - பூநீர்
பிர்மகற்பம்: ஈசன் - ஆண் - சிவம் - காரம் - நஞ்சு

பூநாகம் பாரபரவஸ்து ஆவின் பாலாகிய சத்தியில் சுத்தியாகும் இதற்கீடு ஒன்றுமில்லை ஆதிவழலைக்கு ஒப்பானது என அறியவும்.

லாடர் 101 முப்பு உற்பத்தி விபரம்

லாடர் மகாமுனிவர் 101-ல் முப்பு விளைவும், அதை எடுக்கும் விதமும் சொல்லப் பட்டிருக்கிறது. முப்பு என்பது ஒரு பொருளா? இரண்டு பொருளா? மூன்று பொருளா? அல்லது மூன்றும் கூடிய ஒரே பொருளா? எனத் தெரியவேண்டும். போகர் கரசாரத்துறை 60-ல் நீர், நெருப்பு, காற்று மூன்றும் கூடியதே அண்டம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அண்டம் பிண்டம் இரண்டும் கூடிய பிறகு முப்பு என்று பெயர்.

ஆனால் இரண்டையும் எப்படி கூட்டுவது. இடி புகுந்த உவர் நிலத்தை நன்றாய்ப்பாரு-இரண்டும் ஒன்றாய்ச் சேர்க்க ஒரு கடலைப் பாரு என்று ரோமரிஷி வகார சூஸ்திரம் 16-லும், தீட்சைக்கு கடலே மூலம் என்று அகஸ்தியர் பரிபாஷை 1-வது காண்டம் 99-வது பாட்டிலும், 2-வது காண்டம் 54-வது பாட்டில் தீட்சை என்ன வென்றாயானால் அறை கடலின் உப்பன்றோ-ஆயிநாதம் என்றும் சொல்லப்பட்டிருப்பதால் சேர்க்கும் விதம் பின் எழுதப்படும்.

ஆனால் அண்டம் எப்படி உற்பத்தியாயிற்று பிண்டம் எப்படி உற்பத்தியாயிற்று என்று நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அதற்காக லாடர் 101, 83, 82, 51, 45, 41, 22, லாடர் ஸ்தலலக்ஷணம் 11-16 லாடர் முப்பு தீக்ஷைவிதி 16 முதலிய நூல்களில் சொல்வதைக் கவனியுங்கள்.

நில உப்பின் சாரத்தால் அதாவது முப்புவினால் யோகம் ஞானம், வசியம், மறைப்பு, வாதம், அஞ்சனம், திலதம், வாடை, கௌனரசக்குளிகை சித்தியாகும். முப்பு இல்லாவிட்டால் இவைகளில் ஒன்றும் சித்தியாகாது என்றும் லாடர் 101-ல்

காமம் மிஞ்சி இடி மின்னலுண்டாகி

மழைத்துளி சிதறும்போது இடிமுழக்கங்கொண்டு உவர்நிலத்தில் இடி விழுந்து பூமியில் புதைந்து விட்டது. ஆனால் பழையபடி பிறக்கும். அப்படிப்பிறந்த உப்பிற்கு சத்தி என்றும் சிவமென்றும் பெயர். இதை ஒருவரிடமும் சொல்லவேண்டாம். இது முன்னமே முடிந்த முப்பு என்கிறார்.

அண்டத்தீ உவர்நிலத்தில் விழுந்ததால் அளர்மிஞ்சி உப்பாய் பூக்கும், கரிசல் பூமி களங்கமில்லை அதில் உப்பு விளையும். ஆனால் சரளை மண்ணுள்ள செம்மண் பூமி உயர்ந்தது என்றும்

தென்னாட்டில் சிவந்த பூமியில் செண்பகம் போல் உப்பு பூக்கும் இதுவே உயர்ந்தது. பால் போல் கெங்கையுண்டு முலைப்பூ வாசம் பரிமளிக்கும் என்கிறார். அகஸ்தியர் பரிபாஷை 500-ல் 1-வது காண்டம் 82-வது பாட்டில் கரிசல் நிலம் அடுக்கொணாது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

சத்தி சிவ உப்பு விளையும் பூமி அடையாளம். லாடர் 101

கருமணலும் சரளையும் கலந்து இருக்கும் பூமியில் சத்தி சிவம் 2-ம் விளையும், பொன்போல் பிரகாசித்து அப்பிரேக்கு பூமியில் பொருமிக்கிடக்கும். அந்தப்பூமியில் சிவஉப்புப் பூக்கும்.

மாவைக்கரைத்ததுபோல் மணல்பூமியும் மனிதருடையகால் பட்டால் கீழே வாங்கும். பாவுபோல் மண் உருகியிருக்கும் தட்டினால் பூமியில் பாவு போலுள்ள மண் ஆடும் அதிரும், நிலம் பசுமையாயிருக்கும்.

வழலை எடுப்பதற்கு தகுந்த இடம் மோசூர்

இந்த அடையாளம் பூராவும் அரக்கோணம் ஜங்ஷனிலிருந்து சென்னை போகும் ரயிலில் அரக்கோணத்துக்கும் அடுத்த ரயில்வே ஸ்டேஷன் மோசூரில் மண் பச்சை நிறம் காலில் மிதித்து காலை கழுவினால் பச்சையாகவே வருகிறது ஆளை உள்ளே இழுக்கிறது. ஜாக்கிரதையாய் நடக்க வேண்டும். சில இடங்களில் காலை இழுக்கிறது. சுக்கான் கல்லுமிருக்கிறது. மண் மாவைக்கரைத்தது போலுமிருக்கிறது. மாவு மாதிரியே மண் உருகி இளகியுமிருக்கிறது. இங்கே தட்டினால் அங்கே ஆடும் என்ற பூமி மோசூர் தான். மோசூரில் விளையும் பூநீரை கையால் எடுத்தால் கை வெந்து போகிறது. தோலெல்லாம் உரிந்துபோகிறது. சிலர் பள்ளம் வெட்டும் போது மயங்கி விழுந்தார்களாம். சிலர் ஆபத்துக்காளானவர்களாம். சுக்கான்கல்லுக்கும் கீழே வெட்டி அண்டவழலை முளைபோல் ஒரு சாமியார் எடுத்தாறாம்.

லாடர் 101-ல்

ஸ்படிகம்போல் சரளையுமிருக்கும். வீடெல்லாம் மாணிக்கமிருக்குமோ சொல். வீணருக்குக்கிட்டாது, தாயைப்புசி சத்தி சிவம்எடு பணவிடைபோதும். விதியாளி கண்டு கொள்வான். பெரும்பாறை ஸ்தலம் ஸ்படிகம்போல் சரளை பச்சைநிற மண்ணில் சத்தி சிவம் விளையும் வயிரமென்ற கம்பி எடு. கடுகளவு எடுத்து செம்பு மலையாவும் பாச்சு, பச்சை மண்ணில் பரமசிவனும் பார்வதியுமிருப்பார்கள். அண்டச்சுன்னம், வெண்ஸ்படிக நிறம், மஞ்சள் நிறம் பார். இந்த அண்டச்சுன்னம் கொடிய காரம்.

இடியும் மின்னலும் கூடி உவரில் பாய்ந்தார்கள்

அண்டத்தின் இடிதான் ஈசன். மின்னலே சத்தி. இருவரும்கூடி உவரில் பாய்ந்தார்கள் பாய்ந்ததால் பாதாளம் பூமி எங்கும் பாய்ந்து உருகி பூமிமேலே வியர்வையது வெளு வெளுத்து பூவாய் பூர்க்கும் பில் குச்சியைப் போலிருக்கும்.

வாசியை சுழிமுனையில் நிறுத்தி முப்பு எடு

பூமி உளையப்பா கால் மேவவொட்டாது

மெதுவரகத்தான் கால்வைத்து நடக்க வேண்டும். மூலச்சுழியில் மனதை வைத்து வாசியைமேலே யேத்தி சிரசில் தாக்கு உன்னை மேலே தூக்கும். வாசியை ஸ்தம்பித்து அந்த ஸ்தலங்களில் முப்பு எடு. முப்புவை எடுத்தால் கோடிகாலம் வாழலாம். சித்தர்களும் வாழ்த்துவார்கள். தினந்தோறும் யோகத்தை மறந்திடாமல் செய். அண்ட புவனமெல்லாம் உலாவலாம். உன் சடம் தங்க நிறமாகும் என்கிறார் வாசியை சுழிமுனையிலேற்றி நிறுத்தும் விதம் பின் விரிவாய் எழுதப்படும்.

இடிவிழுந்த முதல் வருஷத்தில் விளையும் முப்பு விபரம்.

உளை என்று சொன்ன ஸ்தலத்தில் இடியானது வாளான வாளது போல் பட்டு உருகி, .இடிவிழுந்த முதல் வருஷம் சேலதுபோல் உறுதிகொண்டு சத்தி சீவம் இரண்டும் சேர்ந்து மங்கை உண்டாயிற்று. இடி–சிவம், பூமி–சத்தி

பசுமையாயிருக்கும் பூமியின் உளையில் பிண்ட உப்பு இருக்கும் அளவு விபரம்.

கட்டைவிரல் கனம் இது சத்தி
ஆர்--இரைநீளம். நால்--இரைஅகலம்
பிண்டஉப்பிருக்கும். இது சத்தி
மரக்கைபிடி போட்ட தங்கக்கரண்டியில் எடு, அல்லது
மர அகப்பையில் எடு.

பச்சை நிறம் பூமியில் அண்டஉப்பு இருக்கும் அளவு விபரம்

கைவிரல் ஆள்காட்டி கட்டை விரல் கனம்.
அஞ்சு--இரைநீளம், மூன்றரை--இரைஅகலம்

இரை என்பது விரல் வரந்தையளவு. சுமார் ஒரு அங்குலம்.
கருமணலும் செம்மணலும் மேற்படி பூமியில் கலந்திருக்கும்.

ஸ்படிகமென்ற கம்பி. இதுவே
காந்தமென்ற உப்பு-விஷக்கல்
தொடாதே! ஜாக்கி தை!!
தொட்டால் கொன்றுவிடும்!!!

மரக்கைப்பிடி போட்ட தங்க சல்லடையிலாவது தங்கக் கரண்டியிலாவது எடு. அது செய்துகொள்ள முடியாவிடில் மர அகப்பையில் எடு. மரமூடியுள்ள மரப்பாண்டத்தில் வைத்து மூடு.

45-ல் சமுசயங்கவத்துவிட்டேன் என்கிறார். 82-ல் யோகம் ஞானம் தெளிவாய்த் தெரியும் என்கிறார். 200-ல் மறைப்பு அஞ்சனங்கள் கண்ணாடிபோல் தெரியும். ஆனால் விதியுள்ளாருக்கு விளங்கும் என்கிறார் 500-பார் என்கிறார்.

பூமிக்குள் 2 கெற்பம் உண்டாகிறது 10-மாதம் வரையிலும்பூமிக்குள் முப்பு உற்பத்தியாகும் விபரம்

உவர்பூமியில் ஆனி மாதத்தில் கருக்கூடும். மேற்படி பூமியில் சத்தி சிவம்வழலையாய் ஆனி மாதத்தில் இரண்டு கெற்பமுண்டாயிற்று. உவரில் உற்பத்தி உவர் பூமி உள்ளிருக்கும் சுக்கானுக்குள்ளே ஓடிஒளிந்ததனால் உருவாக உண்டாயிற்று. சற்பம்போல் 2-பிள்ளை சத்திக்குள் உண்டாயிற்று. (சத்தி என்பது பூமி)

அதாவது சத்தியாகிய பூமியில் சிவஉப்பு
ஒரு கெற்பமாயும் சத்தியுப்பு ஒரு கெற்பமாயும்
அமைந்தது என்கிறார்.

இடி பூமியில் விழுந்து கருகூடும் விபரமும் 1-வது மாதத்தில் கரு எடுத்து கற்பமாகச் சாப்பிடும் விதமும்.

இடி விழுந்த முதல் மாதத்தில் உதிரம்போல் நீருண்டாயிற்று. மேலே சிவத்தின் நீர் வெளுத்து நிற்கும். உற்றுப்பார், உதிரமது ஆடைபோல் காணும். ஆரம்பமேலிருக்கும் நீரைத்தள்ளி கீழிருக்கும் ஆடை வாரங்கு, பீங்கானில் வைத்து மூடு, இது மேலான கற்பம். தினம் காலை மாலை ஒரு பணவிடையாக ஒரு மண்டலம் சாப்பிடு சட்டையொன்று தள்ளும். தூங்காமல் மனோன்மணியை தியானம்செய்! தாயை மனதிலெண்ணி வயிரவரை வணங்கி, மூல கணபதியை வணங்கி, ஆருமுகக்கடவுள் பாதமும் 18-சித்தர் பாதங்களும் தொழுது வணங்கி அர்ச்சித்து துதி செய்தால் முப்புவை தொட்டுக் காட்டுவார்கள் சடம் தங்கம் போலாகும்.

பத்தியம்.

நீ உலகத்திலிருந்து கொண்டு யோகத்தை விரும்பித்தேறி காமம், புளி, உப்பு, உரப்பு தள்ளி ஒருபோது அன்னம் அருந்தி மேலேகண்டபடி கற்பம் சாப்பிடவேண்டும்.

பத்தியமிருந்து கற்பம் சாப்பிட்டாலும் பிரியோஜனமில்லை.

தன்னுக்குள் அமுர்தத்தையுண்டு சுழிமுனையில் நின்று பூமியில் விளையும் கற்பம் எடுத்து சாப்பிடவேண்டும்.

1-வது வருஷ மூலிகை கற்பம் சாப்பிடும் விதம்

லாடர் 101 பார்க்கவும்

கடுக்காய், மிளகு, சீரகம், மயிலோன்மூலி ஒவ்வோர் மண்டலம் சாப்பிட விந்துகட்டி சிரசிற்கேறிவிடும் சடம் சுத்தியாகிவிடும்.

பின் வாசியோகம் செய்து

இரண்டாவது வருஷத்தில்
முப்பு எடுத்து கற்பமாகச் சாப்பிடும் விதம்.

வாசியென்பது மூச்சு, மூச்சானது நாசி வழியாய் ஒன்றைவிட்டு ஒன்றில் சுவாசமாய் நடக்கிறது. இடது நாசியில் மூச்சை உள்ளுக்குஇழு, ஒரு மணி வரை, மலைக்காதே. தினந்தோறும் இடது நாசியில் ஓடும் மூச்சை உள்ளுக்கு இழுத்து வலது நாசியில் ரவியாய் மெல்ல மெல்ல விட்டு பின்பு வலது நாசியில் மூச்சை உள்ளுக்கு இழுத்து சுழிமுனையில் கலந்து நில் இப்படியே மாறி நின்று மூச்சை ரெண்டும் ஒன்றாய்ச் சேர்த்து கும்பித்தால் சுழிமுனையில் தானே சுவாசம் ஏறும், அமிர்தம் ஊறும். அமிர்தத்தையுண்டு சுவாசத்தை வெளிவிடாமல் மூச்சை ஸ்தம்பித்து கபாலம் தாங்கும் வரை இரு கிண்ணென்று கபாலம் விம்மித்தெரியும். அதுசமயம் இனிமூச்சை அடக்கி இருக்க முடியாது என்று உனக்கு தெரிந்ததும் சுவாசத்தை வெளியே விட்டு விடு. இதைப்பற்றி பின் விரிவாய் எழுதப்படும். இப்படியே செய்ய நாளுக்கு நாளாய் வருடம் இரண்டுக்குள்ளே புகைக்கூண்டை தூக்குவதுபோல் உன் சடத்தை பையத்தூக்கும். அப்பதியில் நின்று 10-மாதமும் பூமியில் விளையும் முப்பூவை கற்பமாக எடுத்துச் சாப்பிட வேண்டும் என்று லாடர் சொல்லுகிறார்.

ஆகாயவிந்தாகிய இடியும், நாதமாகிய மின்னலும் சேர்ந்து பூமியில் விழுந்து பாதாளம்வரை ஊடுருவிப்போகும் போது உவர் பூமியில் தங்கி கருவாயமையும்

இடி, மின்னல் பூமியில் விழுந்து 2-வது மாதம் கரு
உற்பத்தி விபரமும் அதை கற்பமாக சாப்பிடும் விதமும்

உவர்பூமியில் பாறையாய் நின்ற சுக்கான் கல்லுக்குங்கீழ் இடியும் மின்னலும் கூடிப்பாய்ந்து பூமியில் கெற்பமாகி முதல் மாதத்தில் குளிர்ந்த தண்ணீர்போல் நீருண்டாயிற்று. கோரை மூடிற்று. இந்த கோரை வேரை என்று எண்ணாதே. உவர் நிலத்தில் ஆகாயத்திலுண்டான விந்தாகிய இடி வ்ழுந்து ஒசவு உண்டாயிற்று. அந்த இடியாகிய அக்கினி முன்னமே முடிந்த முப்பு. முன்னமே முடிந்த பூமிக்குள்ளே வந்து இருவரும் தொந்தித்து ஒன்றாய்க் கூடியது என்கிறார்.

அதன் வேகத்தால் பூமிமேல் பூநீராக பொங்கிற்று. இடியின் பொல்லாத காரத்தால் வேகங்கொண்டு பூமிமீதில் சித்தர்களுக்கும் யோகிகளுக்குமாக பூநீராக வந்தது. இந்த

இரண்டாவது மாதக்குறியைக்கண்டு எடுத்து மண்டலம் சாப்பிட்டால் 2-வது சட்டை உரியும் என்கிறர். (கோரை என்பது சவ்வுக்கும் மெல்லிய சங்வு)

இடியில் காந்தச்சத்து

இடி விழுந்து பூமியில் ஒசவுமாச்சு என்பதால் ஒசவு என்பதற்கு உரை:- பூமியில் இடி விழுந்ததால் பூமாதேவி, நாணங்கொண்டு, காமம்பொங்கி கசகசவென்ற ஓதம் வேர்வைபோல் பொங்கி கசிந்தது. காந்தச்சத்துள்ள ஈரம் எனல். இதிலிருந்து நாம்தெரிந்து கொள்வது என்னவென்றால் இடியில் காந்தச்சத்து இருக்கிறது என்று தெரிகிறது.

நமது அபிப்ராயம்

இடியும் மின்னலும் கூடி பூமியில் பாய்ந்து உவர் பூமியிலுள்ள உவருப்புடன் தொந்தித்ததால் உவருருகி அண்டம் என்ற சிவஉப்பு விளையக்கூடிய கற்பமாயமைந்தது.

ஆகாச முப்பு பூமியில் அமர்ந்தது.

3-வது மாத கரு உற்பத்தியும் சாப்பிடும் விதமும்

இடி மின்னல் பூமியில் விழுந்ததால்

ஆயிநாதமும் விந்தும் கூடி தண்ணீராய்
கருத்ததப்பா இது 3-வது மாத கரு.

நிர்வாணி பூஜை செய் இந்த ஜலத்தை எடுத்து பீங்கானிலிட்டு ரவியில் வைத்தால் மேலே ஆடை படரும் வழித்து எடு. பணவிடை சாப்பிடு பொய் போகாது 3-வது சட்டை உரியும்.

இடி பூமியில் விழ்ந்து 4-வது மாசக்குறி கரு உற்பத்தியும் கற்பத்துக்குச் சாப்பிடும் விதமும்

4-வது மாதம் ஒசவுவத்தி 2-பேரும் ஒன்றாய்க்கூடி சிறுசுண்டைக்காய்போல் அண்டமாக ஜெனிக்கும் சிறியதாயிருக்கும். இந்த கற்பத்தை தேடி எடுத்து மண்டலமே சாப்பிட்டால் 4-வது சட்டை உ.ரியும் என்கிறார்.

சாப்பிடக்கூடாது என்பது நமது அபிப்பிராயம்.

ஒசவு வத்தி என்பதற்கு உரை:- 4-வது மாதத்தில் காமத்தால் பொங்கிய நாதம் கசிவு குறைந்து அதாவது இறுகிவிடுகிறது. இறுகி என்று உரை வருவதால் இடி விழுந்த 3-மாதம் வரை பூமியில் பூமிநாதம் வெளிப்பட்டுக்கொண்டே இருக்கிறது என்று தெரிகிறது.

இடியும் மின்னலும் கூடி பூமியில் விழுந்த 5-வது மாதத்தில் நஞ்சாக விளையும். மயிர்போல் கம்பி சகலமும் நஞ்சாயிருக்கும் இதைச்சாப்பிடு என்கிறார்.

கொங்கனவர் 3000-த்தில் வளையல் நஞ்சை வாயில் போடாதே
எட்டிக்காய்போல் கசக்கும் விழுங்கினால் அந்த நிமிஷமே
எமனுக்குஆளாவாய் என்கிறார்

6-வது மாதம் கெற்பம் உற்பத்தி விபரம்

நிலத்தினுள்ளே ஓடி நின்ற அண்டம் கட்டைவிரல் கனமாக விளையும். இதை மண்டலம் சாப்பிட்டால் 6-வது சட்டை உரியும்.

7-வது மாதக்கெற்பம்

இந்தஸ்தலத்தில் புள் முளையாது கட்டைவிரல் கனமாக விளைந்தது அண்டம் அதிலிருந்து அண்டத்தின் சத்துக்கள் பூமிமேல் பொங்கி ஆடைபோல் வெளுத்துக்காணும் அதைப்பறண்டி எடுத்து பீங்கானில் வைத்து இருபோது மண்டலம் சாப்பிடு 7-வது சட்டை உரியும்.

8-வது மாதக்கெற்பம்

ஆகாயத்திலிருந்து விழுந்த இடியால் விளைந்த அண்டத்திலிருந்து உவர்த்த பூவே அந்த ஸ்தலத்தில் 8-வது மாதம் பூப்பதற்கு பூநீர் என்று சொல்லுவார்கள் இதை எடுத்து மண்டலம் பணவிடை சாப்பிட 8-வது சட்டை உரியும்.

9-வது மாதக்கெற்பம் பூமிக்குள் கிழங்குபோல் உருவாயமைகிறது இதுவே அண்டம்

அதன் வேகத்தால் அதிலிருந்து

பூமியெங்கும் பட்டுப்போல் படர்ந்து தளுதளுத்து பாசமேறி மல்லிகைப்பூ அரும்புபோல் முளைமுளையாய் பூநீர் முளைத்திருக்கும். பூமியுள்ளே வட்டுப்போலும், கிழங்குபோலும் உருக்கொண்டு 16-முழத்துக்குள்ளே அண்டம்போல் வரையும் கொண்டு விளைந்து இருக்கும் சுக்கான் கல் மூடியிருக்கும். 9-வது மாதத்தில் தவிழ்ந்து ஓடி ஒரு நொடியில் பாய்ந்து 16-வது முழத்துக்கு வந்து பூமி மேலே படரும். கோடி கவர் விரிந்து பூக்கும். அதாவது பூமி எங்கும் பூத்திருக்கும் இந்த கல்ப்பம் பணவிடை சாப்பிட்டால் 9-வது சட்டை உரியும். கைலாச தேகமாகும். உன்னைத்துடர்ந்து வரும் துன்பங்கள் அனைத்தும் போய்விட்டது. இந்த உலகில் நீயும் ஒரு சித்தனாவாய்.

(சிவஉப்பே வெளிவந்து பூமிமேல் படர்ந்து பூக்கிறது)

10-வது மாதக்கெற்பத்துக்கு முப்பு என்று பெயர் இதுவே சிவமுப்பு இதுவே அண்டம் இதுவே காந்த மென்ற விஷக்கல் தொட்டால் கொன்று விடும்

கைபடாதெடுக்க வேண்டும்

ஜாக்கிரதை! தொடாதே!!

மரஅகப்பையால் எடுத்து மரமூடியுள்ள மரடப்பியில் வைத்து மூடு.

அண்டக்கல் விளைந்திருக்கும் பூமியை கண்டுபிடிக்கும் விதம்

தென்தேசம் தென்பொதிகைச்சார்பில் உவர் பூமியில் மனிதருடன்
சகலஜீவ ஜெந்துக்களும் அதனருகே குட்டையாய் வளர்ந்திருக்கும்
இந்த முப்பு விளைந்திருக்கும் பூமிக்கு அருகே ஊர்களிராது

சித்தனாக இருந்துகொண்டு நிஷ்டை கூடி சிவகாமி வாலையைத் தெரிசித்து, மூல கணபதியைக்கண்டு, முருகேசர் பாதம் கண்டு, மூலமென்ற வடுகர் காவல் கண்டு அவர்கள் சொல்வதைக்கேட்டு நிற்மலனாயிருந்து 10-வது மாதம் சொர்ணமென்ற முப்புவை அதாவது வெள்ளையாயிருக்கும் சிவத்தின் முப்பை எடுத்து அணுப்போல் சாப்பிடு மேலே போக நான் பாடிய தீக்ஷை பார் பூசைவிதியும் பார். உலகத்தில் மானிடருக்கு என்னூல் கோர்வையாக கிட்டாது. விதியாளிக்கு என்னூல்கள் கிடைக்கும் தென்தேசம் தென் பொதிகையில் இந்த 10-வது மாத கல்ப்பம் மேன்மையாய் விளைந்திருக்கிறது. வெளியாகச் சொல்லிப்போட்டேன் விதியாளிக்குக் கிடைக்கும் என்கிறார் ஆண்மை பேசாமல் எடுத்து அடக்கம் செய். பூரணத்தை அறிவால் கண்டால் இந்த முப்பு தவறாது கிடைக்கும் என்று சொல்கிறார்.

முப்புவால் இரசமணி கட்டும் விதம்

வாலரசம் ஒரு பலம் வாங்கி கருஞ்சதைக்கோழி பூரணச்சந்திரநாளில் முட்டையிட்டால் மகத்துவம் பொருந்திய அண்டமாகும். அதை எடுத்து பணம்போல் தமரிட்டு கருவைத்தள்ளி 7-சட்டை நீக்கிய வாலைரசம் அதனுள்விட்டு 10-வது மாதம் உவர்க்காட்டில் விளைந்திருந்த அண்டச்சுன்னம் இதுவே சிவசுன்னம் அணுப்போலே ரெண்டு தூவி கடவுளைப்பூசித்து முட்டையின் மேல் மூடி சீலைசெய்து புடம்போட புண்ணியவானே உருகி மணியாயிருக்கும் நிறைகுறையாது வைத்த எடை சரியாயிருக்கும் சூரியன் ஒளிபோல் பிரகாசிக்கும் இனி உனக்கு ஒரு குறையுமில்லை இம்மணியை அம்பாள் முன்வை. இந்த ரசமணி பரபிர்ம ரூபம். உலகமீதில் ஆசை வைக்காதே சாவகாசமாய் உன்அருளில் நில்

இந்த ரசமணிக்கு சாரணைசெய் பதினாறுதரந்தான் போதும் இம்மணிக்கு வேகம் மெத்தவுண்டாகும் தங்கத்தில் பதினாறு, லோகத்தில் பதினாறு தரம் புடம்போட மணி வைத்த இடையே இருக்கும். பின் சூதத்தில் 16-தரம் புடம்பேடு. குளிகையை அடக்கி மெல்ல கும்பி உன்னைத்தூக்கும் ஆகாச வீதி ஏறு. உன் ஆகாயத்தில் அம்பாள் வீற்றிருப்பது தெரியும் கண்டு தெண்டம் செய் பதி நோக்கி அருளில் நின்று தாயைக்கண்டால் கோடி வித்தை ஆடலாம் என்று லாடர் 101-ல் சொல்லப்பட்டிருக்கிறது.

லாடர் 101-ல் காமமே மிஞ்சிபல்லோ இடிமின்னலாச்சு என்கிறார்.

எதற்கு காமமிஞ்சி இடிமின்னலாச்சு என்பதைத் தெரிய வேண்டும்

அதற்காக பூகோள சாஸ்திரத்திலிருந்து
சில விஷயங்கள் இங்கு எடுத்து எழுதப்படுகிறது

சூரிய உஷ்னத்தால் சமுத்திரஜலம் நீராவியாக மாறி ஆகாயத்தில் ரவி மேகமாகிறது. மேகத்தில் பாசிட்டிவ் (டர்ள்ண்ற்ண்ஸ்ங்) நெகட்டிவ் (சங்ஞ்ஹற்ண்ஸ்ங்) என்று இரண்டு சக்தியுண்டு. பாசிடிவ் நெகட்டிவ் என்ற இரண்டு விதகரண்டு உள்ள இரண்டுமேகங்களை காற்றுத்தள்ளுவதால் இரண்டும் சமீபத்தில் வர இரண்டு கரண்டுகளும் முட்டிக் கொள்வதால் இடியும் மின்னல்களும் ஏககாலத்தில் உண்டாகிறது. வெளிச்சம் வெகு சீக்கிரம் பரவக்கூடியது. சப்தம் மெதுவாகப்பிரயாணம் செய்யக்கூடியது ஆகையால் நாம் முதல் முதல் மின்னலின் வெளிச்சத்தைப் பார்க்கிறோம். கொஞ்ச நாழிகை கழிந்தபிறகு இடியின் சப்தத்தைக் கேட்கிறோம். இடியில் நீரிடி என்றும் நெருப்பிடி என்றும் இரண்டு விதம் உண்டாகின்றது. எல்லா இடியும் மின்னலும் பூமியில் விழக்கூடியதல்ல. மிகவும் வேகமாக இடிக்கும் இடியும், மின்னலும்தான் பூமியில் விழும்.

உலகத்திலுள்ள சகல வஸ்துக்களிடத்திலும் பாசிட்டிவ் (டர்ள்ண்ற்ண்ஸ்ங்) நெகட்டிவ் (சங்ஞ்ஹற்ண்ஸ்ங்) என்ற கரந்தம் (ஙஹஞ்ய்ங்ற்) உண்டு.

இந்தப்படி பள்ளிக்கூடங்களில் பாடம்
சொல்லிக்கொடுக்கப்படுகிறது.

இதிலிருந்து நாம் தெரிந்துகொள்வது என்ன வென்றால் பாசிட்டிவ் நெகட்டிவ் என்ற 2-வித சத்துக்களுக்கும் ஆண் பெண் என்றுபெயர் அதாவது சத்தி சிவம். அவை 2-ம் இரண்டு வித மேகமாகவிருக்கிறது இரண்டுக்கும் காமம் மிஞ்சி இணைவதால் இடி மின்னலுண்டாகிறது

இங்கிலீஷ் சயன்சில் சூரிய உஷ்ணத்தால் சமுத்திர ஜலம் நீராவியாக மாறி ஆகாயத்தில் பரவி மேகமாகின்றது என்று சொல்கிறார்கள் சமுத்திர ஜலம் ஆவியாகப் போனால் மேகத்தில் உப்பு ஏது?

சமுத்திரத்திலுள்ள உப்பு ஜலத்தையும் மீன் நண்டு நத்தைகளுடன் மேகமானது அள்ளிக்கொண்டு போவதால் மழை பொழியும் போது மழையுடன் மீன்கள் விழப்பார்த்திருக்கிறோம். அதனால் உப்பு ஜலத்துடனேயே மேகம் கொண்டுப்போகின்றது என்று தெரிகிறது. சூரிய உஷ்ணத்தினால் நீராவியாகப்போய் மேகமாகின்றது என்றால் தமிழ் சாஸ்திரங்களில் சமுத்திரத்திலுள்ள உப்பு ஜலத்தை மேகம் கொண்டு போவதாகவும் மேகமண்டலத்துக்கு மேலேயுள்ள சூரியன் காங்கையால் மேகத்திலுள்ளிருந்த ஜலத்தை நீராவியாக உறுஞ்சிவிடுவதாயும் உப்பு ஜலத்திலிருந்த உப்பு மேகத்தில் தங்கிவிட்டதாயும் அந்த உப்பு மேகத்திலிருந்து களிஉப்பாய் விளைவதாயும் மேற்படி உப்பு உள்ள மேகங்கள் இணையும்போது கக்குகின்ற உப்பல்லோ இடியாய் வீழும். உவர் நிலங்கள் அந்த இடியை கிரகிக்கும் சத்தியாகிய பூமியில் ஈசனாகிய இடி ஐக்கியப்படுவதால் பூமியில் கெற்பமாகி அண்டம்போல் உறைந்துபோகும். இதுவே கரந்தமென்ற உப்பு என்று அகஸ்தியர் சிவமுப்பு குருநூல் 50-ல் சொல்லப்பட்டிருக்கிறது

அதற்கு ஆதாரவாக பாட்டையும் கவனியுங்கள்.

பரிபாஷை 500-ல் மறைத்த சிவ உப்பு

உவர்பூமியில் இடிவிழுந்து அண்டமாகிய காந்தமென்ற விஷக்கல் விளையும் விதம். இதுவே பிர்மகற்பம் அகஸ்தியர் சிவமுப்பு குருநூல் 50-ல்

வெளிமேகம் சாகரத்தில் நீரையுண்டு
வெட்டவெளி பானுவினா லுருஞ்சி நீரை
களியுப்பாய் மேகமது விளைந்து இணையும்போது
கக்குகின்ற உப்பல்லோ இடி உப்பாய் வீழும்
அளர்நிலத்தி லுவர்நிலங்கள் கிரக்கும்பார்
அடியிலே கொள்ளாது நடுவேநிற்கும்
கொளுவடிவிற் போகாம லிடையிற்றானே
கொண்டதென்ன சத்தியவள் கிரகித்தாளே

கிரகித்த சத்திக்குள் ளடக்கமான
ஈசனவ னூடுநவிக் கொள்ளும்போது
தருவான சத்தியவள் ஓடொட்டாமல்
தன்னிடத்தே அயிக்கியமாய்த் தருகவைத்தாள்
அறிவித்தே விதினாலே ஈசன்றானும்
ஆத்தாளுக்குள் அயிக்கியமே யாகிவிட்டார்
கிரகித்த மாத்திரத்திற் சத்தியங்கு
குழிதங்கி அண்டம்போல் தோய்ந்துபோடும்
(குழிதங்கி-கெற்பம் தங்கி)

தோய்ந்தஉப்பு அண்டமாம் அரிதேயாகும்
துகளவதின்மே லுமல்லோ இடியாய்வீழ்ந்து
சமைந்ததோ ரங்குலமாய்ச் சாடிநிற்கும்
சத்தையன்றோ சத்தியவள் விடமாட்டாள்
சமைத்தெடுக்க சத்திநிர மானவவைக்காத்தால்
அதின்மேலே பாரிலன்றோ சவடாய்ப்பூர்க்கும்
நிறைந்தயிந்தப் பாங்கல்லோ மறைப்பதாகி
நிகழ்த்தினேன் பரிபாஷை தன்னில்த்தானே

இடி பூமியில் வீழ்ந்து விளைவதே காந்தமென்ற உப்பு.

அன்றிடித்த உப்பல்லோ இடியாய் வீழ்ந்து
ஆசைவத்துச் சத்தியிட மமர்ந்த உப்பு
இன்றன்றோ சல்லிவே ரண்டமோடி
இருதீறாய் பிருமுன்றாய்ச் சவுடுமட்டும்

நன்றுருகத் தன்வியே நாடிநின்று
காந்தமென்ற உப்பல்லோ எடுக்கவேண்டும்
என்றுயா னுரைத்தினால் சித்தரெல்லாம்
என்மேல் கோபம்வைத்தார் சிவனென்றேனே

அவனுடைய உத்தரவினால் இந்த மர்மத்தை வெளியிட்டேன் என்று அகஸ்தியர் சிவமுப்பு 50-ல் சொல்லுகிறார்.

சட்டைமுனி சொல்வதை கவனியுங்கள் இடிக்குச் சட்டம்

முப்பூவி னாலே முடிக்கலாம் வாதம்
முப்பூவி னாலே முடிக்கலாம் யோகம்
முப்பூவி னாலே முடிக்கலாம் ஞானம்
முப்பூவை விட்டால் முடியாது பாரே.

மேகமும் சமுத்திர ஜலமும்.

பாருநீ சமுத்திர நீரது தன்னை
பாருநீ மேகம் பதரிபி னாத்து
பாருநீ ககன மார்க்கத்தி லேகி
பாருநீ வாய்வால் பகுத்திட உப்பே.

அண்டமதான அக்கினி உப்பு இடியினால் உண்டாகும் விதம்

இதுவே இடியுப்பு, ஆகாய உப்பு, காந்தமென்ற உப்பு

உப்பு வெடித்து ஒடிந்து யிடியது
அப்புவின் ரூபம் அதுதானே யக்கினி
செப்பிய பூமியில் சேர நுழைந்து
அப்பது விந்து அண்டம தரச்சே.

அண்டம தான அக்கினி உப்பை
கண்டறி யார்கள் காசினி மூடர்
பிண்ட மதனிற் பிறந்தது காணார்
சண்டனைச் சேர்வார் சாஸ்திரம் பார்த்தே.

முப்பு என்பது

ரவி - மதி - அக்கினி 3-ஆகப் பிறந்தது

பிரித்தது உப்பு ரவிமதி யங்கி
பிரித்ததே யிடைபின் சுழியது வாக
குறித்தே முப்பு சரக்கிது மூன்றும்
விரித்தது பாரு வேண்டிய தாடுமே.

ஆகாய விந்து என்பது இடி.

இடியால் உவர் பூமியில் ஜெனிக்கும் உப்பே முப்பு என்கிறார்.

மார்க்க மாயம்பர வானத்தின் விந்துவால்
தீர்க்கமாயுவ ருப்புச் செனித்திடும்
பார்க்கும். யோக பரம்பரை வாதிக்கு
யேற்க வாகு முப்பு யீதென் றுரைத்திடே.

ஆண் பெண் உற்பத்தி விபரம்

சகலருக்கும் பஞ்சபூதம் ஒன்றுதானே

ஆணாகவும் பெண்ணாகவும் பிறப்பதற்கு காரணம் யாது?

பூதம் 5-க்கும் விபரம்

பிரிதிவு அப்பு தேய்வு வாய்வு ஆகாயம் எனப்படும் பஞ்சபூத அளவு பிரிதிவு 1 1/2, அப்பு 1 1/4, தேய்வு 1, வாய்வு 3/4, ஆகாயம் 1/2.

மானிடகெற்பத்தில் ஆணாகவும் பெண்ணாகவும் ஜெனிக்கும் விதம்

அகஸ்தியர் மெய்ஞானம் 100-ல்

கூறான அஞ்சுபஞ்சு பூதந்தன்னிற்
குமரனென்றும் குமரியென்றும் பேருண்டோசொல்
தேறான தொன்றுமில்லை தெளிந்துபாரு
தெளிவான ஆண்பெண்தா னேதென்றாக்கால்
வீறான பிரிதிவியும் அப்புங்கூடி
மிகுந்தாக்கால் பெண்ணாச்சு பின்னுங்கேளு
வாறான ஆகாசங் காற்றுந்தீயும்
பரிவாக மிகுந்திருந்தால் புருஷனாமே

பிரிதிவு அப்பு அதிகமாயும் அதாவது தேய்வு வாய்வு ஆகாயுத்தை விட அதிகமாயும், தேய்வு வாய்வு ஆகாயம் 3-ம் குறைந்து கெற்பமாயமைவது பெண். பிரிதிவு அப்பு குறைந்து தேய்வு வாய்வு ஆகாயம் அதிகப்பட்டது ஆணாகவும் கெற்பம் தரிக்கும் என்று அகஸ்தியர் மெய்ஞானம் 100-ல் 23-வது பாட்டில் சொல்லப்பட்டிருக்கிறது.

(அதுபோல்)

சத்திஉப்பு சிவஉப்பு ஜெனிக்கும் விதம்.

மனிதகெற்பம் போல் மேகத்திலும் பூமியிலும் சத்தி சிவ உப்பு உண்டாகிறது என்பதற்கு ஆதாரம். பதஞ்சலி முனிவர் சொல்வதை கவனியுங்கள்.

உன்னு மங்கயர் கெற்பக் குழிக்குளே
பெண்னு மாணும் பிறந்தது போலவே

விண்ணி லிடி மின்னல் மழைத்துளி
தண்ணி லேதருங் காரமுஞ் சாரமே.

சத்தி-சிவ உப்புக்கு நாதம்-விந்து என்றும், சாரம் காரம் என்றும் பெயர்.

சிங்கி என்பது

சத்திஉப்பும் சிவஉப்பும் சேர்ந்தால் வங்கமென்றும் தசதீட்சை பெற்றால் சிங்கி என்றும் பெயர் என்று ரோமரிஷி 3-ல் சொல்லப்பட்டிருக்கிறது. சகலத்தையும் நீற்றும்.

மடையன் என்பது

இலக்க சௌமிய சாகரத்திற்கு உரை எழுதிய ஒரு கனவான் மடையன் என்பது வெடியுப்பு என்று எழுதியிருக்கிறார் அது தப்பு சத்திஉப்பும் சிவஉப்பும் ஒன்றாய்ச் சேர்ந்ததற்கு மடையன் என்ற பெயர் என்று திருவள்ளுவர் நவரத்ன வைத்திய சிந்தாமணி 500-ல் 444-வது பாட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. சகலத்தையும் நீற்றும்

இடியுப்புக்கும் சிங்கி என்று பெயர்

இதிலிருந்து நாம் தெரிந்துகொள்வது என்னவென்றால் வாதத்திற்கு ஆதிச்சரக்கு சிங்கி என்றும் பல தைலம் சிங்கியல்ல இடியால் உருகி கீழே பாய்ந்த தாதே சிங்கி என்று போகர் 100-ல் சொல்லப்பட்டிருக்கிறது. இடி விழுந்த வேகத்தால் இடியின் தாதிலுள்ள காரமாகிய விந்தும் உவர் பூமியின் சாரமாகிய நாதமும் ஒன்றுபட்டு மனிதகெர்ப்பம் வளர்வதுபோல் 10-மாதமும் பூமிக்குள் வளர்கிறது. இதைத்தான் தொடக்கூடாது கொன்றுபோடும் என்று போகர் 7000-த்தில் 4-வது காண்டம் 38-வது பாட்டில் சொல்லப்பட்டிருக்கிறது.

இதுவரை பூமியில் விழுந்த இடி மழை காற்றால்
அண்டமாகிய சிவஉப்பும் பிண்டமாகிய சத்தி என்ற
பூநீரும் விளைவதாகத் தெரிந்து கொண்டோம்.
இனி பாறைஉப்பு விளைவதைத்தெரியவேண்டும்.

பாறைஉப்பு.

அகஸ்தியர் பரிபாஷை 500-ல்

தாவான பாறைஉப்பைச் சொல்லவென்றால்
சமுத்திரத்தின் பாறையிலே தானுண்டாகும்
வாவான கல்லுப்பென் றிருக்கும்போம்

என்று மட்டும் சொல்லியிருக்கிறார். எப்படி சமுத்திரத்தில் உண்டாயிற்று என்பதைச் சொல்லாமல் ஒளித்து விட்டார். அதை நான் கண்டு பிடித்துச் சொல்லுகிறேன்.

இனி சமுத்திர ஜலத்தில் விழுந்த இடி மழை காற்றால்
சத்தியாகிய பாறைஉப்பு விளைகிறது என்பதற்கு
ஆதாரம் கவனியுங்கள் இதுவும் பிண்டம்

கடல் ஜலத்தில் இடி, மழை, காற்று
அதாவது காற்று வன்னி அப்புவுங் கலந்து

புணர்ந்து யுறவாகி சுத்த
கங்கையான பாறையுப்பு விளையும்விதம்

இதை நாத விந்து குரு என்கிறார்
அப்படியானால் பாறைஉப்பில் நாதம் விந்து இரண்டும்
இருக்கிறது என்பதைக் குறிக்கிறது.

பூநீர்சத்தி யடி நாதம் பூநீரதும் பூவழலையெனும் புளியதாம்
புவியில் மானிடர்கள் மலஜலமெனிலும் புகலுவா ரீவை புட்டபியலா
வருணீர்நாதமது சுத்தகங்கைவழிந் தோடும்மூர்கட் ஜகமுழுதுமா
அகாரமென்றபுளி, யகாரமென்றபுனலு, மோகோகோடி பொருட்பெயரதாங்
காணீரோ கடலிற் பாறையானதுவுங் காற்றும் வன்னியுமப்பூவுமாய்க்
கலந்தே புணர்ந்துயுறவாகி யின்பரசக் காந்தி விசுமொவி காணீரோ
ஞானியான பெரியோர்கட் கண்டுமதி யான்விளங்கிடினுமுப்பெனில்
நாலுமே பொருளுமாலுந் தேடறியா நாதவிந்து குருவாண்டையே.

இடி-மழை- காற்று
மூன்றுமொன்றாகுங் காலமறிய

ஐப்பசியிமது கார்த்திகையளவி லண்டரண்டமிருகூறினா
லுற்பகங்களெனும் வன்னிவாயுவுஜல மூன்றும் ஒருவதாகிடுங்
கற்பவாரி கடல்நீரிற் பாய்ந்துகனற் காற்றுமா மழையுங் கறுதினாற்
சொற்பமல்ல கடலாசிதங்களுமே சூழ்ந்துவாறுதி சுழலுமே.

கடல் ஜலத்தில் இடி, மழை, காற்று
விழுந்து அதாவது
வாய்வு வன்னி ஜலம் மூன்றால் தயிர்போல்
உறைந்து பாறையுப்பாவதெனல்.

சுழலும்வாயு ஜலம்வன்னி மூன்றுமது
சுழன்ற முர்தத்தயிற் போன்றதாம்
வழலையுப்பு வெளுர்வாரி கட்டிடினு
மலைகட் போற்கடலில் வாசமாம்
பொழுதறு னன்படபுன லுங்கட்டியது
புவியிர் சித்தரெடுத்த னைவர்வாழ்
முழலை யஞ்சுபலமுப்பெ டுத்துணர்த
லூட்டும் பாரைக்குளிக் கல்லிலே

பாக்கி திருவள்ளுவர் நவரத்தின சிந்தாமணி 800-ல்
பார்த்துச்செய்து கொள்ளவும்

பாறை உப்பு எடுக்குமிடம்.

இராமநாதபுரம் கடல்கரையிலிருந்து 100 - மைல்
அதாவது ஒரு கடிகை தூரத்தில் கடலில்
முத்துச்சிப்பி எடுக்குமிடத்தில் பாறை உப்பு

பாறையாக விளைந்திருக்கிறது இராமநாதபுரத்திலுள்ள ஜோனகர ரிவாரெனல்

கரைக்குள்ளாமதில் ராமநாதபுரங் காணுமக்கடலிற் கடிகைபாற்
றுரவுங்கடலிற்போயெடுக்குமவர் ஜோனகற்குவழி தோன்றிடும்
வாருவார்களெனில் முத்துச்சிப்பியது வாரும்போது கடற்பாறையுந்
தேருங்கல்லில்நுரை ஜீவரத்தினம் பசை செங்கதிற்பட வெண்ணொளிவதே.

இரமநாதபுரம் கடற்கறையில் சாரிபோய் சவுக்காரிகள் வாருகிறதாக உத்தமர்கள் சொல்வது.

இராமனாதபுரம் கடற்கரையிலிருந்து 100-மைலில் இடி மழை காற்று 3-ம் கூடி சமுத்திரத்தில் விழுந்து பாறையுப்பாய் விளைந்திருக்கிறது

தூக்கமேதுசுகபோகமேது நடைதுடியுமேது கோபமேதுகா
ணுக்கிரமேது மழைகாற்றுமேது ரவியோட்டமேது விழிநாட்டமும்
வாக்கிரமேது சிவவிசனமேது மதிவாய்களேது கலிபாடவு
மக்கரைக்கடலில் ராமநாதபுர மருகேவாரி தசகாதமே

வாரியானகடலான வேரக்கரை வாசமாய்ப்பெரியோர் வருதலாற்
சாரிபோவார் சவுக்காரியானவர்கட் சத்தமிட்டுணர்வற் தாட்திரந்
தோரிபோலுமேயுணர்ந்து கூறுவார் குத்தமர்கண்மொழி கேழ்விபார்
பாரீர்பாரீர் பசைபாலைநிலமெனவும் பார்த்தெடுத்துமே பாளிப்பாரே

யாத்திரைவாசிகளறிவார்களெனல்
உப்பரிந்தவர்கள் யோகிவாசிகனு முலகமாமிது வீரேழுமே
செப்பொணாதவர்கள் யாத்திரைவாசமெனிற் றீர்த்தமாடிடுவற் செய்திகாண்
சுப்ரமேபெரிதுதனியவேதனிய சுத்தவரனதொரு தபசிகட்
கைப்புமுப்புக்கடலுப்பு வாமெனவுங் கைவசப்படுதலவிழ்தமே

தேவர்களே இவ்வவிழ்தம் புசித்தார்கள்
அமிழ்தமண்டலமுமானபின்ஜடல மானதால் வபிரவச்சிர
அமிழ்தமுண்டவர்களாருமில்லை ஜெகமாதிதங்கண்முதற்றேவரு
அமிழ்தமானதிவை யார நிவர்சிவ யாத்திரைவாசிகளுமறிவர்க
அமிழ்தமுண்ட பெரியோர்கட்செந்தூரமு மாடலாம்பரீசவேதையே

தேவர்களருந்திய மருந்து.

சமுத்திரத்தைக் கடைந்து அமுர்தமாக்கி அந்த அமுர்தத்தை தேவர்கள் புசித்தார்கள் என்று பாகவதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

இதனால் வேதைகோடி பாதைகோடி நாதவிந்து
வுவர்சாரங்கோடியெனல்.

வேதைகோடி ரசவாதங்கோடி
ரசமெழுகுங்கோடி தொழிலாகுமாய
வாதங்கோடி ரசவற்கங்கோடி
மணிமாந்தரீகமது கோடிதான்
பாதைகோடி பலகலைகட்கோடி
பரிபாஷைகோடி மாதிபுரியெனும்
நாதவிந்து வுவர்சாரங்கோடி
புவர்நன்மைதுன்மை பறிவார்களே.

பாறையுப்பு உற்பத்தியாகும் விதம் கண்டுபிடித்து எழுதி விட்டோம் பாறையுப்பு ஜலத்தில் கரையாது என்ற அடையாளங்களும் அதுவும் முப்பு என்பதற்கு ஆதாரமும் அதைச்சுன்னம் செய்யும் விதமும் அதனால் சூதச்சுன்னம் செய்யும் விதமும் பாறையுப்பு செயநீரில் சிவஉப்பாகிய இடியுப்புக்கட்டுகிறது இதின் மகிமை மகாமகத்துவம் பொருந்தியது அவைகளை மிக விரிவாய் பின் எழுதப்படும்.

உட்கரு வெளிக்கரு என்பது

ரோமரிஷி 500-ல் உட்கரு என்பது புருஷ சுக்கிலம் என்றும் வெளிக்கரு என்பது பெண் ருதுவாகிய தீட்டம் என்றும் 358, 360-வது பாட்டுகளிலும்.

முதற்கரு என்பது

முதற்கரு என்பது நஞ்சுக்கொடியும் குழந்தையை வளர்த்த வீடு என்கிறார் உன்னை வளர்த்த வீடு பிர்மா என்றும் மனித விந்தாகிய ருத்திரனும் ஸ்திரீயின் நாதமாகிய விஷ்ணுவும் கூடி பிர்மா என்ற வீட்டிலிருப்பதால் பிர்மா விஷ்ணு ருத்திரன் மூன்றும் கூடியது நஞ்சுக்கொடியுடன் கூடிய பை என்று ரோமரிஷி 500-ல் 361, 362, 363-வது பாட்டுகளில் சொல்லப்பட்டிருக்கிறது.

பூமி உட்கரு என்பது உதகம்

சட்டைமுனி வாதகாவியம் 1000-ல் 111-வது பக்கம் 13-வது வரியில் உள்க்கரு என்பது உதகம் என்று இருக்கிறது 14-வது வரியில் உள்க்கருவை விட்டாயானால் பாஷாணம் கட்டாது என்று இருப்பதாலும் அடுத்த பக்கத்தில் உதகத்தால் பாஷாணம் உருகிக்கட்டும் என்று சொல்வதாலும் அதை பூமி உள்க்கரு என்று சொல்லத்தகும்.

அண்டத்திலும் 5 பூதம், பிண்டத்திலும் 5 பூதமிருக்கிறது என்பதற்கு ஆதரவு

அதுபோல் அகஸ்தியர் முப்பு 30-ல் அக்கினியும் வாய்வும் கூடி பூமியின் கீழ் அண்டமாச்சு என்றும் அக்கினியும் வாய்வும் கூடி பூமியின் கீழ்சமரசமான பிண்டமாச்சு இவை 2-க்கும் பலம் ஏதென்றால் மண்ணோடு தண்ணீராச்சு என்பதால் இடி உவர் பூமியில் விழுந்தே அண்டமும் பிண்டமும் விளைந்தது 2-க்கும் பலம் மண்ணும் தண்ணீரும் என்பதால் அண்டத்திலுள்ள பிண்டத்திலும் மண்ணும் தண்ணீரும் கூடியே இருக்கிறது என்பதைக்குறிக்கிறது. அப்படியானால் அண்டத்தில் 5 பூதங்களும் பிண்டத்தில்

5 பூதங்களும் கூடியே இருக்கிறது என்று நன்றாய்த்தெரிகிறது. மனித கெற்பம் உற்பத்தி பற்றி எழுதியதுபோல் பூமியிலும் அண்டபீண்டம் உண்டாயிருக்கிறது என்று தெரிகிறது.

மண்ணல்லோ பிண்டமாச்சு
வன்னியல்லோ அண்டமாச்சு

வாரான மண்ணல்லோ பிண்டமாச்சு
வன்னியல்லோ பூமியின் அண்டமாச்சு
கூறான வக்கினியும் வாய்வுங்கூடி
குடியிருந்தவுவர் நிலத்தைப் பெண்ணென்பார்கள்
நீரான தண்ணீரும் மண்ணுங் கூடி
நின்றதினாற் பெண்ணாச்சு தீயேஆண்
பேரான இவ்விரண்டுஞ் சேர்ந்தபோது பெரிதான
வாதசித்தி பெலத்துப்போச்சே - என்றும்

அகஸ்தியர் முப்பு 30-ல் அக்கினியும் வாய்வுங் கூடி அண்டமாச்சு என்றும் அக்கினியும் வாய்வுங்கூடியே பிண்டமாச்சு என்றும் சொன்னவரே வழலை சூஸ்திரம் 12-ல் அக்கினியும் வாய்வும் கூடியது மண்ணென்றும் மண்ணும் தண்ணீரும் கூடியது பெண் என்றும் சொல்கிறார், இப்படி 2-விதமாகச் சொல்வதால் எதை நம்புவது. 5-பஞ்ச பூதங்களும் கொண்ட அளவைக் குறிக்கிறது.

அப்படியானால் அண்டத்திலும் 5-பஞ்ச பூதங்களும், பிண்டத்திலும்
5-பஞ்ச பூதங்களும் கூடியே விளைகிறது என்று
ஆராய்ச்சியால் தெரிகிறது.

5-பஞ்ச பூதங்களில்

மண்ணும் தண்ணீரும் அதிகப்பட்டது அதாவது அக்கினி வாய்வு ஆகாயம் குறைந்து மண்ணும் தண்ணீரும் அதிகமாய் கூடி விளைந்தது பிண்டம் என்றும், மண்ணும் ஜலமும் குறைந்து அக்கினி வாய்வு ஆகாயம் அதிகமாய் கூடியது அண்டமாகவும் விளைகிறது என்றும் நன்றாய்த்தெரிகிறது.

அண்டத்தில் 5-பஞ்சபூதங்களும்
பிண்டத்தில் 5-பஞ்சபூதங்களும் இருக்கிறதா?

என்று ஒருவர் உங்களை ஒரு கேள்வி கேட்டால்
என்ன சொல்லுவீர்கள்?

5-பஞ்ச பூதங்களும் கூடியே உப்பு
விளைந்தது என்று சொல்லுங்கள்.

அதற்கு ஆதாரம் பதஞ்சலி சொன்னதை கவனியுங்கள்

அஞ்சு பஞ்ச பூதமதாகிய அப்பது
மிஞ்சு தீய்க்கி வெருங்குகை வாக்கியம்
துஞ்சு மாம்சிவம் சத்தியின் தீக்ஷையாற்
அஞ்சி டாதது தோஷமுமில்லையே.

துஞ்சு என்பதற்கு உரை:- தூங்குதல், தொழிலின்றி இருத்தல், சோம்புதல், சோருதல், இறத்தல், வலியவிதல், குறைதல், தங்குதல், நிலைபெறுதல், தொங்குதல்,

சத்தியாகிய பாறையுப்பு செயநீரால் சிவஉப்பு தீய்க்கு ஓடாமல் கட்டுப்பட்டு இறந்து தன் சத்தியுடன் நிலைப்பெற்றிருத்தல் எனவரம்.

ஆதியுப்பு-ஆகாயத்திலும்
அனாதியுப்பு-சமுத்திரத்திலும்
என்று ஊர்வசி சொல்வதை கவனியுங்கள்.

ஆதியுப்பு விண்ணினில் அனாதியுப்பு வேலையில்
ஆழிநீரை யுண்டுகெற்ப மாயிருந்த கொண்டலும்
சோதியற்ற நாளில்மேனி சூலுவைந்து மாரியாய்த்
தூறும்வேலை தன்னில்மின்னல் மீறுமம்ப ரத்தினில்
மோதியக்கி னிக்கடாவி வீழுமங்கி யுடன்சுடர்
மூலவிந்து பூமியூடு தானிறங்கு மேலுவர்
சாதியத்த லத்தினிற்ச மாதிகொண்ட தையனே
சத்தியுள் ளடக்கமாகித் தானிருக்கு மீசனே.

சிவஉப்பாகிய வைடூரியக்கல் பூமியில் உலகோர்
அறியாதபடி சமாதியாயும் கல்லுப்பு என்ற பாறை உப்பு
சமுத்திரத்திலும் இருக்கிறது என்று ஊர்வசி
சொல்வதை கவனியுங்கள்.

ஈசனென்றுமுடி வன்னியாதிசூழி யேகமானபரி பூரணம்
இந்துகூடுமொரு மீனமேஷமதி லேயிருக்குமவை போதுமோ
வாசமுண்டுபுவி யாவர்தானுமறி யாதிருந்தசமாதியாய்
வாடிடாதுபின் மலர்ந்திடாதுநிற மாவதென்னவயி டூரியம்
தேசமென்றவுவ ரானபிங்கலைசி வந்தமேனியடி சூரியன்
தேவிமூலவெளி யேமலர்ந்துநிறை திங்கள்சித்திரையின் மாதமாம்
ஊசிநீலமதி யின்றுஆழியிலு றைந்தெழுந்திடுகல் லுப்பெனும்
ஓதுமங்கைநடு வானதென்றுமிடை யுண்மைரனபனிக் காலமே.

ஈசனுப்பை அறியாமல் அலைந்து
சுட்டுப்பொசுக்கும் வாதி ஆசை மிகுந்து
உயிர் ஆவி புலம்பி மெலிதல்.

காலமறிந்தவை தோணாரேதலை கீழேநுழைந்தது காணாரே
காரியவேலையி னூடாரே சிலை யாகவளர்ந்தது பாராரே
மேலையெழுந்திடும் பூநீரே உரமாக முடிந்திடும் நீராலே
மேகஜலப்பசை கூராலே மதி பீஜமதென்பார்கள் பெரியோர்கள்
மூலசுயம்பிவை மூன்றாலே வளர் மூவுலகும் பொருள் தானாகி
மோனமிகுந்திடு மொன்றாலேகவர் கோடிவிளைந்து மண்மேலே
ஞாலமருந்து மரன் பூவை யறியாமலைந்து சுடுந்தோஷி
ஆசை மிகுந்து சடந்தோறுமுய ராவிப்புலம்பி மெலிந்தாரே.

வாயு அங்கி அப்பு மூன்றும் முப்பு.

இது மூன்றும் கூடியே பாறை உப்பாய் விளைந்திருக்கிறது

ஊர்வசி

மெலிவிலாத வாயுவங்கி யப்புமூன்று முப்பதாம்
வெளியில்ரெண்டு குழியிலொன்று மீனமேஷ மல்லவோ
செலவிலாத நாதநீரில் மேவியாடுந் தீட்சையாம்
தேவதேவ நீயலாது செம்பொன்வென்ன அற்பமாம்
மலைவிலாத யோகமு மெஞ்ஞானமுங்கை மேல்வரும்
மாசிலாத சூதராஜன் வானிலோடி யேவரும்
அலையின்மீதி லண்டபிண்டம் நாதமேக நீரடா
அங்கிகண்ட வழலையுப்பு ஆதியான குருவிதே

பதஞ்சலி

ஈசனுப்பு பூமியில் வெளிவரும் காலம் அறியாமல் வாதி மயங்குதல்

தாக்கும் பூமியைத் தானறிந் தாலல்லோ
வாய்க்கு மீசன் மகிமையுப் பாமது
காய்க்குங் காலத்திற் கண்டிடா வாதியை
யேய்க்கு மேய்க்கு மிறக்குமு டலுமே

உப்புந் திரைகடன்மே லூசரமு மண்மேலே
அப்புங் கனலிரண்டு மாகாய-மிப்புவியில்
வாதிகாள் சூத மடக்கறியீர் வீண்காசுட்
டுதினா லுண்டோ உயிர்.

உரை

அப்பும் கனல் 2-ம் கூடியது

ஆகாய உப்பு இது விளையும் விபரம்

இது உவர்பூமியில் அண்டமாய் ஜெனித்திருக்கிறது.

இதுவே பிர்மகற்பம்

பாறை உப்பு சமுத்திரத்திலும், ஊசரமாகிய பூநீர் உவர்பூமியிலும் அப்பும் கனல் 2-ம் ஆகாயம் என்பதால் ஆகாய உப்பில் அப்பும், கனல் 2-ம் இருப்பதைக்குறிக்கிறது. அப்படியானால் ஆகாய உப்பு என்பது எது? ஆகாசிவனார் உப்பு சூக்குரல் வந்தாலும் வரட்டும் இதுதான் அண்டம் என்று ரோமரிஷி 50-ல் சொல்லியிருக்கிறார்.

அப்படியானால் அண்டம் என்பது எது என்று தெரிய வேண்டும்

அண்டமாகிய அக்கினியுப்பு பூமியில் பிறக்கும் என்பதற்கு ஆதாரம்

அண்டம் என்பது ஆகாயம், பிண்டம் என்பது பூமி.

அண்ட மதான அக்கினி உப்பை
கண்ட றியரர்கள் காசினி மூடர்
பிண்ட மதனில் பிறந்தது காணார்

என்று சட்டைமுனி சொல்லுவதாலும் பிண்டமாகிய பூமியில் அண்டமாகிய அக்கினியுப்பு இருக்கிறது என்று தெரிகிறது பூமியில் எப்படி பிறந்தது? அகஸ்தியர் 12-ல் வன்னியல்லோ பூமியின்கீழ் அண்டமரச்சு அக்கினியும் வாய்வும் கூடியது இது ஆன் என்றும் அகஸ்தியர் 30-ல் அக்கினியும் வாய்வும் கூடி பூமியின் கீழ் அண்டமாச்சு என்றும் வாய்வினுப்பு தண்ணீரான மார்க்கம் காணார் என்று ரோமரிஷி 16-ல் சொல்வதாலும் வாய்வினுப்பே தண்ணீராகி அக்கினியுடன் கூடி பூமியில் அண்டமாய் விளைந்திருக்கிறது என்று தெரிகிறது. அகஸ்தியர் 50-ல் கொண்டலிடி உப்பதனால் அண்டமரச்சு என்று சொல்வதால் அண்டம் என்பது எது? ஸ்படிகமென்ற அண்டமெல்லாம் பிறமகற்பம் என்றும் பிறமகற்பம் என்பது கொண்டலினால் அவதரித்த குருஎன்றும் குடியிருக்குமிடந்தானே பூமியாகுமென்றும், அகஸ்தியர் பரிபாஷையில் சொல்வதாலும் கொண்டல் என்பது மேகம், மேகத்தில் இடியுப்பாய் விளைந்து பூமியில் அண்டமாய் குடியிருப்பதாலும் ஆகாயத்திலே இடியுப்பாய் உற்பத்தியானதாலும் இடியுப்புக்கு ஆகாய உப்பு என்று பெயர். இதுவே ஈசனுப்பு இடியுப்பு பிர்மகற்பம் இது பூமியில் 16 முழத்துக்குள்ளிருக்கிறது. இடியுப்பு 16-முழத்திலிருந்து மாசி பங்குனி மாதம் வளர்பிரை பிரதமையன்று கன்னி துலாம் மீனம் இந்த லக்கினங்களில் பூமிமேல்வந்துபடர்கிறது. அதை எடுத்து இந்த மூன்றையும் சேர்த்து சுன்னம் செய்தால் சூதம் கட்டும் என உரை விளங்குகிறது.

அகஸ்தியர் இலக்கிய செளமிய சாகரம் பற்றி சொல்வதை கவனியுங்கள் முப்பு என்பது முப்பொருள்

முப்பு வென்றது முப்பொரு ளிக்குரு
தப்பு வாகவே சாற்றினர் தன்மையோர்

செப்பு வேனிதைச் சித்தத் தடக்குவீர்
இப்பு வாக வீறைபுவி மாந்தரே.

முப்புவென்று வெகுகோடி முனைபுட வலைகின்றார்
கைப்படுமோ லெகுவாகக் கர்த்தாவி னருளல்லால்
ஒப்புதலாய்ச் சித்தர்மொழிகளை யுற்றுணர்ந் தறிந்தன்பின்
கப்புடனே கரவெனவே காட்டிவைக்குங் கண்டறிந்துகொள்ளே

கண்டறிவாய் மாணாக்கா கர்த்தாவி னருளாலே
விண்டுநீ யறிந்தாலே இலக்குமியும் விலகாளே
மண்டலத்தி லுன்றனைப்போல் மாந்தரில்லை காந்தமுடன்
தொண்டுசெய்து பார்ப்பாயால் சுத்தமுடன் சித்திபிதே.

முப்பு முப்பென முக்கோடி வாதிகள்
ஒப்பி யொப்பி யுரைக்கலுற் றாரே
செப்புஞ் சூட்சந் தெரிந்துண ராமலே
மப்புக் கொண்டு மடையருளறுவார்

உரை

முப்பு என்பது மூன்று பொருள்

முப்பு என்பது மூன்று பொருளாகும் தெரிந்தவர்கள் மறைத்துக் கூறிவிட்டார்கள் இதை நான் சொல்லுகிறேன் உன்மனதில் அடக்கிவை மாந்தரே! என்றும் முப்புவை கண்டுபிடிக்க வெகுகோடி மாண்பர்கள் நுட்பமான ஆராய்ச்சியுடன் அலைகின்றார்கள். கர்த்தாவின் அருள் அல்லாமல் லெகுவாக கைவசப்படுமோ ஒப்புதலாய்ச்சொன்ன சித்தர் மொழிகளையுற்று உணர்ந்து அறிந்ததின் பின் தெளிவாகத்தெரியும். மாணாக்கா! கடவுளுடைய கிருபாகடாக்ஷித்தால் நீ முப்புவை அறிந்து கொண்டால் மகா லக்ஷ்மியும் உன்னைவிட்டு அகலாதிருப்பாள்.

உனக்கு நிகர் யாருண்டு

இந்த உலகில் உன்னைப்போல் மாந்தரில்லை. பெரியோர்களுக்குத் தொண்டுசெய் தவறாது சித்திக்கும். முப்பு முப்பென்று மூன்றுகோடி ரசவாதிகள் மர்மத்தை அறியாமல் ஒன்றை ஒன்றாக நினைத்து உரைக்கிறார்கள். நான் சொல்லிய சூட்சம் தெரிந்து உணராமல் மடையர்கள் கண்டபடி உளருகிறார்கள் என்று அகஸ்தியர் சொல்வதால்சித்தர்கள் சொன்ன வாக்கியங்களை யுற்றுணர்ந்து சொல்லில் மறைத்த சூட்சமங்கள் உங்களுக்கு விளங்கும்படி நான் கண்டு பிடித்து எழுதியிருப்பதை கவனியுங்கள் விதியாளிக்கு விளங்கும்.

பதஞ்சலி

அண்டம் என்பது இடியுப்பாகிய சிவஉப்பு
பிண்டம் என்பது சத்தி உப்பாகிய பூநீர்
இது 2-ம் பூமியில் உண்டாகிறது.

அண்ட மாவது கோழியி னண்டமோ
பிண்ட மாவது தான்றலைப் பிள்ளையோ
வண்ட ரேயிது ரண்டையு மார்க்கமாய்க்
கண்ட போதல்லோ காண்பது சொர்ணமே

அகஸ்தியர் இலக்க சௌமிய சாகரம் 1000-ல்

மண்ணி லுற்ற மதியொளி வீந்தது
தண்ணீ ருற்ற தயங்கொளி வீந்தது
நண்ணி ரண்டு நடிந்தது சேர்ந்திடில்
எண்ணு மெண்ணமெல் லாமெழின் மாவைஷியே.

உரை

மண்ணிலுற்ற மதியொளி வீந்தது என்பது இடியினாலுண்டான கரந்தமென்ற சிவஉப்பு என்றும், தண்ணீருற்ற தயங்கொளிவீந்தது என்பது சமுத்திரத்தில் இடி மழை காற்றால் விளைந்த சத்தியாகிய பாறைஉப்பு என்றும், பாறையுப்பு மூத்தவள் பூநீர் இளையவள் இது இரண்டும் சேர்ந்திடில் நீ எண்ணிய எண்ணமெல்லாம்குற்றமற சித்தியாகுமென்று அகஸ்தியர் இலக்க சௌமிய சாகரம் 1000-த்தில் சொல்லப்பட்டிருக்கிறது சௌமிய சாகரப்படி முப்பு முடிக்கும் முறையை பின் விரிவாய் எழுதப்படும்.

இதற்கு ஆதரவாக

பதஞ்சலி முனிவர் சொல்வதை கவனியுங்கள்

காந்த மலருங் கடலுப்பு முறவானால்
ஏந்து தனமிரண்டு மெய்தாரதோ–காந்தமலர்
காட்டிலே பூக்குங் கானலிலே காய்காய்க்கும்
நாட்டிலே கண்டிருப்போம் நாம்.

உரை

காந்தமலர் என்பது இடியினாலுண்டான சிவ உப்பு. கடலுப்பு என்பது சமுத்திரத்தில் இடி மழை காற்றால் விளைந்த பாறைஉப்பு. இது இரண்டும் சேர்ந்தால் இரண்டுவித தனமும் உனக்கு கிடைக்கும் என்கிறார்.

குபேரநிதி என்பது 9-வகை தனம்

அவை விபரம்:- பதுமம், மாபதுமம், சங்கம், மகரம், கச்சபம், முகுந்தம், நந்தம், நீலம். கர்வம், ஆகிய 9-வகைப்பட்ட குபேரநிதி எனல்.

இதில் 2-வித தனம்:- சங்கநிதி, பதுமநிதி முதலியவைகளை எளிதிலடையாலாமென உரை விளங்குகிறது.

பதஞ்சலி

இடியுப்பும் பாறை உப்பும் சேர்க்கும் விதம்

ஆழி கடைந்தமுதமது ஆக்கறியா ரச்சலத்தில்
ஊழிபர லுப்பையெடுத் தூட்டறியா–ரேமுசட்டை

வாங்கிரசங் கட்டறியார் வாதிகடாம் வையகத்திற்
றூங்கிவீழு வாரெனவே சொல்

உரை

சமுத்திரம் கடைந்து அமுர்தம் ஆக்க அறியார்கள் என்றால் சமுத்திரத்திலுள்ள பாறை உப்பைக் கடைந்து அமுர்த ஜலமாக்கி ஊழி பரலுப்பாகிய ஈசலுப்பை தீட்சை செய்து சுன்னம் செய்தால் சட்டை நீக்கி ரசத்தைக்கட்டும் என்று தெரிகிறது.

பாறை உப்பில் ஜெயநீர் பிரித்தால் பிரணவநீர் என்றும்
சுத்தகங்கை என்றும் அமுர்தம் என்றும் பெயர்.
அது செய்யும் விதம் பின் விரிவாய் எழுதப்படும்.
அகஸ்தியர் பரிபாஷை 500-ல் 1-வது காண்டம் 72-வது பாட்டில்

காந்தமலரும் கடலும் சேர்ந்தால்
கரைகாணா வாதசித்தி கைக்குள்ளாமே

என்றும் சொல்வதால் காந்தமலர் என்பது இடியுப்பு என்றும் கடல் என்பது பாறை உப்பைக் குறிக்கிறது என்றும் உரை விளங்குகிறது. இது இரண்டும் சேர்ந்தால் வாதம் சித்திக்கும் என்கிறார்.

சட்டைமுனி தீக்ஷை 200-ல் யோகதீக்ஷையும்
முப்பு தீக்ஷையும் சொன்னதால்
அதை திருமூலர் கிழித்துவிட்டார்.

அதற்காக உரோமரிஷியும் சட்டைமுனியும் கூடி கலந்து இந்தப்பதினாறு பாடப்பட்டதாம். இதில் யோகரகசியங்களும் முப்பு விளையும் ரகசியங்களும் சொல்லப்பட்டிருக்கிறது.

உரோமரிஷி
வகார சூஸ்திரம் 16.

தந்திமுகத்தான சதங்கைத்தாள் பாதங்காப்பு
ககலபொருளாகிநின்ற தாயார்காப்பு
முந்திபுரையென்முதனூ லைம்பதுக்குள்
மூலமுதற்றிரிகோண வாசிவரதஞ்
சுந்தரன்போலறிவுடைய மக்களுக்குத்
தொடுகுறியுமிடுநலமுந் தோணுந்தோணும்
இந்தமுறைபதினாறுஞ் சொன்னேன்ரோம
ரிஷிநூலுக்கெதிர்நூலொன் றில்லைதானே (1)

தானென்ற மூலமுத லாறுவீடு
சாகரத்தின்கோட்டையிலே சார்ந்துநிற்கு
மூனென்றவளையமடா திரிகோணந்தான்
உற்றுப்பார்பவளநிறம் போலிருக்கும்

வானென்றவீட்டினுள்ளே கணேசன்றானும்
வல்லபையும்வீற்றிருப்பா ளதனினுள்ளே
நானென்றுமிவரையல்லோ பூசைபண்ணி
நலமாகசிவயோக நலம்பெற்றேனே (2)

விந்துநாதம் கூடியது சுழிமுனை

பெற்றசுழிமுனைதானே விந்துநாதம்
பேதமில்லைமேல்மூலத் தடையாளந்தான்
உற்றதிரிகோணமதில் சீவாத்மாவுக்கு
ஓரெழுத்துமீரெழுத்துங் கீழ்மேலய்யா
பற்றிநின்றரவிமேலே மதிதானிற்கும்
பதிகடந்தவராகாசம் பிரமபீடம்
முத்தியறிந்தவன்யோகி ஞானியாவான்
முனைமூக்குமத்தியிலே முட்டுமுட்டே (3)

முட்டுவதுஓரிதழ்தா மரையினுள்ளே
முக்கோணவளையத்தி னூடுதாக்கி
நீட்டுவது அங்குலந்தா னாலுசென்றால்
நீங்காமல்ரவிமதியு மொன்றாய்ப்போகும்
கோட்டைவிட்டுக்குதியாது வுடலுய்யாது
குறுகாதுநெடுகாது பொறிசொல்லாது
காட்டிலென்னநாட்டிலென்ன யிந்தயோகம்
கண்டவர்க்குமவுனமுத்தி கைக்குள்ளாச்சே (4)

ஆச்சப்பாயிந்தமுறை நவ்வேசிவ்வாய்
ஆதித்தமண்டலத்துக் கப்பாற்சென்றால்
மூச்சப்பாமேலடங்கும் கீழ்நோக்காது
முனைமூக்குப்பிடரிவழிக் குள்ளேயேறும்
நீச்சப்பாசுழியிலொரு மயிர்ப்பாலந்தான்
நினைவுகொண்டுதாண்டாமற் கெட்டுப்போனார்
பேச்சப்பாபேசினதால் வருமோயோகம்
பிராணாயஞாயமெல்லாம் பிசகுந்தானே (5)

பிசகாது அபானத்தில் மலமேகுற்றம்
பேசுகின்றவுதானத்தில் நாடிகுற்றம்
விசையானகண்டத்திற் கபமேகுற்றம்
மேல்மூலவளையில் ஏறாக்குற்றம்
மசையானமனதுக்குக் கியானங்குற்றம்
மையைந்துபோக் - ட்டா லாமேஞானம்
பசியாதுஞானத்திற் பிரகாசித்தாற்
பானமல்லோபதினாறும் பானங்கொள்ளே (6)

கொள்ளயிலேகாரமறிந் துன்னவேனுங்
கோளானவியாதிகண்டு தீர்க்கவேனுந்
தள்ளாமல் ரேசக பூரகமாங் கும்பகந்
தவறாமற்சாதித்துச் சாரவேனு
மெள்ளளவுமனதுபிச காமல்மூல
வேனியிலேகால்நிறுத்தி யேறவேனும்
முள்ளபடியானுரைக்குஞ் சிவயோகத்தில்
ஓமத்திற்கேமதிப்பா புணர்வாயுட்டே (7)

ஊட்டறியாமடையர் கஷாயங்கொண்டு
புத்தளமாய்விபூதிபூசி அடையாளமிட்டு
சேட்டையாய்பலவிதநூல் கற்றுக்கொண்டு
சிவயோகம்வந்ததுபோற் றிரிவாரையா
சாட்டையில்லாபம்பரங்கொண் டாட்டாலாமோ
தண்ணீரென்றெண்ணெயுண்டால் தாகம்போமோ
வேட்டைபெரிதென்று பேய்நாயைக்கட்டி
வேடிக்கைபார்க்கும் வீணர்காணே (8)

காணாதுபசுவுக்கு ஞானயோகம்
கருத்தறிந்துகொண்டாலுங் கைகூடாது
தோணாதுசற்குரு முன்னாகவந்து
சொன்னாலுந்தெரியாது தோசிதோசி
வீணாகவென்மீதிற் சொல்லவேண்டாம்
வெட்டவெளியைந்நூற்றில் விபரமெல்லாம்
பூணாதேபோனாலு மென்மேற்குற்றம்
பிசகாமற்சொல்லிவைத்தேன் பொருந்திப்பாரே (9)

பொருத்தமில்லாபிள்ளைகட்குப் பொருந்தாதப்பா
புதைத்தாலும்பிழைப்பார்கள் பொறிபுள்ளோர்கள்
அறுத்தாலுமறைக்கீரை தழையுமாப்போல்
அவரவர்கள் தன்குலத்தின் படிதானாகும்
கருத்துடனேகற்பத்தைச் சார்ந்தாலுந்தான்
காஞ்சிரங்காயீந்தகதை கடக்கப்போமோ
பெருக்கமிலா முலாம்பழத்தினுக்கு ஆர்தானீயும்
பிடித்துவந்துவிட்டனரோ பேணிப்பாரே (10)

இடி மழை காற்று 3-ம் உண்டாவதற்கு மூலகாரணம் சமுத்திரஜலம்

பேரானசாகரமே பிரமவிந்து
　　பேசுமறைமாற்றுவிக்கு மேகமுண்டு
பூரானகுலமிதுக்கு வசந்தகாலம்
　　நிமிடத்தி லிடி மழையுங் காற்றுமாச்சு
கூரானமுன்றுவித மானதாலே
　　குமுறுகின்றவக்கினியே ஈசன்விந்து
பேரானவாயுவதே மாலின்விந்து
　　பிரமாவின்விந்துமழை பெய்தலாமே (11)

இதிலிருந்து தெரிந்துகொள்வது என்னவென்றால் பிர்மா விஷ்ணு ருத்திரன் 3-ம் கூடியதே முப்பு என்று தெரிகிறது.

வசந்த காலம் என்பதற்கு உரை:- சித்திரை, வைகாசி மாதம்

அதற்குச் ஆதாரம்

ருது 6-க்கு விபரம், ருது என்பது காலம்

சித்திரையும் வைகாசியும்	–	வசந்த ருது, கோடையிடிகாலம்
ஆனியும் ஆடியும்	–	கிரீஷ்ம ருது, காற்றுக்காலம்
ஆவணியும் புரட்டாசியும்	–	வருஷ ருது, மழைக்காலம்
ஐப்பசியும் கார்த்திகையும்	–	சரத் ருது, கூதிர்காலம்
மார்கழியும் தையும்	–	ஹேமந்த ருது, பனிகாலம்
மாசியும் பங்குனியும்	–	சசி ருது, சந்திரன் காலம்

கிரீஷ்ம ருது என்பது முதுவேனிற்காலம், கூதிர்காலம் என்பது பனிக்காற்றுக்காலம், கீழ்காற்றுக்காலம். கோடை என்பது வேனிற்காலம், மேல்காற்றுக்காலம். சந்திரன் காலம் என்பது சந்திரன் பருவம் அதாவது சந்திரன் பருவமடைந்த சக்தி பூறாவும் பூமியில் பாயும் காலம் என்று உரை வருவதால் மாசி பங்குனியில் பூநீர் எடுக்கும்படி 18-சித்தர்களும் சொல்லியிருக்கிறார்கள்.

ஆறுவகை பருவத்தின் விபரம்

சித்திரை வைகாசி	–	இளவேனிற்காலம்
ஆனி ஆடி	–	முதுவேனிற்காலம்
ஆவணி புரட்டாசி	–	கார்காலம்
ஐப்பசி கார்த்திகை	–	கூதிர்காலம்
மார்கழி தை	–	முன்பனிக்காலம்
மாசி பங்குனி	–	பின்பனிக்காலம்

இடி மழை காற்று பூமியில் விழுந்து ஈசனுப்பாயும், இடி மழை காற்று சமுத்திரத்தில் விழுந்து சத்தியாகிய பாறைஉப்பாயும் விளைகிறது

என்பதற்கு ஆதாரம்

ஈசன் விந்து இடியாய் விழும்.

ஆமைய்யா ஈசன் விந்து இடியாய்வீழும்
அக்கினி மண்ணூடுருவிச் சலத்தைக்கோர்க்கும்
ஓமைய்யா மண்ணெடுத்தப் பூவாய்நிற்கும்
உத்தமனே கூதிர்காலம் இடி மழையுங் காற்று
சாமைய்யா சாகரத்தில் கூடியல்லோ நீர்திரட்டிக் கல்லாய்
உரையுமே பாறைஉப்பாய் மலைப்போற்றானும்
நாமைய்யா சொல்லிவீட்டோம் பாறையுப்பை
நாளமிர்தம் பூர்வத்தி னடத்தைதானே (12)

வாயு அங்கி அப்பு இதுவே இடி மழை காற்று சமுத்திரஜலத்தால் உண்டாயிற்று எழு பிறப்பாய் பிறப்பதற்கு சத்தியாகிய பூமியே காரணம் சமுத்திர ஜலமே பிர்மவிந்து

நடத்தையிந்த வாயு வங்கி அப்பு மூன்று
நாதமென்ற சாகரத்தி னீராலாச்சு
திடத்திலே யெழுபிறப்பு யோனியாச்சு
சித்தர்க ளெலா மிதனைச் செய்யலாச்சு
உடைத்துவிட்டே னிம்மூன்றுக் கொன்றேயாதி
வுகாரமான பூமியென்று வுணிப்பாரார்
மடந்தையர் களைக் கட்டிக்கொண்டு
வாழுந்திருக்கும் வீணருக்கு வகைதோணாதே (13)

இடி மழை காற்றே உ-பொருளாய் கூடும் என்பதற்கு ஆதாரம்

வகையறியார் அக்கினியி னுப்பைக்காணார்
வாய்வினுப்புத்தன்னீரான மார்க்கங்காணார்
தொகையறியார் தீட்சையினிற் சுழியுங்காணார்
துருசுகொண்டுரூதத்தைக் கட்டச்சொல்வார்
வகையறியார் காலபரு வங்கள்காணார்
பாசாணக்கட்டென்று பணந்தானென்பார் (வென்பார்)
குகையறியார் குடுகுடுக்கைக்கென்பணம் கொண்டா
குருபூசைச்கிருபதுபொன் கொடுவென்பாரே (14)

இடி புகுந்த உவர் நிலத்தைப்பார்

கொடுப்பதற் கெந்நூ லறிந்தோரைக்
கோடிதனமானாலுங் கொடுத்துவாங்கு
பிடிப்ப கற்றும் வகையதனிற் கண்டுபாரு
பிய்த்தெரிந்து போடாதே பிசகாய்ப்போகும்

இடி புகுந்த உவர்நிலத்தை நன்றாய்ப்பாரு
இரண்டுமொன்றாய்ச் சேர்க்க வொரு கடலைப்பாரு
அடிகனத்த பானையல்லோ தீய்க்குநிற்கும்
அவளேநினைந்து இடி மழை காற்றாகாதன்றே (15)

நினைதல் - கருதுதல், ஆலோசித்தல், ஞாபகத்திற் கொணர்தல், தியானித்தல், நோக்கமாகக் கொள்ளுதல், அரிதல், பாவித்தல், அதாவது சிப்பியே மோகமாகி புருஷனை அதே ஞாபகமாக வருகையை எதிர்பார்த்து வரும் சமயம் அறிந்தே தயாராகி எதிர்பார்த்துக் கொண்டிருப்பது. இடி இடிக்கவும் சிப்பிக்கு ஆசை மோகம் உதிக்கிறது எனத்தெரிகிறது.

அடிகனத்த பானையல்லோ தீய்க்கு நிற்கும் என்பதால் சிப்பியே
அடிகனத்த பானை ஆகாசத்தீயே ஆகாய வித்து. அப்படியானால்
நீர்இடியே சிப்பியில் விழுந்து முத்தாய் விளைகிறது என
நினைக்க வேண்டியிருக்கிறது.

ஆகாச வித்தே முத்தாக விளைந்தது

சிப்பிசெயநீரில் ஆனைக்கல் சாகும்

ஆகாதவேளையிலே கண்டாற்சிப்பி
ஆகாசவித்துவல்லோ முத்தாய்ப்போச்சு
சாகாதோ பிந்நீரி லானைக்கல்லு
சத்தி புவர் சூடனங்கே சற்றேபோட
வேகாதோ இனயினமுஞ் சேர்ந்தாலைய்யா
வெண்கிளிஞ்சிநீர் விட்டாற்கொல்லும்
போகாதோ குருமுடிக்கும் பாகமெல்லாம்
புட்டறிந்துப்பார்த்தவர்க்குப் பொருள்தான்முற்றே (16)

உ

பன்னூற்திரட்டு

கடவும் விநாயகர் சரஸ்வதி முருகன் ரிஷிகள் சித்தர்கள் முதலானவர்களை பூஜித்தால் சகல சித்தும் கைவசமாய் சிக்கும். ரசவாதம் கைக்குள்ளாகும் அதற்கு ஒரு கரு உண்டு. அந்தக்கருவுக்கு வழலை என்று பெயர். ரசவாதம் சித்திக்க ஆதிச்சரக்கு வழலை என அறியவும்.

வழலை என்ற ஈசனுப்பு பூமியில் சமாதியாக இருக்கிறது என்பதற்கு ஆதாரம்.

அகஸ்தியர் பரிபாஷை 2-வது காண்டம் 24-வது பாட்டில்
சத்தி உப்பும் சிவ உப்பும் ஓரிடத்திலிருக்கிறது என்பதை கவனியுங்கள்.

பொட்டலென்ற ஊசரத்துக்குள்ளே ஈசன்
புதையுண்டு போனானே சமாதியாக

ஓட்டுகின்ற சிவசத்தி இரண்டுபேரும்
ஓரிடத்தில் குடியிருந்தார் உற்றுப்பாரே

என்றும் சொல்வதால் ஈசனுப்பு ஆகாயத்திலேயே விஃடிமாக விளைந்து பூமியில் குடியிருக்கிறது என்று நன்றாய்த் தெரிகிறது. ஆகையால் இடியுப்புக்கு ஆகாயஉப்பு என்று பெயர்.

சிவ உப்பு கெற்பமாயமையும் காலமும் பூமிமேல் பொங்கி வெளிவரும் காலமும்

ஆனி ஆடி ஆளி திரண்டதை மீனம் மேஷம்

மேவி எடுத்திடு என்று ஒரு சித்தர் சொல்லியிருப்பதால் ஆனி ஆடி மாதங்களில் சமுத்திரஜலத்தை மேகம் கொண்டுபோய் சூரிய காங்கையால் நீராவியாகி அந்த ஜலம் பரிணமித்ததும் உப்பு மேகத்தில் தங்கிவிட்டது. ஆனி மாதத்தில் உவர் பூமியில் இடி விழுந்து உப்பாக உற்பத்தியாகி 10-மாதம் பூமியில் கெற்பமாயிருந்து 10-வது மாதமாகிய பங்குனி மாதம் பௌர்ணமியில் பூமிமேல் பொங்கி வரும் என்று தெரிகிறது.

உப்பு இனம் பிறந்தது ஆனி

உப்பினம் பிறந்தது ஆனி என்று சுந்தரானந்தர் 110-லும் சொல்லப்பட்டிருக்கிறது.

உவர் பூமியில் ஆனி மாதத்தில் இடியும் மின்னலும் கூடிப்பாய்ந்து கருக்கூடி சத்தி சிவம் என்ற வழலையாய் இரண்டு கெற்பமுண்டாகிறது என்று லாடர் 101-லும் சொல்லப்ப்ட்டிருக்கிறது.

சிலநாள்தான் மேகத்தில் உப்பு தங்கி இருந்தது என்பதற்கு ஆதாரம்

சமுத்திரஜலத்தை மேகம் ஆனி மாதம் கொண்டுபோயிற்று ஆனி மாதத்திலேயே பூமியில் உப்பு உண்டாயிற்று என்று ஆதாரமிருப்பதால் சொற்பநாள் தான் அந்த மேகத்தில் உப்பு தங்கியிருப்பதைக் குறிக்கிறது.

பூநீரும் மேகத்திலிருந்தே பூமிக்கு வந்து ஜெனித்தது

அகஸ்தியர் பரிபாஷை 500-ல் 1-வது காண்டம் 55-வது பாட்டில் "கொண்டலிலே தானிருந்து சிலநாட் சென்று கொடுமையுள்ள ஜென்மமதாய் பிறந்தாள் மண்ணில்" என்று பூநீரைக்குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது அப்படியானால் பூநீரும் மேகத்திலிருந்நே உற்பத்தியானதாகத் தெரிகிறது.

பிர்மகற்பம் என்பது வழலை

இந்த வழலைக்கு அகஸ்தியர் பரிபாஷையில் 320 பெயர் சொல்லியிருக்கிறார் வழலை இன்னதென்று உங்களுக்கு விளங்கும்படி நான் எழுதியிருக்கிறேன் அதற்கு வேண்டிய சில உதாரணங்கள் இங்கு எடுத்துக் கூறுவதை கவனியுங்கள்.

ரோமரிஷி 30-ல் ரோமரிஷி ஆச்சிரமம் தேடி சட்டைமுனி ஒருநாள் வந்தார் தாங்கள் எதற்காக வந்தீர்கள் என்று உபசரித்து அருள்புரியும்படி கேட்க உலகமெலாம் சித்துண்டாக்கும் மகிமையைக்காட்டி தாங்கள் பிரகாசிக்கும்படி ஜகத்துள்ள மனிதர்களுக்காக இறங்கி தங்கள் ஆச்சிரமத்தைக் தேடி வந்தேன் என்றார். இரண்டு பேரும் பேசிக்கொண்டபடி, சட்டைமுனி தீட்சைவிதி 200 என்னும் நூலைப்பாடினாராம் அதில் நிறுவிகற்ப சமாதி யோகம் கருக்குருவும் தீட்சை முதற் சொல்லப்பட்டிருக்கிறதாம். காயசித்தி, வாதசித்தி கபடில்லாமல் சட்டைமுனி சொன்னாராம். சட்டைமுனி மனிதர்மேல் தயவுள்ளவராம் அதில் சகலமும் வெட்ட வெளியாய் உரைத்திவிட்டார் என்று திருமூலர் அந்த 200-ஐ கிழித்தாராம்.

முப்பு மறைப்பு

முப்புவை சித்தர்கள் முன்னும் பின்னும் தெரியாமல் பாடிவிட்டார்களாம் ரோமரிஷி 6-வது காண்டத்தில் வழலையைச் சொன்னாராம் அதைக்குறுக்கி 500-ல் சொன்னாராம். அதைக்குகைக்குள்ளே வெளிவராமல் ஒழித்து விட்டார்களாம். அதன் பிறகு ஒரு 100-ம், 16-ம் சொன்னாராம் அந்த 16-ல் வழலை இன்னதென்று தெரியவே அதை இதில் அச்சிடப்பட்டிருக்கிறது. ரோமரிஷி 500-ல் நுணுக்கம் காணும் என்று அகஸ்தியர் பரிபாஷையில் சொல்லப்பட்டிருக்கிறது.

ரோமரிஷி

500-ல் சொன்னது என்னவென்றால் ஆகாசவெடியுப்பைத்தான் என்கிறார். ஆகாசத்தில் சிவனுப்பு இதுவே அண்டம் முடி என்றும் பெயராம் சத்தி அடி என்றும் பிண்டமென்றும் உவருப்பாகிய பூநீருக்கு பெயராம். இது இரண்டும் ஒன்றானால் தீட்சை ஆச்சு என்கிறார் இதுதான் சூட்சமாம். ஒரு துப்பாக்கியில் இரட்டைக்குண்டு போட்டுச்சுட்டால் யானை சாகும். அதுபோல் இந்த 2-உப்பையும் சேர்த்துச் சுன்னம் செய்தால் சூதம் சாகும் புடமெல்லாம் ஜெயமாகும் உன்உடம்பு திறமாகும் பலகோடி அண்டமெல்லாம் நடுங்கும் ஜெகமுழுதும் பார்த்தால் செம்பொன்னாய் பழுக்கும். முறை தப்பினால் வாதம் சித்தியாகாது என்கிறார்.

வழலைக்கு வேண்டிய தீட்சை நீரை அதாவது பிரணவநீரை

அடியில் கண்டபடி பெயரிட்டு ஒழித்துப் பாடினார்களாம்

எழுத்துக்களாகவும் அதாவது அகாரமுதல் உகாரமென்றும், உகாரமுதல் சிகாரமென்றும். நகாரமுதல் இகாரமென்றும், தகாரமுதல் வகாரமென்றும், வெடியுப்புச் செயநீர் என்றும் கோபமென்றும், பீஜமென்றும் சுத்தஜலமென்றும் கோழிமுட்டை என்றும் வெண்கருவென்றும் பழச்சார் என்றும் சில மூலிகைகளின் பெயரையும் அமுரி என்றும் சிப்பி என்றும் வெள்ளைக்கல் சுண்ணாம்பு என்றும் ஐவகை ஜெயநீரென்றும் அறுவகை ஜெயநீரென்றும் தலைப்பிள்ளையை வடித்த ஊன் என்றும் எறித்தெடுத்த தைலமென்றும் தந்திரமாய் கடைந்து உலர்த்தி எடுத்த ஜெயநீரென்றும் ரவி மதியில் செய்யும் பாடம் என்றும் தீட்சை 32-என்றும் 16-என்றும் 5-என்றும் 10-என்றும் சூரியகாற்று சந்திரகாற்று என்றும் பலவிதமாகச்சொல்லி பிரணவநீரை மறைத்து விட்டார்களாம்.

பீரணவநீரை

இன்னும் அநேக விதமாக சித்தர்கள் சொல்வார்களாம் இந்தக்கடின மனமுள்ள சித்தர்கள் தொடுகுறியைப் பலவிதமாய் தோனொடாமல் பரிபாஷையாகப் பாடினார்களாம். அவர்கள் பாடிய நூல்களைப்பார்த்து, வெல்வதறிது வெகுகடினம் தேறுவது எளிதல்ல ஆனால் விதிவேணும் என்கிறார்.

அதிக விநய புத்திமானைக்கண்டால் சித்தர்கள் வந்து கூட்டிப்போய்விடுவார்களாம் நாய்போல் அலையாதே மடையா! புதுப்பானைக்குள் ஈ புகுந்த கதை மாதிரி உங்கள் ஆசை இருக்கிறது அப்பா என்கிறார்.

வழலையே அக்கினியுப்பு

வழலை என்பது அக்கினியின் உப்பு அப்பா அது பூமியில் 16-முழத்தின் கீழே இருக்கும் பொக்கிஷம் அய்யா அதற்கு ஈசனுப்பு என்று பெயர் மாலுடைய உப்பு அதின்மேலே ஆச்சப்பம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஈசனுப்பு சிக்கினால் வாதம் சித்திக்கும் தொட்ட சரக்கு அத்தனையும் சொர்ணம் ரசகுளிகை செய்ய முடியும் என்கிறார்.

சத்தி சிவம் பரிக்ஷையால் கண்டு பிடிக்கும் விதமும் பெயரும்

பிர்மா, விஷ்ணு, ருத்திரன் மூன்றுபேரும் அமர்ந்தது முப்பு. அது சிவமாய் பிறந்தது, சிவத்திற்கு சவ்வீரம் என்றும் ஈசன் விந்து என்றும், அண்டமென்றும் பெயர். சத்திக்கு பிண்டமென்றும், துருசு என்றும், பச்சை என்றும், மஞ்சள் என்றும், பெயர். சத்தியாகிய பூநீரை இடியுப்பாகிய ஈசனுப்பின்மேல் கடுகளவு வைத்துதால் சிவந்துப்போகுமாம். .இதை விட்டால் வாதம் விழலாய் போகும் எச்சரக்கையும் கொல்லும், வாதம் சித்திக்கும், பிரபலம் பண்ணாதே அடக்கமாக ஊமைபோல் இரு என்கிறார்.

விஷக்கடியால் மாண்டவர் உயிர்பெற்றெழுதல்

முப்பு சுன்னம் முடிந்ததற்கு பரிக்ஷை செய்து பார்க்கும் விதம்.

தேள் கொட்டிய இடத்தில் முப்பு சுன்னம் வைத்து அதன் மேலே கொஞ்சம் ஜலம் விட்டால் அந்த நிமிடமே கடுப்பு எரிவுமாறி குளிர்ந்துபோகும். பாம்பு கடித்த விஷத்தால் மாண்ட பிறகு இரண்டு கண்களிலும் கடுகளவு முப்புவைப் போட்டால் விஷங்களெல்லாம் அகன்று போகும். பிழைத்துக்கொள்வார்களாம். தேள் கொட்டி விஷம் ஏறுவதுபோல் சரக்கையெல்லாம் கொல்லும். அடிதடியை தடியடியாய் அர்த்தம் செய்வார்கள். ஈசனுப்பு 2. என்ன என்றே ஆச்சு ஆதற்கு லிங்கம் என்றும் பெயர் என்கிறார்.

சோடா வளையினுள்ளே சரப்பாம்பை செலுத்தினால் சந்திரனும் ஒடுங்கிப்போவான். சாதிலிங்கம் பற்பமாகும் என்கிறார். அதாவது உச்சிக்குங் கீழ் உள் நாக்குக்கும் மேலுளடள சிருதமர் வழியால் வாசியை செலுத்தினால் லிங்கம் என்று பெயருள்ள ஈசனுப்பு சுன்னமாகும் என்கிறார்.

(தன்னுக்குள் அமுர்தலிங்கம் இறாஜலிங்கம் சிவலிங்கமுமுண்டு.)

கங்கை நதி ஆடினால் வினைபோமென்று காசினியோர்
சொல்வதை நீ கேட்டதில்லையா? அங்கல்லோ
தீட்சை விதிக்கந்தரங்கம்
தீட்கைஷயை மறைத்து விட்டார்கள்

மண்ணோடு நீரும் சேர்ந்தால் அதாவது அண்ட பிண்டம் சேர்ந்தபோதே மண்ணெல்லாம் பொன்னாகும். உங்கள் கையில் குருமுடித்துக் கொடுத்திருக்க உங்கள் புத்தி வழி நெடுக உழண்டு போச்சே மனம் குவிந்து பாராத குற்றம், கண்ணாடிச்சில் முடித்தான் உப்பினாலே கருவதனை அறியாமல் மாண்டு போனான். விண்ணாடிப்பாராத குற்றம் குற்றம் வெறுமண்ணாய் போச்சு உங்கள் வித்தையெல்லாம் என்றும்

காரத்தி னாட்டைக் கண்டான் பறங்கி
சீரொத்துச் செய்யத் திறந்தப்பி விட்டான்
வேரத்த தாலே வீணாகிப் போச்சுது
சாரத்து வண்ணான் சலவைக்கு மானதே.

கும்பிடுகல் தண்ணீராலே முப்பு கட்டும்

மனிதருக்கு வயது-100 தினம் 1-க்கு 21600 சுவாசம். ஆக உன் ஆயுள் எல்லாம் போகிறது. சுவாசத்தை அடக்கி யோகாப்பியாசம் செய்தாயாகில் சாகமாட்டாய். பெண்கள்மேல் வீண் ஆசை கொள்ளாதே. சந்திரகலை 16-ல் மெள்ள சுவாசத்தை வாங்கி சூரிய கலை 12-ல் நிறுத்தி ஊது. மூலாதாரத்தில் சிங் என்றும் கும்பி, சுழி முனையில் சுவாசம் தானே ஏறும், கும்பத்தில் கடிகை ஒன்று இரு. இப்படி நிறுத்திப் பழக்கம் செய். புகைபோகாத இடங்கள் பார்த்து நாட்டிவிடு சுவாசத்தை மேல் நோக்கி திரும்புமட்டும் என்கிறார்.

முப்பு யாருக்குக் கிட்டும்

முன் விட்ட குறை யுள்ளவர்களுக்கு சித்திக்கும். துலாலக்கினம் கன்னிகாலக்கினம் உள்ளவர்கள் சுட்டுப் பொசுக்குவார்கள். இந்த 2-ராசியில் பிறந்தவர்களுக்கு வாதம் யோகம் சித்திக்கும். பாவிகட்கு சித்திக்காது என்கிறார்.

ரோமரிஷி 30-ல்

வினயவா னல்லாது மற்றோர்க்கேது!
வினையாவனுக்கே தோனும்! என்றும்

போகரிஷி 100-ல் முப்புச்செய்பாகம் சொன்னார். முப்புவை குப்பியிலேபோட்டு எரிக்கச் சொல்லாமல் மறைத்துப்போட்டார். நீங்கள் புடத்திலிட்டால் கெட்டுப்போய் விட்டதப்பா என்கிறார். உன் பேரில் குற்றமில்லை சவுக்கார வழலையை மறைத்ததாலே, சிவனுப்பு இன்னதென்று சொல்லாததாலே, வெடியுப்புக்கட்டுவதை மறைத்ததாலே, கொள்வி என்ற பூநீர் போனதாலே, குடதிசையில் கல்லுப்பு காணாததாலே, சுத்த ஜலம் தீக்ஷையை மறைத்து உண்மையாய்ச்சொல்லாமல் பரிபாஷை நாமத்தாலும் முன்பின்னாக உரைத்ததாலே, அறியாமல் மயங்குகிறீர்கள்! ஒழித்ததென்ன வழலை1, தீட்சை 1. மறைத்துப் பாடினதால் மனம் வெறுத்து அலைகிறீர்கள். 18 சித்தர்கள் மறைத்த விஷயத்தை கண்டு பிடிப்பது எளிதல்ல என்றும் 30-ல் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆகாசம் ஆணே ஆச்சு என்றும்,
(பிரிதிவி) மண் பெண்ணே ஆச்சு என்றும்
அரியேது அயன்றானேது சிவமெல்லாம் ஒன்றேயாச்சு
என்று ரோமரிஷி 51-ல் சொல்லப்பட்டிருக்கிறது.

சத்தி சிவம்

இரண்டே அல்லால் வேறொன்றில்லை
ஈசனுப்பு 2 என்ன ஒன்றே ஆச்சு என்றும்

அப்பு அங்கி வாய்வு மூன்றுமே பிர்மா விஷ்ணு ருத்திரனுமாய் பிறந்தது என்கிறார். பிர்மாவின் விந்து மழையாகப் பொழிந்ததாய் அகஸ்தியர் பரிபாஷையிலும் ரோமரிஷி 16-லும் சொல்லப்பட்டிருக்கிறது. ரோமரிஷி 16-ல் வாய்வினுப்பு தண்ணீரான மார்க்கம் காணார் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது இடி மழை காற்று 3-ம் கூடியது முப்பு என்றும் சொல்லப்பட்டிருக்கிறது இந்த மாலாகிய காற்றே தண்ணீராகி, பிர்மாவின் விந்து மழையோடு சேர்ந்து மழையாகப் பொழியும்போது ருத்திரனாகிய இடி மழையோடு சேர்ந்து விழுவதால் உவர்பூமியில் அண்டமாக ஜெனித்தது ஈசனுப்பு என்று அறியவும். 3-பொருளே 2-பொருளாகக்கூடி பூமியில் முப்புவாக அமைந்தது என்று நன்றாகத்தெரிகிறது. அகஸ்தியர் பரிபாஷை-2-15-ன்படி அக்கினியும் வாய்வும் கூடி பூமியின் கீழ் அண்டமாச்சு என்று முன் சொன்னதற்கு சரியாய் உரை வந்து விட்டது கவனியுங்கள்.

ஆகாசத்தில் இடியில் பிறந்த அண்டவித்தால்

வெடியுப்பு கட்டிப்போகும்

வெடியுப்புக்கும் சவுக்காரம் என்றும் வழலை என்றும்

பெயர் என்று ரோமரிஷி சொல்கிறார்.

இடியில் பிறந்தது சிவஉப்பு அதாவது வளையல் நஞ்சு, வளையல் நஞ்சால் எடை குறையாமல் வெடியுப்பு கட்டுகிறது.

முத்துச்சிப்பிக்குள்ள பெயர்கள்

சிப்பி கருவுக்கு காய் என்றும், ஊன் என்றும், சருகு என்றும், ஊமை என்றும் பிண்டமென்றும் பெயர். சிப்பிக்கு உடல்2, உயிர்1. சிப்பி ஜெயநீருக்கு சிவஜெயநீர் என்றும் பெயர். இதில் அடிமுடி ஒடுங்கும். சிப்பிக்குள் ஆகாயவிந்துவை வைத்து ஜெயநீர் இறக்கு என்கிறார். சிப்பிக்கு பாவை என்றும், கும்பிடுகல் என்றும், பச்சை என்றும், கருநீலமென்றும், சுரோணிதமென்றும், விசை அம்பு என்றும், உடல் 2-ம் உயிர் 1-ம் ஓர் அங்கியாலே என்றும், இது மூன்றும் சேர்ந்திருப்பதால் சிவம் என்றும், கும்பிடானை என்றும், இதில் அடிமுடியாகிய சத்தி சிவஉப்பு கட்டும் என்றும் சொல்கிறார்.

அதற்குச் ஆதாரம்

சிப்பி செயநீரால் நஞ்சுகட்டி சுன்னமாகும்

வாரானை வூனின் வடிவு கண்டாலே
பேராம் வழலை பேசாமற் கட்டுண்ணும்
கூராம் வழலை கொடுஞ்சுன்ன மாச்சுது
நீராம் வழலையால் நிலைத்தது வாதமே.

உரை

ஆனை என்றும் ஊன் என்றும் முத்துச்சிப்பிக்குப்பெயர். முத்துச்சிப்பி செயநீரால் வழலையாகிய சிவ உப்பு என்ற நஞ்சு கட்டி சுன்னமாகும். வாதம் சித்திக்கும் எனல்.

வாதத்திற்கு ஆதி வழலை

வாதத்துக் காதி வழலை யல்லாது
பேதித்து வேறே பின்னொன்று மில்லை
சாதித் தறியாத தன்னாண்மை யப்பா
வேதத்திற் சொன்னோ மெய்யுரை யெண்ணே.

பிர்மகற்பமாகிய நஞ்சும், பூநீரும் சிப்பி செயநீரால் சாகும்

என்பதற்கு ஆதாரம்

வண்ணான் பிறப்பறிய மாட்டாத வாதிகட்குச்
சுண்ணாம் பிருக்குமிடந் தோன்றாதே-தண்ணீரி
லூருங் கருங்காக முசரத்தைக் கொன்றதென்றால்
பேருமதி வெண்பாவிற் பேசு.

உரை

வண்ணான் என்று சிவஉப்புக்குப்பெயர். சிவஉப்பில் சுண்ணாம்புச் சத்து இருக்கிறது. தண்ணீரில் ஊரும் கருங்காகம் என்பது முத்துச்சிப்பி. உசரம் என்று பூநீருக்குப் பெயர். அதாவது சத்தி உப்பும் சிவ உப்பும் சிப்பி ஜெயநீரால் சாகும் என உரையாகிறது. (ஆர். எம். கே.)

வெடியுப்பு, பூநீர், நஞ்சு 3-ம் சிப்பி செயநீரால் கட்டும்

என்பதற்குச் சட்டம்

காக்கை யால்கூவும் கம்பி திறப்படுங்
காக்கை யாலுவர்ச் சாரமுங் கைக்குளாங்
காக்கை யால்சவுக் காரமுங் கட்டலாங்
காக்கை காக்கை நடுக்கடல் காக்கையே.

உரை

காக்கை என்பது முத்துச்சிப்பி, கூவும் கம்பி என்பது சீறி ஓடம் வெடியுப்பு, உவர்ச்சாரம் என்பது பூநீர், சவுக்காரம் என்பது நஞ்சு, நடுக்கடல் காக்கை என்பது சமுத்திரத்திலுள்ள முத்துச்சிப்பியைக் குறிக்கிறது. மூன்றுப்பும் சிப்பிசெயநீரால் கட்டி சுன்னமாகும்.

அருளா யடிமுடி யறியார்கள் மூடர்
பொருள்காண்ப தெப்போ புலன்காண்ப தெப்போ
கருக்காண்ப தெப்போ கரய்காண்ப தெப்போ
உருவாவ தெப்போ ஊன்காண்ப தெப்போ

உரை

கரு காய் சருகு என்று சிப்பிக்குப் பெயர். அடி முடி என்றும் சிப்பிக்குப் பெயர். அடி முடி என்று பூநீருக்கும் நஞ்சுக்கும் பெயர். ஊணாகிய சிப்பி ஜெயநீரால் அடியாகிய பூநீரும், முடியாகிய நஞ்சும் உருவாகும் எனல்.

காண்ப தடிதன்னைக் காயென்றுஞ் சொல்வார்
வீண்பழி யாக விரைக்குஞ் சருகடா
ஊண்சிவ நீற்றா லொடுங்கு மடிமுடி
தூண்துரும் பாகுந் துரும்புந் தூணாமே

உரை

தடி காய் சருகு ஊண் சிவநீர் என்று சிப்பிக்குப் பெயர் இந்தச்சிவநீரால் அடிமுடியாகிய சத்தி சிவம் ஒடுக்கும் என்கிறார்.

ஆகுமே யூமைக்குள் ளாகாய விந்துவைப்
புகவுமே வைத்து நாத மிறக்கிட
சாகு மடிமுடி தானடு மூன்றும்
போகுமே மாற்றுப் பொன்மேரு மட்டுமே.

சத்தியுப்பைக் கட்ட சிவகெங்கையாகிய பிரணவநீர் பிறிக்கும் விதம்.

ஊமை என்பது சிப்பி ஆகாயவிந்து என்பது நஞ்சு
நஞ்சு வெடியுப்பு தீட்சை செய்யும் விதம்

அமுரி திராவகத்தில் அகஸ்தியர் பரிபாஷை 500-லுள்ள பஞ்சசுன்னம் கலந்து தெளிவை இறுத்து அதில் சிவஉப்பாகிய நஞ்சையும் வெடியுப்பையும் தனித்தனி 10-தடவை தீட்சை செய்துகொள்ளவும்.

நஞ்சிலும் - வெடியுப்பிலும் கசிவு - எண்ணையை நீக்கும் விதம்

இப்படி சுத்திசெய்த நஞ்சையும் வாண மருந்துக்கு உபயோகிக்கும் வெடியுப்பையும் தனித்தனியே வெண்கருவிலரைத்து தனித்தனியே வில்லைதட்டி உலர்த்தி, சிப்பிச் சுண்ணாம்பை வெண்கரு விட்டரைத்து ஒவ்வொரு வில்லைக்கும் உள்ளங்கை கனம் பூசி இரு சட்டியில் 3-விரல் உயரம் வெறும் சிப்பிச்சுண்ணாம்பை வைத்து அமுத்தி அதன்மேல் அவ்வில்லைகளை தனித்தனியாக 2-சட்டியிலும் வைத்து மேலும் 3-விரல் உயரம் சிப்பிச்சுண்ணாம்பிட்டு அமுத்தி மேல் மூடியை மூடி 3-சேலைமண் செய்து மழை விழுகாத இடத்தில் 2-அடி ஆழம் 2-குழி தோண்டி சட்டிகளை வைத்து மண்ணிட்டுப் புதைத்து மூடி விடவும். 49-ம் நாள் எடுத்து மேல் கவசத்தை நீக்கிப்பார்க்க கசிவு எண்ணெய் நீங்கிவிடும்.

உப்பும் கசடதுபோய் ஊரலது அற்றால்
முப்புச்சுன்னம் முடிந்தது காண்

என்ற நாயனார் 1500-ல் சொல்லப்பட்டபடி கசிவு எண்ணையும் நீக்கிவிட்டோம்

நஞ்சுச்சுன்னம் செய்யும் விதம்

இப்படி என்னை நீக்கிய வளையல் நஞ்சும் வாணமருந்துக்கு உபயோகிக்கும் வெடியுப்பும் சமஎடை சேர்த்து கோழிமுட்டை வெண்கருவால் அரைத்து ஒரேவில்லைதட்டி உலர்த்தி சிப்பிச்சுண்ணாம்பின் நடுவில் வைத்து புடமிட நஞ்சும் வெடியுப்பும் கட்டி சுன்னமாகும் 2-ம் ஓடாது. ஆகாசவிந்து என்பது நஞ்சு. பூமிவிந்து என்பது வாணமருந்திற்கு உபயோகிக்கும் வெடியுப்பு, நஞ்சுக்கு முதல் வழலை என்றும் 1-வது பிர்மகற்பம் என்றும் பெயர். வாணமருந்து வெடியுப்புக்கு 7-வது வழலை என்றும் 7-வது பிர்மகற்பம் என்றும் பெயர். இந்த நஞ்சு வெடியுப்புச் சுன்னத்தை சிப்பியைப் பிளந்து வைத்து இரும்புச்சட்டியிலிட்டு சாய்த்துவைக்க ஜெயநீர் இறங்கும். இதில் அடி முடி நடு 3-ம் சாகும் என்கிறார் அதாவது பூநீர் நஞ்சு பாறைஉப்பு கட்டும் மாற்றுயாகும் என்கிறார்.

சிப்பிச்செயநீரால் வழலை கட்டும்

மட்டுமீ தல்லால் மாரக்க மிகவுண்டு
கட்டுமே நாதக் கருவால் வழலையும்
எட்டுமே யெட்டெட் டறுபத்து நாலும்
தொட்டுமே வாட்டத் தொழில்காணுஞ் சித்தரே

உரை

நாதக்கருவாகிய சிப்பி செயநீரால் வழலையாகிய நஞ்சு கட்டும். அதை 64-சரக்கிலும் பூசி வாட்ட கட்டும் என்கிறார்.

சிப்பியை பிளந்து, ஆகாயவிந்துவை நுணுக்கி வைத்து ஜெயநீர் இறக்கு, இதில் பூநீர் நஞ்சு, பாறை உப்பு கட்டும் என்று முன் சொல்லியிருக்கிறார்.

இந்த இடத்தில்

சிவஉப்பை கட்ட சத்திகெங்கையாகிய பிரணவநீர் பிறிக்கும் விதம்

சிப்பியைப் பிளந்து பாறை உப்பை நுணுக்கிவைத்து ஜெயநீர் இறக்கு. இதுவே சுத்தகங்கை, இதுவே பிரணவநீர். இதில் சிவ உப்பை தீக்ஷை செய்ய வேண்டும் என்று ரோமரிஷி சொல்லுகிறார். இதை மனதில் ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்.

சோறுதான் ஊட்டமுடியும் தொண்டை விழுங்காவிடின் யான் என்ன செய்வேன்

என்று ரோமரிஷி சொல்லியிருக்கிறார்

சிப்பி செத்தாலும் பிழைக்கும்

சித்தரக் கருவின் செய்பெயர் சொல்கிறேன்
வைத்தார்க ளனந்த மாறிய பெயரோடு
செத்தால் பிழைக்குஞ் சீர்பிண்ட மென்றுஞ்
சத்தாஞ் சருகும் காயென்றும் பேரோ

உரை

சிப்பி செத்தாலும் பிழைக்கும் சிப்பிக்கு பீண்டமென்றும் சருகுகாய் என்றும் பெயர்

கரயென்று முமைக் கனியவ ளென்றும்
மாயென்று மில்லா மரப்பாவை யென்றும்பேர்
தாயென்றுங் கும்பிடு தானவ ளென்றும்
நரயென்றும் நீரில் நல்வெள்ளைக் கல்லே

உரை

சிப்பிக்கு காய் ஊமை களியவள் மரப்பாவை தாய் கும்பிடுகல் அதாவது சிப்பி நீர் வெள்ளைக்கல் என்றும் பெயராம்.

சிப்பிக்கு உடல் 2, உயிர் 1-ம் ஒரே கவசத்திலிருப்பதால் சிப்பிக்கு சிவமென்றும் பெயர்

கல்லாகும் பச்சை கருநீல மென்றும் பேர்
சொல்லார் கனியைச் சுரோணித மென்றும்பேர்
வில்லா னதற்கு விசையம்பு வென்றும்
உல்லாசத் தேக உடல்ரெண்டு மானதே

உடலுக் குயிரு மோரங்கி யாலே
தடையா முன்றுந் தான்சிவ மானார்
கடலினால் காத்துக் கைக்குள்ளே சிக்குஞ்
செடமழி யாது தெளிந்துகொள் வாரே.

2-பாட்டிற்கும் உரை

முத்துச்சிப்பிக்கு பச்சை கருநீலம் கனி சுரோணிதம் விசைஅம்பு சந்தோஷமான தேகம் உடல்-2, உயிர்-1. ஒரே அங்கியில் கவசமென்றும். இது மூன்றும் கூடி யிருப்பதால் முத்துச்சிப்பிக்கு சிவமென்றும் கடலில் வாசமென்றும் அழியாத உடம்பு என்றும் பெயர்.

முத்துச்சிப்பிக்கு அண்டமென்றும் பிண்டமென்றும் கோடிப்பெயர் சத்தி சிவஉப்புக்கு அண்டமென்றும் பிண்டமென்றும் கோடிப்பெயர்

தீட்சை மர்மம்

முத்துச்சிப்பிக்கு அண்டமென்றும் பிண்டமென்றும் கோடிப்பெயர் என்றும் சத்திசிவ உப்புக்கும் அண்டமென்றும் பிண்டமென்றும் கோடிபெயர் என்றும் சொல்கிறார் இது இரண்டையும் சேர்ப்பதற்கு தீட்சை என்கிறார்

ரோமரிஷி பிரணவநீர் இதுவே கிளிஞ்சி செயநீர்

சத்தி சிவ உப்பை கிலிஞ்சி ஜெயநீரில் தீட்சை செய்யவாம் இதற்கு பிரணவநீர் என்றும் சொல்கிறார். அகஸ்தியார் பிரணவநீர் பீரிக்கும் விதம் வேறுவிதமாய் இருக்கிறது.

மாமிசத்தோடு கிளிஞ்சி 2-படி எடுத்து தோடு நீக்காமல் உயிரோடே ஒரு மண் பானையிலிட்டு 8-படி மனித அமுரிவிட்டு அதில் 1-படி பூநீரும் 1-படி கல்ச்சுண்ணாம்பும் போட்டு குச்சியால் கலக்கி ஒரு நாள் வைத்திருந்து தெளிவை இறுத்து அதில் கிளிஞ்சிகளைப்போட்டு அமுரி வற்றமட்டும் அடுப்பிலிட்டுக்காய்ச்சவும். கசடு எல்லாம்வெளியே கக்கிவிடும். இறக்கி சுத்தஜலம் விட்டு கசடின்றி கழுவி காயப்போடவும் நன்றாய் உலர்ந்த பிறகு கல் உரலிலிட்டு இரும்புக்கடப்பாறையால் இடித்து மாவாக்கி ஒரு பலம் பீங்கானிலிட்டு 10-கோழிமுட்டை வெள்ளைக்கருவும் விட்டு ஊத்தி 3/4ரு எடை பனிக்காரமும் 3/4ரு. எடை சவ்வீரமும் நுணுக்கி பீங்கானிலிட்டு கலக்கி ரவியில் காயவைக்கவும் சிவஉப்பும் சத்திஉப்பும் பலம் ஒன்று கல்வத்திட்டு பீங்கானில் உலரவைத்ததையும் சேர்த்து அரைத்து பனியில் வைக்க ஜெயநீராகும் இதற்கு பிரணவநீர் என்று பெயர் என்று ரோமர் சொல்கிறார். (பலம் என்பது 3-ரு.எடை)

பிரணவநீரில் சிவஉப்பை தீட்சை செய்யும் விதம்

பிர்மகற்பம் அரைவாசி முங்க ஒருபீங்கானில் இந்த ஜெபநீரிட்டு வைத்து கடுவெய்யலில் வை. சுண்டச்சுண்ட அதிலே ஜெயநீரை விட்டு 25-நாழிகை காய்ந்தால் நீர்வற்றி கட்டிப்போகும் பஞ்சகன்னக்குகையிலிட்டு நெருப்பில் புடமிடகட்டி சுண்ணாம்பாய் நீறிப்போகும்.

பின் சந்திரனில் வை சீசாவில் அடைத்துக்கொள் செம்பில் 10-க்கு 1-கொடுத்து உருக்கு 10 1/2 மாத்து பசும்பொன்னாகும் இந்த பிர்மகற்ப கற்சுண்ணரம்பை யாரால் கண்டு பிடித்து எடுக்க முடியும். இதைக்கண்டு பிடிக்க கோடியில் ஒருவன் உண்டு யோகிகட்கும் சித்தர்கட்கும் இது தானே கிட்டும். பூஜையில்லா வாதிகட்கு கிட்டாது. ரோமரிஷி நூல் என்றால் சித்தர் முனிவர்களும் திருடுவார்கள். குறிகளை நான் தூண்டிச்சொல்லுகிறேன் என்கிறார்.

சிப்பி ஜெயநீரில் வெடியுப்பும் முப்புவும் கட்டும்

என்பதற்கு ஆதாரம்

சிப்பிக்கு உடல்-2, உயிர்-1.

வழியுண்டு கல்லாணை யாறுக்குள்ளே
வாகாக வெந்த கம்பி கட்டிப்போச்சு
சுழியான வெடியுப்பு வேகமெத்த
சுத்தசல தீட்சைவிட்டா லொன்றுமில்லை
பழியாகச் சாகுதடா நாதம்வற்றிப்
பாழான உடம்பிரண்டு முயிருமொன்றாய்க்
கழியாக்குங் கும்பிடுதல் தண்ணீராலே
கட்டுமடா முப்பூவுங் கட்டுந்தானே.

நினைவுகொண்டு பாரரட்டால் நரன் என்செய்வேன்.

என்றும், வழலையுப்பே முடியுப்பையா, அது நிலப்பூடு அப்பா பூமியுட கருத்தானே பெரிய பூவாம் காவலுண்டோ கட்டுண்டோ இந்தப்பூவை கண்டெடுக்க மாட்டாத

கர்மந்தானே உன் கர்மத்தினால் மாய்கை மூடி அலைகிறாய். பூமியில் கெற்பமாகி களர் பூவாகவும் சமுத்திரத்தில் ஜலப்பூவாகவும் இருக்கிறது இந்த மர்மத்தை வெளியிடாதே ஊசரமே நிலஉப்பாகும் முதற் பூ அதுபிஞ்சுப்பு பங்குனியில் கதிர் அதாவது பழுத்த பழம் என்றும்.

முப்பு என்பது 5-உருப்பட்டமர்ந்தவிந்து
நிதியிருந்தால் உன் தலைவாசலில் காத்துக் கிடப்பர்
நிதியில்லாவிடில் யார் காப்பர்?
விதியிருந்தால் முப்பு தானேகிட்டும்

விதியிருந்தால் கதியுண்டு விதியில்லாவிட்டால் நீ வேண்டி என்ன வேண்டாமலிருந்தாலென்ன, நிதியிருந்தால் வருவார்கள் உன் தலைவாசலில் காத்துக்கிடப்பார்கள், நிதியில்லாவிடில் யார் வருவர். நிதி இருந்தால் வந்தபேரை நில்லென்று சொல்வானேன். அதுதானே நிற்கப்பண்ணும் சதிரில் வந்து கூத்தாடி கூத்தாடினாலும் தரையவிட்டால் சிலம்பு அடிப்பானோ! அதுபோல் தரையை விட்டால் சந்நியாசிக்கு முப்பு கிட்டுமோ கெதியிருந்தால் எவ்விதமும் வந்து கூடும். கீழே இருக்கும் சிவனுப்பும் வந்து கிடைக்கும். படை மிகுதியாயிருந்தாலும் ராஜனில்லாத ஒரு படை வெட்டி ஜெயம்பெற்று வருமோ வராது. அதுபோல் அரசனாகிய சிவஉப்பு வேண்டும் அதை பிரணவநீரில் 10-தீட்சை செய்ய வேண்டும். தீட்கைஷிக்கு பிரணவநீராகிய சுத்தகங்கை பிரிக்கஆதியில் சுத்தகங்கையாகமுடிந்த பாறைஉப்பை எடுத்து கிளிஞ்சியிலிட்டு கங்கைபிறிக்க சோம்பிவிட்டீர்களே வாதவித்தை எப்படி சித்திக்கும் என்கிறார்.

அகஸ்தியர் பரிபாஷை 500-ல் 1-வது காண்டம் 7,8-வது பாட்டுகளில் விதியிலை என்றெண்ணாதே நூலைத்தேடு என்றும், நினைவிலே இருப்பதொன்று சொல்வதொன்று நெஞ்சிரக்கமில்லாத சித்தர்பாசை என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

ரோமரிஷி 16-ல் சிப்பியைப்பிளந்து வெடியுப்பை வைத்து ஜெயநீர் இறக்கி சிவஉப்பை தீக்ஷை செய்யும்படியும் 50-ல் சிப்பியில் சவுட்டுப்பை வைத்து ஜெயநீர் இறக்கி சிவஉப்பை தீக்ஷை செய்யும்படியும் இது 2-க்கும் பிரணவநீர் என்றும் பெயரிட்டிருக்கிறார். இது நல்ல முறை அல்ல.

பிரணவநீர் பிரிக்கும் விதத்தை பரிபாஷையாகவும் ரோமரிஷி சொல்லியிருக்கிறார்

இது உயர்ந்த முறை
சுத்தகெங்கை பிரிக்கும் விதம்

கருவான அக்கினியைத் தண்ணீர்கொல்லும்
கலக்கமில்லாத் தண்ணீரை வன்னிகொல்லும்
குருவாகும் இதுவிரண்டுஞ் சுத்தகங்கை
கூர்மையிலே பட்டாக்கால் குணமதாகும்.

என்று சொல்லப்பட்டிருப்பதால் கூர்மை என்று பாறையுப்புக்குப் பெயர். நஞ்சு, பாறையுப்பு 2-ம் புடமிடக் கட்டும். இதில் பாறையுப்பை சமஎடை சேர்க்கச்சொல்கிறார் சுத்தி சொல்லவில்லை.

உரை

அக்கினி என்பது இடியுப்பாகிய நஞ்சு

இது அதைக்கொல்லும் அது இதைக்கொல்லும் என்பதால் இரண்டையும் (அடியில் கண்டபடி சுத்திசெய்து முன்னர் கூறியபடி புதைத்து எண்ணைகசிவு நீங்கியபின் சமம்கூட்டி வெண்கருவாலாட்டி அகஸ்தியர் பரிபாஷைபஞ்சசுன்னக்குகையிலிட்டு) புடமிட 2-ம் கட்டி சுன்னமாகும் குருவாகும் என்று தெரிகிறது.

இத 2-ம் சேரும்பொழுது 2-செத்து குருவாகும் என்பதால் இந்தக்கருவில் சமஎடை அடியில் கண்டபடி சுத்தி செய்து பாறைஉப்பை நுணுக்கிச் சேர்த்தரைத்து பனியில் வைக்க அல்லது பூமியில் புதைக்க சுத்தகங்கை என்ற பிரணவநீர் பிறக்கும் என உரை விளங்குகிறது.

சிவ உப்பு என்பது 5-உருப்பட்டமர்ந்த வித்து
பிரணவநீரில் கட்டும்

இந்த செயநீரில் ஆதி வஸ்துவாகிய சிவஉப்பை தீட்சை செய் என்றும் இந்த உப்பு ஆதியிலே ஐந்துருப்பட்டமர்ந்த வித்து என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

உண்மையான பாறையுப்பு கிடைத்துசேர்த்தால் தான்
சுத்தகெங்கை பிரிந்து வரும்.

அப்படியானால் இப்படியும் சுத்தகங்கையாகிய பிரணவநீர் பிரிக்கலாம் எனத்தெரிகிறது
இதில் 5-பஞ்சபூதமும் அடங்கியிருக்கிறது.

எத்தனை விதமாக சுத்தகங்கையாகிய பிரணவநீர் பிரிக்கும் விதத்தை ஒழித்துப் பாடியிருக்கிறார்கள். கவனித்து செய்புங்கள்.

பிரணவநீர் பிரியாவிடில் சிப்பியில் வைக்கவும்

சுத்தகெங்கை பிரித்து ஜெயநீர் வராவிடில் மேற்படி மருந்தை சிப்பியைப் பிளந்துவைத்து பனியில் வைக்க ஜெயநீர் இறங்கும் இதில் சிவ உப்பை தீட்சை செய்துகொள்ளவும்.

இந்தப்பிரணவநீரில் அடியில் கண்ட மூன்று
உப்பையும்10-தீட்சை செய்யவேண்டும் என்கிறார்.
தீப்பூவும் தண்ணிப்பூவும் உவர்ப்பூவும்
கூடினால் முப்புவாமே.

என்று ரோமரிஷி சொல்கிறார்

ரோமரிஷி முப்பு மூன்றுக்கு விபரம்.

தீய்ப்பூ என்பது--இடியுப்பு -- வளையல்நஞ்சு
தன்னிப்பூ என்பது--பாறையுப்பு
உவர்ப்பூ என்பது--பூநீர்

முப்பு என்பது முப்பொருள் என்று மட்டும் அகஸ்தியர் சவுமியத்தில் சொன்னாரேயொழிய விளங்கும்படி சொல்லவில்லை அவை 3-ம் தெளிவாய் இதில் எடுத்துக்காட்ப்பட்டிருக்கிறது இதிலிருந்து முப்பு இன்னதென்று தெரிந்து கொண்டீர்கள். மூன்றையும் பிரணவநீரில் தீட்சைசெய்யும் விதம் பின் விரிவாய் எழுதப்படும்.

முப்புவைக்கண்டவன் ஞானியாவான் பிர்மரிஷியாக வாழ்வான் முதற்காண்டம் 500-ற்றின் முடிவையும் காண்பான். அதன் ரகசியத்தை யாருக்கும் சொல்லாதே விழிமடவார் ஆசையினாலே மேலும் விட்டீர் கீழும் விட்டீர் சுவாசத்தையும் விந்துவையும் விட்டதனால் உன் ஆயுள் குறைந்து போயிற்று என்கிறார்.

திருவள்ளுவநாயனார் நவரத்தின சிந்தாமனி 800-படீ முப்பு 3-க்கு விபரம்.

மகிதலந்தனிலுப்பு அலைகடனிற் பாறை
வயிரமெனு முவர்காண் மதியினுப்பே விந்தாச்சு
சைலமெனு பூநீர்காண் சத்திநாத உப்பாச்சு
தரணிதனிற் கல்லானை தாரபுவியிலுமுண்டு
என்று வள்ளுவர் சொல்கிறார்.

உரை

மகிலந்தனிலுள்ள உப்பு 3-க்கு விபரம்

அலைகடனிற்பாறை என்பது – சமுத்திரத்திலுள்ள பாறையுப்பு; வயிரமென்ற மதியுப்பாகிய விந்து என்பது – உவர் பூமியிலுள்ள இடியுப்பு (இதுவே வளையல் நஞ்சாக தீயில் வெந்து வந்தது. இதில் காரமில்லை தீயில் வெந்ததால் காரமெல்லாம் கெட்டுப்போயிற்று)

ஈசன்விந்து என்ற நிலஉப்பை கிரகித்து நிற்கும் பூநீர்
பாங்கிக்காக வளையல் செய்வோனுப்பு வேறாய்ப்பண்
ணுவான் அந்தஉப்பு பாழாதாமே என்று அகஸ்தியர்
பரிபாஷை 2-வது காண்டம் 29-வது பாட்டில்சொல்லப்
பட்டிருக்கிறது.

சைலமெனும் பூநீர்காண் சத்திநாத உப்பாச்சு—என்பது பூநீர் உவர்பூமியில் 3-ம் நாள் விளையும். பூநீரே நாதம்சக்தி என்ற பெயருள்ளது; கல்லானை என்பது–இந்த இடத்தில் குளத்துச்சிப்பி. அடுத்தப்பக்கம் 4 என்பதற்கு இந்த நாலையும் குறிக்கிறது.

உவரில் சிவரூபம் முடிதானாச்சு
சத்தியின் ரூபம் அடிதானாச்சு

வேந்தனென்ன பாறையுப்பு நடுவுமாச்சு என்கிறார். இதினால் அடி, முடி, நடு என்பதைத் தெரிந்து கொண்டோம் தூர் ஒன்றுகோடி கவர்களாகப் பிறிந்தது போல் மூடர்களே ஒன்றல்லோ மூன்றுமாச்சு என்று ரோமரிஷி 100-ல் சொல்கிறார்.

வினையாளர் காண்பதல்லால் மற்றோர்க்கேது 3-உப்புக்கும் சவுக்காரமென்றே பெயர்.

நீற்றினத்துக்கு இது ஆதிச்சரக்கு முப்பு. முப்பு இல்லாமல் சுட்டு அலைந்து நீராமல் தவிக்கும் வாதியே! உன் பேரில் குற்றமில்லை! சவுக்காரத்தை ஒழித்து

விட்டார்கள். பூமியில் உப்போ மெத்தவுண்டு வழலை என்ற உப்பு மூன்றும் பரிபாஷையில்லையடா கைபாகங்கள், தீக்ஷைசெய், பூத பஞ்சீகரணமாகும். வழலையை பாறையுப்பு செயநீரில் தீக்ஷை செய்ய பூத பஞ்சீகரணமாகும். 3-உப்புக்கும் சவுக்காரம்என்று பெயர், பேய்க்குரங்குகள் வெவ்வேறு என்று எண்ணுவார்கள். பொன் ஒன்று எவ்வளவோ நகைகள் செய்யவில்லையா! அதுபோல் ஆதியில் முடிந்த மர்மம் அறியாமல் அலைகிறீர்களே என்று ரோமரிஷி 100-ல் சொல்கிறார். 3-உப்பு என்பது பூநீர், நஞ்சு, பாறைஉப்பு என அறியவும்.

திருவள்ளுவர் வைத்திய சிந்தாமணி 500

பஞ்சபூதமல்லாத நாதம் விந்து உவர்நீர் பாறைஉப்பு இல்லையெனல்.

அப்படியானால் நாதமாகிய பூநீரும் விந்துவாகிய வளையலில் வடிந்த நஞ்சும், உவர்நீர் என்பது பூநீர் எடுக்குமிடத்தில், சத்திகெங்கை என்றும், சிவகெங்கை என்றும், 2-நீர் உண்டு. அவை 2-ம் பாறைஉப்பு என்பது சமுத்திரத்திலுள்ள பாறைஉப்பு ஆக 5-ம் ஐந்து பஞ்ச பூதமாக விளைந்து இருக்கிறது என்று நன்றாய்த்தெரிகிறது கவனத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.

பாறைஉப்பு கிடைத்தால் வறுமை நீங்கி விடும்.

வாதசஞ்சீவியும் யோகிகட்கொருதன்
வருமையேது காண்மவுனுகாள்
நாதவிந்து உவர்நீர் பாரையெனில்
நாடிடுங்கருவி காலையும்
பூத மைந்தை விடப் பூதலங்கடனிற்
பூவுமேது உவரேதுகாண்
சூதவிந்து ஜெகந்நாத சுத்தஜலஞ்
சூக்ஷிமாரறிவராண்டையே

சந்திரனுப்பாகிய இடியுப்பு தர்மபுரி திருப்பத்தூரி வட்டகை உவர்பூமியில் இருக்கிறது.

இதால் 64-சரக்கும் நீறுமெனல்.

இதற்கு விண்ணுப்பு என்று பெயர் விண்ணுப்பால் சூதம் முதல் சகலமும் அடங்கிக்கட்டும் என்று வள்ளுவர் 800-ல் 535-வது பாட்டில் சொல்லியிருக்கிறார்.

தரணிதனிற் பாலைநிலந் தர்மபுரி
திருப்பத்தூற் றழைக்கும் நாட்டிற்
கரணிசந்திரனுப்பதுவுங் களர்
நிலத்தி லோர் காலங்காணுங்காணு
மரணமதா யறுபத்து நாலு
சரக் கத்தமது வயிரம் நீராம்
பரணிதனில் வைத்து கெந்திபற்பமது
செய்ய நன்று பலிக்குந்தானே.

பிரணவநீர் பிரிக்குமுன் பூநீர், பாறைஉப்பு, நஞ்சு

மூன்றையும் எண்ணை நீக்கவேண்டும்

ஏற்கனவே சத்தி உப்பைக்கட்ட சிவகெங்கையாகிய பிரணவநீர் பிரிக்கும்விதத்திற்கு மேல் உள்ள பாட்டில் ஊமைக்குள் ஆகாயவிந்துவை வைத்து நாதம் இறக்கிட அடி முடி நடு மூன்றும் சாகும் என்று சொல்லியிருக்கிறார். ஆகாயவிந்துவாகிய நஞ்சை எண்ணை நீக்கி சுத்தி செய்யும் விதமும் அதைச்சுன்னம் செய்யும் விதமும் இந்த பாட்டில் இல்லை. அநேக சாஸ்திர ஆராய்ச்சியிலிருந்து நாம் கண்டுபிடித்துச்செய்த சுத்தியையும் சுன்னம் செய்யும் விதத்தையும் ஏற்கனவே எழுதப்பட்டிருக்கிறது ஆனால் இதற்கு நூல் ஆதரவு இல்லாமல் இல்லை. அகஸ்தியர் பரிபாஷை 500-ல் பிர்மகற்பம் என்பது உயிர் என்றும் அதற்கு உடல் மனித அமுரி என்றும் பிர்மகற்பத்தை அமுரியில் தீக்ஷை செய்யும்படியும் அகஸ்தியர் பரிபாஷை 1-வது காண்டம் 18-வது பாட்டில் சொல்லப்பட்டிருக்கிறது.

அமுரியிலுள்ள எண்ணையை நீக்கினால் விடமான நஞ்சு சுன்னமாகும் சூதம் சுன்னமாகும்.

என்று ஆதாரமிருப்பதை கவனியுங்கள்

யாகோபும் பூகிமுனியும் அமுரியிலிருக்கும் எண்ணையை நீக்கினால்தான் பூநீர் எண்ணை நீங்கி சுன்னமாகும். விடக்கல்லாகிய பிர்மகற்பத்தையும் எண்ணை நீக்கிய அமுரிதிராவகத்தில் தீக்ஷை செய்தால்த்தான் எண்ணை நீங்கி சுத்தியாகும். கடுங்கார சுன்னமாய் நீறும். அதனால் சூதம் சாகும் செம்பிலிட மாத்து பத்தாகும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அகஸ்தியர் சிவமுப்பு 50-ல் மதிநீரில் அகஸ்தியர் பரிபாஷை 500-லுள்ள பஞ்சசுன்னங்கலந்து பிர்மகற்பமாகிய விந்து என்ற சிவஉப்பாகிய இடியுப்பையும், நாதம் என்ற சத்தியாகிய பூநீரையும், விந்து நாதம் இரண்டும் கூடி விளைந்த பாறைஉப்பையும் 10-தீக்ஷை செய்து 3-யும் சேர்த்து முப்புச்சுன்னம் செய்யும்படியும் சொல்லியிருக்கிறார்.

ஆகையால்தான் நஞ்சு வெடியுப்பை 2-யும் அமுரி திராவகத்தில் பஞ்சசுன்னம் கலந்து தீக்ஷை செய்யும்படி கூறப்பட்டுள்ளது நஞ்சு சுன்னம் செய்யும்விதமும் அதை சிப்பியில் வைத்து செயநீர் இறக்கும் விதமும் அந்த செயநீரில் பூநீர் நஞ்சு பாறையுப்பு இவைகளை தீட்சைசெய்யும் விதமும் தீக்ஷைசெய்தால் கட்டும் என சொல்லப்பட்டுள்ளது.

கட்டியபின் சுன்னம் செய்து சிப்பியிலிடவும்

சிப்பியில் வைக்கவேண்டிய பாறையுப்பையும் சிவஉப்பும் சத்தியுப்பும் சுத்தித்துச் சுன்னம்செய்து சேர்க்கவேண்டும் என்பது நமது அபிப்பிராயம். சுத்திசெய்யாமல் சுன்னம் செய்யாமலே சேர்க்கச்சொல்லப்பட்டபடியே எழுதப்பட்டிருக்கிறது இதன் பின்னால் வரும் முறைகளுக்கும் பூநீர் நஞ்சு பாறைஉப்பு வெடியுப்பு நான்கையும் சுத்தி செய்து சேர்க்கவேண்டும் என்று கண்டிப்பாய் அறியவும்.

பிர்மகற்பம் என்ற நஞ்சு உயிர் அதற்கு உடல் மனித அமுரி.

உடல்போனால் உயிர்நிலையா வாறுபோல
ஓகோகோ பூரணமும் ஒக்கப்போச்சே

உடலுயிரும் பூரணமும் அயன் மால் ஈசன்
என்று அகஸ்தியர் ஓர் இடத்தில் சொல்லியிருக்கிறார்.

ஆகையால் உயிராகிய பிர்மகற்பத்திற்கு உடலாகிய மனித அமுரி சேர்க்கவேண்டும். சேர்க்காவிடில் ஓடிவிடும். பிர்மகற்பத்திலுள்ள பிராண கலை மங்கி தீய்ந்துவிடும் என்று நமது ஆராய்ச்சியால் தெரிய வருவதால் பிர்மகற்ப கற்சுண்ணாம்பிற்கு உயர்ந்த சிவதீட்சை மனித அமுரி என்றும் சிவனாச்சு என்றும் முப்புவரச்சு என்றும் அகஸ்தியர் பரிபாஷை 1-வது காண்டம் 19-வது பாட்டில் சொல்லப்பட்டிருப்பதால் பிர்மகற்பத்திற்கு முதல் முதல் அமுரி சேர்க்க வேண்டும் என்று நன்றாய்த்தெரிகிறது.

ஆனால் அமுரியிலுள்ள எண்ணையை நீக்கிச்சேர்க்கும் படியும்
அதற்காக அமுரியை திராவகம் இறக்கினால் எண்ணை
நீங்கிவிடும் என்று பூகிமுனியும் யாகோபும்
சொல்லியிருக்கிறார் அதற்காக

அமுரியிலுள்ள எண்ணையை நீக்க
அமுரியை திராவகம் இறக்கவேண்டும்
அமுரிதிராவகம் இறக்கும் விதம்

அமுரி யெண்ணெய் முரித்திட வாதிகேள்
குமரி சக்கரம் தன்னிலே யிட்டிடு
நமரி யாகவே தான்சுத்தி நீரதாம்
அமுரி யாவுமே எண்ணெயும் நீங்குமே.

வாங்கு திநீரை வாதாகப் பூநீரில்
தாங்கி யேற்றிட எண்ணையும் நீங்குமே
நீங்கிடப் பூநீரும் நீரும் சவுக்காரமாய்
பரங்கிட வங்கமும் நீலனும் நீறுமே.

உரை, ரசம் கட்டும் விதம்

அமுரியை திராவகம் இறக்கினால் அமுரியிலுள்ள எண்ணெய் நீங்கிவிடுமாம். அமுரி எண்ணெய் நீங்கி முறிந்தால், பூநீரிலுள்ள எண்ணெனை நீக்குமாம். பூநீர் எண்ணை நீங்கினால், பூநீர் சவுக்காரமாகி கடுங்காரச் சுன்னமாய் நீறுமாம். அதனால் வங்கம் நீறிவிடுமாம் அந்த வங்கச்சுன்னத்தால் துருசு நீறுமாம். அந்த துருசு சுன்னத்தில் விராலியிலையை இடித்துச் சேர்த்துப்பிழிந்திட, விராலியிலையில் சாரக்கி வருமாம். இரும்புக் கரண்டியில் சூதமிட்டு, விராலியிலைசாற்றை சுருக்கிட ரசம் கட்டி மணியாகும். வாதம் வந்து நிலைத்திடும் என்று பூகிமுனியால் சொல்லப் பட்டிருக்கிறது.

இதற்குள் சகல காரியங்களும் அடங்கியிருக்கிறதாம்
அனுபவ சித்தி பெற்றதாம்.

சடத்திநுட அமுரிபடி யாறுவாங்கி
சரியான கிடமிட்டு வாலைமூடி
திடமுடனே யெரிக்கப்புகை முரிந்துநீராம்
விடமான அமுரியது முரிந்துதானால்

வீடத்தினுட பூநீரை வெண்ணெய் நீக்கும்
வீடமான நஞ்சதுவு சுன்னமாகும்
திடமான சுன்னமுடன் தங்கம் சூதம்
திறமாக மூன்று மோரிடையாய்க்கூட்டி
அடவான கருங்கோழி வெண்கருவாலாட்டி
ஐம்பூதக் குகை தனிலே யிட்டேமூடி
திடமாக சீலைமண் வச்சிரமேயாக்கி
புடமாக முத்திபுமொருச் சாமமுத
திடமாக மூன்றுமே ஜெயசுன்னமாகும்
திறமாகச் செம்பிலிட மாற்றுப்பத்து
பத்தோடே நிற்காது காயசித்தியாகும்
பரனமருள் பெற்றோர் தமக்கே.

மூத்திரம் முறிக்கும் விதம் யாக்கோபு

மூத்திரமும் படியாறு முடிவாக வாலையிட்டெறித்து வாங்க
காத்திரமா வெண்ணெயுப்பு கனிவாக அடியில் நிற்குங் கனகநீரால்
சூத்திரமாய்ச் சவுக்காரம் கடுங்காரச் சுன்னமதாய்நீரும் சூதம்சாகும்
கோத்திரமாய்ச் செம்பிலிட குறையாது மாத்துப்பத்து குபேரன் தானே.

அமுரிதிராவகத்தை காரமேற்றி நஞ்சை தீட்சை செய்யவேண்டுமெனல்.

வாலையில் மனித அமுரியை திராவகம் இறக்கினால் அத்லுள்ள எண்ணை உப்பு நீங்கி சுத்த ஜலமாகிறது. அதில் பஞ்சசுன்னம் கலந்தால் அமுரிதிராவகத்தில் சுண்ணாம்புக்காரமேறுகிறது. சுண்ணாம்புகாரமேரிப அமுரி திராவகத்தை சிவஉப்பு, சத்திஉப்பு, பாறைஉப்பு 3-க்கும் ஊட்டவேண்டுமென்று நன்றாய்த்தெரிகிறது.

1-சத்தியுப்பில் சிவஉப்பைச்சேர்ப்பதற்கு தீக்ஷை என்று ரோமரிஷி சொல்கிறார்.

ரோமரிஷி 500-ல் சொன்னது என்னவென்றால் ஆகாசவெடியுப்பு, இதுவே ஆகாச சிவனுப்பு, இதுதான் அண்டம் இதற்கு முடி என்றும் பெயர். அடி என்பது பூநீர். இதுவே சத்தி என்ற உவருப்பாகிய பிண்டம் என்கிறார்.

இது 2-ம் சேர்ந்து ஒன்றானால் தீக்ஷை ஆச்சு என்கிறார். பலதைப்பார்த்து அலையாதே இந்தசூட்சம் நீ அறிந்தால் ஜெகமே செம்பொன்னாகும் என்கிறார்.

உரை

ஆகாசவெடியுப்பு என்ற சிவனுப்பாகிய அண்டம் என்பது பிர்மகற்பமாகிய நஞ்சு, இதற்கு முடி என்று பெயர். அடி என்பது சத்தியாகிய பிண்டம் என்ற உவராகிய பூநீர். இது 2-ம் ஒன்றானால் தீக்ஷை ஆச்சு என்று ரோமரிஷி சொல்கிறார்.

அகஸ்தியரோ!
உ-சத்தியுப்பில் சிவஉப்பைச்சேர்ப்பதற்கு தீக்ஷை என்று சொல்கிறார்.

அதற்காக பஞ்சசுன்னத்தில் சேர்க்க

அகஸ்தியர் பரிபாஷை 500-ல் 1-வது காண்டம் 69-வது பாட்டுப்படி பஞ்சசுன்னம் செய்து பஞ்சசுன்னத்தில் வகைக்கு 1.ரு எடையை 1-படி அமுரி திராவகத்தில் கலக்கி தெளிவை இறுத்து அதில் சத்தியாகிய பூநீர் ஒரு பங்கும் அமுரி திராவகம் 4-பங்கில் கரைத்து தெளிவை இறுத்து. அந்தத்தெளிவை பீங்கானிலிட்டு ரவியில் உலர்த்தவும். மண் தூசி விழாது உலர்த்தி எடுத்து பின்னும் முன்போல் அமுரி திராவகத்தில் கரைத்து தெளிவை இறுத்து பீங்கானிலிட்டு ரவியில் உலர்த்தவும், இப்படி 10-தீட்சை செய்துக் கொள்ளவும் இதுவே நல்ல சுத்தி எண்ணெய் நீங்கி விடும். பின் சிப்பி திராவகத்தில் 10-தீட்சை செய்ய பூநீர் கட்டும்.

பூநீரைக் கட்டும் விதம்
சிப்பி திராவகத்தில் பூநீர் கட்டும்.

பஞ்சசுன்னம் கலந்த அமுரிதிராவகத்தில் 10-தீட்சை செய்த பூநீர் ஒரு பங்கை நாலுபங்கு சிப்பிதிராவகத்தில் கரைத்து தெளிவிறுத்து ரவியில் உலர்த்தவும். இப்படி 10-தீட்சை செய்ய பூநீர் கட்டும். பின் சுண்ணாம்பில் 50-நாள் புதைத்து எடுக்க வேண்டும்.

சிப்பி திராவகமிறக்கும் விதம் பின் எழுதப்படும்.
பூநீரில் உள்ள கசிவு எண்ணெய் நீக்கும் விதம்

இப்படிச்செய்த பூநீரை வெண்கருவிலரைத்து ஒரே வில்லைதட்டியுலர்த்தி ஒரு சட்டியில் 3-விரல் கனம் சிப்பிச் சுண்ணாம்பிட்டு பூநீர் வில்லையைவைத்து மேலும் 3-விரல் கனம் சிப்பிச்சுண்ணாம்பு வைத்து அமுத்தி மூடி 3-சீலைமண்செய்து மழைவிழாத இடத்தில் ஒரு கெஜஆழத்தில் புதைத்து 50-ம் நாள் எடுக்க எண்ணெய், கசிவு, ஊரல் நீங்கிவிடும். சிப்பிச்சுண்ணாம்பு கிடைக்காவிடில் சுக்கான்கல்ச்சுண்ணாம்பும் கீழ்மேல் வைக்கலாம்.

பின் பூநீரைச்சுன்னம் செய்து
பிரணவநீர் பிரிக்கவேண்டும்.

அதற்கு வேண்டிய

பஞ்சசுன்னம் செய்யும் விதம்.

அகஸ்தியர் பரிபாஷை 500-ல் 1-வது காண்டம் 69-வது பாட்டு

பகருவேன் குக்கிடத்தின் சுன்னமொன்று
பரிவான கற்கிளிஞ்சிச் சுன்னமொன்று
நிகரில்லா வெள்ளைக்கல் சுன்னமொன்று
நீரான கடல்நுரையின் சுன்னமொன்று
சுகமான வலம்புரியின் சுன்னமொன்று
துகளிலா அஞ்சுவகைச் சுன்னத்தாலே

தகைபெறு சீர் நாதமதைச் சுண்ணாம்பாக்கிச்
சாகரநாதஞ் சேர்க்கத்தண்ணீராமே.

குக்கிடம் என்பது கோழி. அதாவது கோழிமுட்டைத் தோட்டுச்சுன்னம்.
கற்கிளிஞ்சி என்பது முத்துச்சிப்பித்தோடு.
வெள்ளைக்கல் என்பது வெள்ளைக்கல் என்று சாத்தூரில் ஒரு பலிங்கிச் சுண்ணாம்புக்கல் விளைந்திருக்கிறது அதிக காரமுள்ளது அது கிடைக்காதவர்கள் சுக்கான்கல்ச் சுண்ணாம்பை சேர்க்கலாம்.
கடல்நுரை என்பது லேசான கடல்நுரை.
வலம்புரி என்பது வலம்புரிச்சங்கு - இது கிடைப்பது அரிது விலை உயர்ந்தது அதற்குப்பதில் குழந்தைகட்கு பாலூட்டும் இடம்புரிச்சங்கைச் சேர்க்கலாம்.
நாதம் என்பது பூநீர்.
சாகரநாதம் என்பது பாறையுப்பு.

பஞ்ச சுன்னம் செய்யும்முன்

5-சரக்கையும் சுத்தி செய்யவேண்டும்.

5-சரக்கையும் சுத்தி செய்யும் விதம்

1-படி அமுரியில் சுக்கான்கல்ச்சுண்ணாம்பும் பூநீரும் வகைக்கு 3-ரூ. எடைபோட்டு குச்சியால் கலக்கி அதில் 15-ரூ. எடை கோழிமுட்டைத்தோடிட்டு ஒருமணி நேரம் எரிக்க சவ்வெல்லாம் கரைந்து என்ணை கக்கி நல்ல சுத்தியாகும். அதேமாதிரி பாக்கி 4-சரக்கையும் தனித்தனியாக வேகவைக்க என்ணை நீங்கி நல்ல சுத்தியாகும். இப்படிச் செய்வதால் 5-சரக்கும் தனித்தனி கட்டுப்பட்டும் விடுகிறது.

பஞ்சசுன்னத்திற்கு வேண்டிய 5-சரக்கையும் சுன்னம் செய்யும் விதம்.

இப்படிச்சுத்திசெய்த கோழிமுட்டைத்தோட்டை கழுவி உலர்த்தி தேய்த்துப்புடைத்து, சவ்வு நீக்கி இடித்துச்சலித்து 15-ரூ. எடையை வெண்கருவில் அரைத்து சிறு வில்லைகளாகத்தட்டி உலர்த்தி சட்டியிலிட்டு மூடி 3-சீலைமண் செய்துலர்த்தி 300-ரு எடை எருவில்புடமிட நல்ல சுன்னமாய்நீறும் இதேமாதிரி மற்ற 4-சரக்கையும் சுன்னம் செய்து கொள்ளவேண்டியது.

பிரணவநீரில் சிவஉப்பைக்கலக்க குருவாகும் இதில் ஜெனிப்பது தங்கரசமென்றும் பிர்மஉப்பு என்றும் பெயர்.

தண்ணீராஞ் சிவகங்கை சுத்தகங்கை
தாயான பிராணனுமே சுத்திபானம்
தண்ணீராஞ் சத்தியெனு நாதத்துள்ளே
கலந்த பரப்பிரமவிந்து கலந்ததானால்
ஒன்றானசுக்கிலமும் குருவுமாச்சு
ஓகோகோ தங்கரச முதித்ததம்ம

மண்ணோடு புனல் முதலா யேமமாச்சு
மாறாக விந்திரன் போல் வாழ்வுண்டாச்சே 70

பிரணவநீருக்கே சவுக்கார செயநீர் என்று பெயர்

வாழ்வான சத்திக்குத் தீட்சைமுல
வகையறியச் சொல்லாது நூல்கடோறும்
தாழ்வில்லா சத்தியுஞ் சிற் சத்திக்குள்ளே
தான்கலந்து முன்சென்மந் தானேசென்றாள்
கோளேது மில்லாத நாதச்சுன்னம்
கூறுமந்த சுன்னநவக் கடலின்மூழ்கி
தாயான பிரணவநீர் தானுமாச்சு
சவுக்காரச்செயநீரைச் சாற்றினேனே 71

தூற்றுகின்ற சிற்சத்தி பஞ்சமித்திரஞ்
சத்திக்குப் பின்புதித்த போகசத்தி
வேற்றுருவு போலிருந்தா லுயிருமானாள்
மேதினியோர்க் குபகாரி பஞ்சமித்திரம்
தோற்றுகின்ற பஞ்சமித்திரந் தீட்சைவிட்டால்
சுத்தகங்கை யாகாது நாதசத்தி
காற்றடிக்குங் காந்தமலரும் கடலுஞ்சேர்ந்தால்
கரைகாணா வாதசித்தி கைக்குள்ளாச்சே. 72

உரை

சிற்சித்தி என்பது புநீர்.
பஞ்சமித்திரம் என்பது பூநீரைக்குறிக்கிறது.
முத்தசத்தி என்பது பாறையுப்பு.
காந்தமலர் என்பது நஞ்சு என்ற பிர்மகற்பம்.
கடல் என்பது பாறையுப்பைக்குறிக்கிறது. பாறையுப்புக்கும் பஞ்சமித்திரம் என்று வள்ளுவர் 800-ல் சொல்லியிருக்கிறார்.

அமுரியினால் வளையல் நஞ்சின் குணம் மாறி அமுதமாகும் என்பதற்கு ஆதரம்

அகஸ்தியர் பரிபாஷை 1-வது காண்டம் 45-வது பாட்டில் சிவஉப்பை அமுரியில் முதல்தீக்ஷை செய்யும்படியும் ரவியில் உலர்த்த உருவாச்சு என்றும் அன்றே சந்திரனில் வைக்க குருவாச்சு அமுதமாச்சு காயசித்தி வாதசித்தி காணலாமென்றும் அமுரியினால் கல்லுப்பாச்சு என்றும் சொல்லியிருப்பதால் அமுரியினாலேயே நஞ்சின் குணம்மாறு அமுதமாகிறது என்று நன்றாய்த்தெரிகிறது.

பிரணவநீரில் நஞ்சை தீட்சை செய்ய அமுதமாகும் என்பதற்குச்சட்டம்

வளையல் நஞ்சிலுள்ள நஞ்சின் குணமும், விஷமும் மாறி கொல்லும் தன்மையற்று அமுதமாகுமெனல்.

ஆச்சப்பா சிவத்திற்கு தீட்சைமார்க்கம்
ஐந்நூற்றிற் சொல்லுகிறேன் விரிவதாக
மூச்சப்பா நாதமெனு முன்னிற்பின்னின்
மூதண்ட பிரணவமாஞ் செயநீர்க்குள்ளே
தோச்சப்பா அபிடேகஞ் செய்யச்செய்ய
தோஷமெலாம் விலகியே சுயம்புமாகும்
நீச்சப்பா கடல் கடந்தே யமுதமாச்சு
நிசமாக சிவதீட்சை நினைவாய்ப்பாரே. 73

சமுத்திரத்தைக்கடைந்து அமுதமாக்கி தேவர்கள் புசித்தார்கள் என்று சட்டமிருப்பதால் சமுத்திரத்திலுள்ள பாறையுப்பு நஞ்சில் சேர்வதால் வளையல் நஞ்சானது. அமுதமாக மாறிவிட்டது என்று உரை விளங்குகிறது.

பிர்மஉப்பு ஜெனித்தல்

நினைவாகப் புருடனுக்குப் பெண்மேல் மோக
நெரிகரி பூங்குழல் மடவார்கட்கு ஆடவன்மேல்மோகம்
கனமாக இருவருமே கலந்தபோது
கமல மலர் வதனமோ டுதிக்கும்பிள்ளை
இனிதான பிள்ளையினால் எல்லாமுண்டாம்
இந்தவித மாயிருக்குந் தீட்சைமார்க்கம்
வனவாச மாய்த் திரியும் வேடந்தோரே
மன்னவர்க்கும் மங்கையற்கும் வயதுகேளே. 74

என்று அகஸ்தியர் பரிபாஷை 1-வது காண்டம் 74-வது பாட்டில் பிர்மஉப்பு ஜெனிக்கும் வரை சொல்லியிருக்கிறாரே யொழிய பிரணவ நீரில் எப்படி தீட்சை செய்யவேண்டும் என்பதையும், சிவஉப்பு எடுக்கும் விதமும் இதைச்சுன்னம் செய்யும் விதம் இந்த இடத்தில் தொடர்ச்சியாய்ச்சொல்லாமல் மறைத்து பரிபாஷை 5-வது காண்டம் 26,27-வது பாட்டுகளில் சிவஉப்பு எடுக்கும் விதமும் 28-வது பாட்டில் புதைத்து தீட்சைசெய்யும்படியும் 39-வது பாட்டில் சுன்னம்செய்யும் விதமும் பரிபாஷை 5-வது காண்டம் 32-வது பாட்டு முதல் அதன் பெருமையையும் சொல்லியிருக்கிறார்.

சுத்தகெங்கை பிரிக்க
பூநீரை சுன்னம் செய்யும் விதம்

அகஸ்தியர் பரிபாஷை 1-வது காண்டம் 69,70-வது பாட்டுப்படி செய்த பஞ்சசுன்னம் 15-ரூ. எடை. சுத்திசெய்த பூநீர் 15-ரூ. எடை. இரண்டையும் ஒரு கல்வத்திட்டு வெண்கருவால் அரைத்து ஒரே வில்லைதட்டி உலர்த்தி ஒரு சட்டியிலிட்டு மூடி மூன்றுசீலைமண் செய்து உலர்த்தி 200-ரூ. எடை. எருவில் குக்குட புடமிட கொடிய சுன்னமாகும்.

வெண்கருவால் அரைக்கும்படி நூலில் சொல்லவில்லை
நாம் கண்டுபிடித்து செய்த அனுபவப்படி எழுதப்பட்டது.

சுத்தகெங்கை பிரிக்க பூநீர் சுன்னத்தில் சேர்க்கவேண்டிய பாறைஉப்பை சுத்தி செய்யும் விதம்

1-படி அமுரிதிராவகத்தில் 5-ரூ. எடை. பஞ்சசுன்னம் கலந்து தெளிவை இறுத்து அதில் கால்ப்படி பாறையுப்பை நுணுக்கிப்போட்டு தெளிவிறுத்து ரவியில் உலர்த்தி இப்படி 10-சுத்தி செய்த பாறையுப்பை சிப்பிதிராவகத்தில் 10-தீட்சை செய்து மேல்க்கண்டபடி அல்லது 90-வது பக்கப்படி புதைத்து எடுக்க என்னை கசிவு ஊரல் நீங்கிவிடும்.

பின் சுத்த கெங்கை பிரிக்க பூநீர் சுன்னத்துடன் சேர்க்கவும்.

இந்த பூநீர் சுன்னத்துடன் இந்த பாறையுப்பைச் சேர்த்து அகஸ்தியர் பிரணவநீர் பிரிக்கும் விதம் 15

மேற்படி பூநீர் சுன்னத்திற்கு சமஎடை முன்போல் சுத்திசெய்து புதைத்தெடுத்த பாறை உப்பைச்சேர்த்து அரைத்து பனியில்வைக்க ஜெயநீர் ஆகும். அதுவே சிவகெங்கை என்றும் சுத்தகெங்கை என்றும் பிரணவநீர் என்றும் சவுக்கார ஜெயநீர் என்றும் அகஸ்தியர் பரிபாஷை 1-வது காண்டம் 70-வது பாட்டில் சொல்லப்பட்டிருக்கிறது.

பாறையுப்பை இப்படி சுத்தி செய்யும்படியும் புதைத்து எடுக்கும்படியும் அகஸ்தியர் பரிபாஷையில் சொல்லாமல் பிரணவநீர் பிரிக்கும்படி மட்டும் சொல்லியிருக்கிறார்.

அகஸ்தியர் பிரணவநீரில் சிவஉப்பை தீட்சை செய்யும் விதம்

இந்த ஜெயநீரில் சிவஉப்பாகிய நஞ்சை தீக்ஷை செய்யும்படியும் முன்னாதமாகிய பாறைஉப்பும் பின்னாதமாகிய பூநீரும் சேர்ந்துவந்த பிரணவநீரில் சிவஉப்பை பீங்கானிலிட்டு கைதொடாமல் கரைத்து அகஸ்தியர் வழலை சூஸ்திரம் 7-ன் படி சந்திரனில் வைத்துப்புடம் செய்ய வேண்டும் என்பதையும் அகஸ்தியர் பரிபாஷை 5-வது காண்டம் 28-வது பாட்டுப்படி 10-பங்கு பிரணவநீரில் ஒருபங்கு சிவஉப்பிட்டு 1-மண்டலம் புதைத்தெடுக்க பிர்மஉப்பு ஜெனிக்கும் அதை மேற்படி 39-வது பாட்டுப்படி சுன்னம்செய்யவேண்டும் என்பதையும் கவனத்தில் வைத்துக்கொள்ளுங்கள் இப்படி புதைத்துஎடுப்பதே தீட்சைஎன்றும் இதில் சிவஉப்பின் தோஷமெல்லாம் நீங்கி விஷம் நஞ்சு மாறி அமுதமாகிய பிர்மாவெனும் ஒரு பிள்ளை பிறக்கும் அதாவது அண்ட பிண்டம் பூக்கும் என்கிறார்.. பிள்ளை பிறக்கும் என்று முன் சொல்லியிருப்பதால் பத்துமாத கெற்பத்தில் பிள்ளை பிறக்க வேண்டும் மதிவெண்பா 100-ல் வித்துவாகிய சிவஉப்பை 10-மாதம் பிரணவநீரில் புதைத்தெடுத்தால் தேகம் அழியாது என்று சொல்லப்பட்டிருப்பதால் 10-மாதம் பூமியில் புதைந்து கெற்பமாய் விளையச்செய்வதே சிறந்த முறை என்பது நமது அபிப்பிராயம்.

நான் கண்டுபிடித்த ரகசியம்

என்னவென்றால் சிவ உப்பாகிய நஞ்சை பிரணவநீரில் தீட்சை செய்யுமுன் அமுரிதிராவகத்தில் தீட்சை செய்யவேண்டும் ஏனென்றால்

பிர்மகற்பமாகிய நஞ்சு என்பது உயிர்.

உயிருக்கு உடல் சேர்க்காவிடில் உயிர் நிலைக்காது.

என்று சட்டமிருப்பதால் உயிராகிய பிர்மகற்பத்திற்கு, அதாவது வளையல் நஞ்சுக்கு உடலாகிய மனிதஅமுரி சேர்த்து தீட்சை செய்யவேண்டும். எப்படி தீட்சை செய்வதென்றால் பஞ்சசுன்னம் கலந்த அமுரி திராவகத்தில் நஞ்சைக்கரைத்து பகலில் ரவியில் உலர்த்தவேண்டும். அன்றுராத்திரியும் சந்திரன் ஒளிபட வைக்கவேண்டும் என்று அகஸ்தியர் பரிபாஷை 1-வது காண்டம் 45-வது பாட்டில் சொல்லப்பட்டிருக்கிறது.

இப்படிச்செய்வதால் ஓடாது கட்டுப்பட்டும் விடுகிறது பின் நஞ்சைக்கொல்வதற்கு சிப்பிதிராவகத்தில் தீட்சை செய்யவேண்டும். பின் நஞ்சிலுள்ள எண்ணை கசிவுஊரல்நீங்க முன்னரே கூறியுள்ளபடி அல்லது அடியில் கண்டபடி புதைத்து எடுக்கவேண்டும்.

நஞ்சை தீட்சை செய்யும்விதம்

அகஸ்தியர் வழலை சூஸ்திரம் 7-ன் படி நஞ்சுக்கு பிரணவநீருட்டி சந்திரனில் வைத்து பாடம்செய்து அகஸ்தியர் பரிபாஷை 5-வது காண்டம் 28-வது பாட்டுப்படி ஒரு பீங்கானில் 10-பங்கு பிரணவநீரிட்டு அதில் ஒருபங்கு நஞ்சிட்டு மூடி 7-சீலைமண் செய்து ஒரு சட்டியில் வைத்து மூடி 3-சீலைமண் செய்து மழை விழாத இடத்தில் ஒரு கெஜ ஆழத்தில் 1-மண்டலம் புதைத்து எடுக்க பிர்மஉப்பு ஜெனிக்கும் அல்லது மதிவெண்பா 100-ப்படியும் தீட்சைசெய்து மிகவும் நல்லது இது உயர்ந்த முறை.

பிர்ம கற்பமாகிய நஞ்சு என்பது உயிர் உடலாகிய மனித அமுரிசேர்க்கவேண்டும்

ஆனால் 1-படி அமுரிதிராவகத்தில் 5-ரு. எடை. பஞ்சசுன்னம் கலந்து தெளிவை இறுத்து அதில் நஞ்சை கரைத்து (1-க்கு 4-பங்கில் கரையும்) தெளிவிறுத்து ரவியில் உலர்த்தவும். அன்றுராத்திரி சந்திரனில் பாடம் செய்ய வேண்டும் நன்றாக உலர்ந்தபின் இதற்கு ஒரு தீட்சை என்று பெயர். இந்தப்படி 10-தீட்சை செய்துகொள்ளவேண்டியது. பின் சிப்பி திராவகத்தில் 10-தீட்சையும் செய்யவேண்டும் பின் அடியில் கண்டபடி புதைத்து எடுக்க எண்ணை கசிவு ஊரல் நீங்கிவிடும். பின்மேலேகண்டபடி பிரணவநீருட்டி சந்திரனில் பாடம்செய்து பின் புதைத்தெடுக்க பொன்போல் ஒரு பிள்ளைபிறக்கும் இதற்கு பிர்மஉப்பு என்று பெயர். இது சகலத்தையும் சிருஷ்டிசெய்யும் என்று அகஸ்தியர் பரிபாஷை 500-ல் 1-வது காண்டத்தில் 15,74-வது பாட்டுகளில் சொல்லியிருக்கிறார். அதை அகஸ்தியர் பரிபாஷை 5-ம் காண்டம் 39-வது பாட்டுப்படி சுன்னம் செய்ய வேண்டும்.

பிர்மகற்பமாகிய வளையல் நஞ்சை
எண்ணை கசிவு ஊரல் நீக்க சமாது வைக்கவேண்டும்

நஞ்சிலுள்ள கசிவு எண்ணெய் ஊரல் நீக்க புதைத்தெடுக்கும்விபரம்

இப்படி சுத்தி செய்த நஞ்சை வெண்கருவிலரைத்து, ஒரே வில்லை தட்டியுலர்த்தி, சிப்பிச்சுண்ணாம்பை வெண்கருவிலரைத்து அந்த வில்லைக்கு கனமாய் அப்பி உலர்த்தி

வெடிக்குமுன் ஒரு சட்டியில் 3-விரல் உயரம் சிப்பிச் சுண்ணாம்பிட்டு அவ் வில்லையை வைத்து மேலும் 3-விரல் கனம் சிப்பி சுண்ணாம்பிட்டு அமுத்தி சட்டி மூடி 3-சீலைமண் செய்து மழை விழாத இடத்தில் 1-கெஜ ஆழத்தில் புதைத்து 50-ம்நாள் எடுக்க ஊரல் என்னெய் கசிவையெல்லாம் சிப்பிச்சுண்ணாம்பு இழுத்துக்கொள்கிறது. கசிவற்றுவிடுகிறது. இம்முறை முந்நூல்களிலில்லை.

இது நாம் கண்டுபிடித்து செய்த அனுபவப்படி எழுதப்பட்டது

2-சத்தி செயநீரில் சிவஉப்பை தீட்சை செய்ய பொன்போல் ஒரு பிள்ளைப்பிறக்கும் இந்தப் பிள்ளைக்குப் பெயர் பிர்மன்

இந்தப்பிள்ளைக்குப் பிதா சூரியன். அதாவது நஞ்சு

புருஷனுக்கு பெண்மேல் மோகம் என்றும் பூக்குழல் மடவார்கட்கு ஆண்மேல் மோகம் என்றும் இருவரும் கலந்தபோது இதில் ஒரு பிள்ளை பிறக்கும் என்றும் இந்தப்பிள்ளையினால் எல்லாம் உண்டாகும் சகலமும் சித்திக்குமென்றும் மேற்படி பரிபாஷை 1-வது காண்டம் 74-வது பாட்டில் சொல்லப்பட்டிருக்கிறது.

அகஸ்தியர் பரிபாஷை 1-வது காண்டம் 15-வது பாட்டில்

பெண்ணாரும் புருடருமே சேர்ந்தாரானால்

பொன்போலே பிள்ளை யொன்று பிறக்கும் பாரே.

என்றும், இந்தப்பிள்ளைக்குப் பிதா சூரியன் என்றும் கனலிலே பிறக்குமென்றும் இந்தப்பிள்ளையே சகலத்தையும் சிருஷ்டி செய்யக்கூடிய பிர்மன் என்றும் 1-வது காண்டம் 16-வது பாட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. பிர்ம உப்பைக் கண்டவனே குணசிரேஷ்டன் என்று பரிபாஷை 1-வது காண்டம் 57-வது பாட்டில்சொல்லப்பட்டிருப்பதால் பிர்ம உப்பைத் தெரியவேண்டும் இதினால் பிர்மஉப்பு இன்னதென்று தெரிந்துவிட்டது

சிவஉப்பு சூரியனிடத்திலிருந்து சூரியன் கனலினால் பிறந்திருப்பதால்

நஞ்சாகிய சிவஉப்புக்கு சூரியன் என்று பெயர்.

அகஸ்தியர் பரிபாஷை 1-வது காண்டம் 76-வது பாட்டில் மன்னவனே அகாரம் விந்து 16-வயது. சூரியனிடத்தில் பிறந்த பாலன் கைப்பெனும் பெண்ணெடுத்து வாழ்ந்த தீரன் என்று சொல்லியிருப்பதால் சிவஉப்பு சூரியனிடத்திலிருந்து பிறந்தது என்று நன்றாய்த்தெரிகிறது ஆகையால் சிவஉப்புக்கு சூரியன் என்றும் கனலிலே பிறந்தது என்றும் மேற்படி 1-15-வது பாட்டில் சொல்லியிருக்கிறார்.

மன்னவன் அகாரம் விந்து 16-வயது. சூரியனிடத்தில் பிறந்த பாலன் கைப்பெனும் பெண்ணெடுத்து வாழ்ந்ததீரன் என்று அகஸ்தியர் பரிபாஷை 1-78-ல் சொல்லப்பட்டிருப்பதால் அந்தப்பெண் எது என்று தெரியவேண்டும். இதுவரை புருஷன் சிவஉப்பு சூரியன், கனலினால் பிறந்தது அதுவே வளையல் நஞ்சு அதற்கு சிவமென்றும் சூரியனென்றும் பெயர் என்று தெரிந்துகொண்டோம். இனி அதற்கு வேண்டிய பெண்ணை தெரியவேண்டும்.

கைப்பெனும் பெண்ணெடுத்து வாழ்ந்த தீரன் என்று
சொல்லப்பட்டிருப்பதால் அதை ஆராய்வோம்

அகஸ்தியர் பரிபாஷை 1-வது காண்டம் 52-வது பாட்டில் சூலாகி பத்து நாள் சென்றபின்பு சுத்தகெங்கை என்ற ஒரு பெண் பெற்றிட்டாள். இப்பிள்ளைக்கு பிதா சந்திரனாச்சு என்றும் இந்தப்பிள்ளையைப் பெற்றதாய் 84-லக்ஷம் உயிர்ப்பிராணிகளுக்கும் இசைந்தயோனி என்றும் 53-வது பாட்டில் சொல்லப்பட்டிருக்கிறது.

சுத்தகெங்கை பிறக்கும் விதம்

அப்படியானால் சுத்தகெங்கை பிறப்பதற்கு சந்திரன் தகப்பன் என்றும் பூமி தாயென்றும் தெரிகிறது. இந்தத் தாயாகிய பூமாதேவி ஈன்ற அதாவது வெளிப்படுத்தின நாதமே சிவகெங்கை என்றும் ஆகாசதூறு தண்ணீராம் என்றும் 53-வது பாட்டில் சொல்லியிருப்பதால் (தூறு என்பது புதர்) ஆகாசத்திலிருந்து வந்து பூமியின்புதரில் உற்பத்தியாகியிருக்கிறது சுத்தகெங்கை என்று தெரிகிறது.

சுத்த கெங்கை எடுக்கும் காலம்

தசமியிலே முடிந்த பிண்டம் தப்பில் சுத்தகெங்கையாகாவாறே என்று பரிபாஷை 1-வது காண்டம் 78-வது பாட்டில் சொல்லப்பட்டிருப்பதாலும் மேற்படி 53-வது பாட்டில் பிறந்தவுடன் மறுநாளில் இறுந்துபோச்சு என்றும், உற்ற உதயாதிதனில் பிறந்தபிள்ளை உதவுமல்லாமல் செத்த பிள்ளைக்குயிர்தானுண்டோ என்று சொல்வதாலும் பூர்வபட்சம் தசமியன்று அதாவது 10-வது திதியில் சுத்த கெங்கைபிறப்பதாயும் சூரியன்படாமல்பிறந்தவுடன் எடுக்கவேண்டுமென்றும் உதயாதி எடுக்கத்தவறினால் பிறந்தவுடன் மறுநாள் இறந்துபோகுமென்றும் சொல்வதால் சூரிய உதயாதிக்கு முன் சுத்தகெங்கை எடுக்கவேண்டும் என்று தெரிகிறது.

லாடர்நூல்களில் சத்திகெங்கை என்றும் சிவகெங்கை என்றும் 2-விதம் பூமியில் பிறக்கிறது

என்பதற்கு ஆதாரம்

லாடர் 83-ல் 57-வது பாட்டும் 16-ல் 15,16-பாட்டும் தீட்சை 16-ல் 6,7, ,12-வது பாட்டுகளிலும் 22-ல் 16,17-வது பாட்டுகளிலும், 45-ல், 29, 30-வது பாட்டுகளிலும் பூமியில் இடியுப்பு உற்பத்தியாகும்போது 2-வித கெங்கையும் உற்பத்தியாவதாயும் கெங்கை எடுக்கும் விதமும் எடைபாகங்களுடன் சத்திசிவஉப்பை தீட்சை செய்யும் விதமும் புடமிட்டுச்சுன்னம் செய்யும் விதமும் அதனால் ரசம் கட்டும் விதமும் வேதையும் சொல்லப்பட்டிருக்கிறது. லாடர் கோர்வை நூலைப்பார்த்துக்கொள்ளவும்.

அதில் சத்திசிவ உப்பு விளையும் விதமும் சத்திகெங்கை சிவகெங்கைவிளையும் விதமும் அடையாளஙகளும் பூசை செய்து எடுக்கும் விதமும் நேரமும் அதை தீட்சைசெய்யும் விதமும் சுன்னம் செய்யும் விதமும் வேதையும் சொல்லப்பட்டிருக்கிறது.

முப்புவைப்பற்றி 18-சித்தர்களும் பரிபாஷையாக மறைத்துப்பாடி
விட்டார்கள் லாடர் பரிபாஷையாய் மறைக்காமல் வெகு
தெளிவாய்ச் சொல்லியிருக்கிறார்.

சத்தி சிவ கெங்கை நிறம்

லாடர் 45-ல் பூமியில் சிவகெங்கை வெள்ளை நிறமாய் விளைவதாவும் சத்திகெங்கை சிவப்பு நிறமாய் விளைவதாகவும் எடுக்கும் விதமும் தீட்சைசெய்யும் விதமும் சொல்லப்பட்டிருக்கிறது அதைப்பின் விரிவாய் எழுதப்படும். இதிலிருந்து நாம் தெரிந்து கொள்வது என்னவென்றால் பூநீர் சிவஉப்பு சத்திகெங்கை சிவகெங்கை இவ்வளவும் பூமியிலிருந்து எடுக்கவேண்டும் என்று நன்றாய்த்தெரிகிறது.

லாடர் 16-ல் தீட்சை விபரம்

சிவஉப்பை சத்திகெங்கையிலும் சத்தியுப்பை சிவகெங்கையிலும் தீட்சை செய்து புடமிட சுன்னமாகும் ரசம் கட்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப்படி சிவசுன்னம் செய்ததும் ரசம் கட்டும் விதம்.

பூநீர் பிறக்கும் விதம்

அகஸ்தியர் பரிபாஷை 1-வது காண்டம் 54,55-வது பாட்டுகளில் சமுத்திரத்தில் பாறையுப்பு முத்தவனாகப் பிறந்திருப்பதாயும் இளையவளாகிய பூநீர் பூமியில் பிறக்குமுன் கொண்டலாகிய மேகத்தில் பச்சைநிற உப்பாய் குடியிருந்து சந்திரனுடன் சேர்ந்து சிலநாள் சென்று கொக்கு இறகுபோல் மறுஜென்மத்தில் பூமியில் பிறந்தாள் என்றும்சொல்லப்பட்டிருக்கிறது பரிபாஷை 2-வது காண்டம் 16-வது பாட்டில் ஈசனுப்பு தண்ணீராச்சு என்றும் பூத்தச்சுன்னம் சத்தியன்றோ மண்ணேயாச்சு என்றும் ஈசன் பூநீராகிய சத்திக்குள் அடக்கமாயிருக்கிறான் என்றும், 14-வது பாட்டில் பூநீரே நிலஉப்பு என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

சத்தியுப்பு சிவஉப்பு பூமியில் விளைகிறது

என்பதற்கு ஆதாரம்

அகஸ்தியர் பரிபாஷை 1-வது காண்டம் 65-வது பாட்டில் தங்கமதை உண்டாக்கும் விந்துநாதம் சாரமென்றும் காரமென்றும் தருமே பூமிஎன்று சொல்லியிருப்பதால் பூமியில் காரசாரமாகிய விந்துநாதம் என்ற சத்திசிவஉப்பு விளைகிறது என்பதைக் காட்டுகிறது.

கைப்பெனும் பெண் என்பது பூநீர்
சத்திசிவ உப்பு வெளிவரும் காலம்

மேற்படி 77-வது பாட்டில் மீனமேடம் பூவையரும் வளர்பிறையில் பூரிப்பானாள் பங்குனி சித்திரை மாதங்களில் வளர்பிறையில் பூவையராகிய பெண் என்ற பூநீர் பூர்க்கும். புருஷன் தேய்பிறை 16-ம் நாள் ஜெனிக்கும் அதாவது மாசி பங்குனியில் வளர்பிறை பிரதமையன்று சிவஉப்பு வெளிவரும் என்று 79-வது பாட்டிலும் 75-வது பாட்டிலும் மங்கையெனும் உகார சத்திநாதத்தாய்க்கு வயது பத்து என்றும் சந்திரன் மகள் என்றும் திரண்டபின்பு தான்குடியிருந்த இடத்தை விட்டு வெளியே வந்தாள் என்றும், ஏகாலி அதைக்கந்தைக்கிட்டு வெளுத்தான் என்றும், ஆனால் பத்துவயது சென்ற கன்னி பசிதவிர்த்த வாதிமுகம் பார்த்திட்டாளே என்று பரிபாஷை 1-வது காண்டம் 75-வது பாட்டிலும் மன்னவனுக்குப் பதினாறுவயது என்று 76-வது பாட்டிலும் அப்பாட்டில் கைப்பெனும் பெண்ணெடுத்து வாழ்ந்த தீரன் என்று சொல்வதாலும் கைப்பெனும்பெண் என்பது பூநீர் என்று தெரிகிறது (சுத்தகெங்கைக்கும் பூநீருக்கும் தகப்பன் சந்திரன்.)

பூநீரில் பிர்மாவாகிய மண்ணும் மாலாகிய ஜலமும் அரனாகிய ஈசன் என்ற அக்கினியுப்பும் கூடியிருக்கிறது

என்பதற்கு ஆதாரம்

மேற்குறிப்பிட்ட 2-வது காண்டம் 15-வது பாட்டில் பூநீரில் 3-பொருள் அடங்கியிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

பூநீரிலுள்ள பூ என்பது பிரமன் அதாவது மண், பூநீரிலுள்ள ஜலம் என்பது அரனும் மாலுமாச்சு அந்த மாலே ஈசனானான் அந்த பிரமனே சத்தியானான் ஷசரத்துக்கு அடுத்திருந்த உப்பே ஈசன். ஈசனுப்புக்கு மேலிருந்த மண்ணே சத்தி. தாசிகள் அணிவதற்கு இந்த மண்ணன்றோ வளையலாச்சு. சத்தியாகிய இந்தபூநீரை விட்டால் பூநீரில் ஜலவடிவாயிருக்கும் ஈசனுப்பு போய்விடும் என்றும், 16-வது பாட்டில் ஈசனுப்பு தன்னீராச்சு என்றும், 2-வது காண்டம் 29-வது பாட்டில் ஈசனுப்பு நிலஉப்பைக்கிரகித்து நிற்கும் பூநீர் ஸ்திரீகளுக்காக வளையல் செய்வோன் உப்பை வேறாய்ப்பண்ணுவான் அந்த உப்பு பாழுதாமே என்றும் 44-வது பாட்டில் சிவசுன்னம் நிலஉப்புக்குத்தோற்றும் என்றும், 85-வது பாட்டில் சிவஉப்பை அன்றைக்கே தின்று விட்டதடியா முப்பு என்றும் சொல்லப்பட்டிருக்கிறது அடி என்பது பூநீர்சத்தி. முடி என்பது சிவம்.

பூநீரில் ஏன் வாதம் சித்திக்கவில்லை என்பதற்கு ஆதாரம்

சிவஉப்பில் சத்தைப்பிரித்து

எடுக்காததால் வாதம் சித்திக்கவில்லை

இடி மழை காற்று மூன்றும் கூடியது முப்பு

பூநீரிலேயே இடி மழை காற்றாகிய பிர்மா விஷ்ணு ருத்திரன் என்று மூன்றுவகையுப்பும் கூடி முப்புவாக விளைந்திருந்தும் பூநீரில் ஏன் வாதம் சித்திக்கவில்லையென்றால் பூநீர்விளைவிடம் சிவந்த பூமியாய் சிறந்த இடமாயிருக்கவேண்டும். பூநீர் சிவஉப்புடன் சேர்ந்து பூத்து வெளிவரும்காலமும் தெரியவேண்டும். இன்னும் எடுக்கும் விதமும் காலமும் நேரமும் லக்கினமும் தீட்சை மர்மமும் தெரியவேண்டும்.

அப்படித்தெரிந்து எடுத்தாலும் பூநீரிலிருந்து சிவஉப்பைப் பிரித்தெடுக்கத் தெரியவேண்டும் பிரித்தெடுத்தபின் பஞ்சசுன்னம் கலந்த அமுரிதிராவகத்தில் முதல் தீட்சை செய்து அதாவது உயிராகிய சிவஉப்புக்கு உடலாகிய அமுரியைச் சேர்த்து உயிராகிய சிவஉப்பை நிலைக்கச்செய்யவேண்டும்.

பிரணவநீர் செய்யவும், பிரணவநீரில் சிவஉப்பை தீட்சை செய்யும் விதமும் கவனித்துச்செய்யவேண்டும் சிவஉப்பைப் புதைத்து சமாது தீட்சை செய்தபின் பிர்மஉப்பு ஜெனிக்கும் இதுவே சிவஉப்பின்சத்து. இந்தச்சத்தால் வாதம் சித்திக்கும் அதை ஆதிநூல் பார்த்து சுன்னம் செய்து கொள்ளவேண்டும்

8-வது மாதம் பூமியில் விளையும் கெற்பத்துக்கு
பூநீர் என்று பெயர்

பூநீரில் முப்பொருளிருப்பதால் 8-வது மாதம் விளைவதற்கு பூநீர் என்று லாடர் 101-ல் பெயர்கொடுத்திருக்கிறார் அப்படியானால் ஆனி மாதத்தில் பூமியில் முதலில்கரு உண்டாயிற்று தை 8-வது மாதத்தில் எடுப்பதுதான் பூநீர் என்றாகிறது அகஸ்தியர் ஏமதத்துவம் பஞ்சகாவிய நிகண்டு 800-ல் தைமாதம் இளம் வழுக்கை மருந்துக்காகாதென்று சொல்லியிருக்கிறார்.

பிரணவநீர் செய்ய பூநீர் எடுக்கும் காலம்

அதே அகஸ்தியர் பரிபாஷை 500-ல் தைமாதம் தசமியில் பூநீர் எடுத்தால் சுத்தகெங்கை பிரிக்க உதவும் என்று சொல்லியிருப்பதால் சுத்தகெங்கை என்ற பிரணவநீர் பிரிக்க பஞ்சசுன்னத்தில் சேர்க்க வேண்டிய பூநீரை தை தசமியில் எடுக்க வேண்டுமென்று தெரிகிறது.

மாசி பங்குனி பூர்வபட்சம் பிரதமையன்று

சிவஉப்பு ஜெனித்து வெளிவரும்

9-வது மாதமாகிய மாசியில் சிவஉப்பு 16-முழத்திலிருந்து பூமிமேல் வந்து படர்ந்து பூக்கிறது என்று இதில் ஏற்கனவே சொல்லப்பட்டிருப்பதால் சிவஉப்பை எடுக்கும் விதம் லக்கினம் அடையாளம் இவைகளை பின் விரிவாய் எழுதப்படும்.

பூநீரிலிருந்து சிவ உப்பை

பிரித்தெடுக்கும் விதம்.

பூநீரிலிருந்து சிவஉப்பை பிரித்தெடுக்கும் விதம் சுந்தரானந்தர் 110-லிருக்கிறது இன்னும் சத்தியுப்பை வேறாயும் சிவஉப்பை வேறாயும் பூமியிலிருந்தே தனித்தனியாக பிறித்தெடுக்கும் விதம் அகஸ்தியர் பரிபாஷை 500-ல் பரிபாரஷையாகச் சொல்லியிருக்கிறார்.

சத்தியாகிய பூநீர் இது நாதம்
சிவமாகிய அக்கினியுப்பென்ற விந்தை
உண்டு வளையலுப்பை பெற்றாள்.

அதாவது சிவவிந்தை பூநீராகிய சத்தியுண்டு வளையலுப்பைப் பெற்றாள் நீலி என்று அகஸ்தியர் பரிபாஷை 500-ல் 2-வது காண்டம் 85-வது பாட்டில் சொல்லப்பட்டிருப்பதால் பூநீரே சத்தி என்று தெரிந்துகொண்டோம்.

பூநீரினால் வளையல் செய்கிறார்கள்.

என்பதற்கு ஆதாரம்

அகஸ்தியர் பரிபாஷை 500-ல் 2-வது காண்டம் 15-வது பாட்டில் ஊசரத்துக்கடுத்திருந்த உப்பே ஈசன் ஈசனுப்புக்கு மேலிருந்த மண்ணே சத்தி தாசியர்கட்கு இந்த மண்ணன்றோ வளையலாச்சு சத்தியை விட்டால் ஈசனுப்பு தானே போச்சு என்று சொல்லப்பட்டிருப்பதால் அதை ஆராய்வோம். பூநீரினால் வளையல் செய்வதற்கு பூநீரை மண்பாண்டத்திலிட்டு காய்ச்சும்போது வளையலுப்பு பிரியும் விதமும் அதிலுள்ள ஈசனுப்பாகிய நஞ்சு பிரிந்துவரும் விதமும் அடியில் காண்க. இந்தப்பாட்டிலிருந்து பூநிரில் ஈசனுப்பு இருக்கிறது என்பது உறுதியாகிறது.

பூநீரை வளையல் செய்வோர்கள் மண் பாண்டத்திலிட்டு காளவாய்கட்டி எரிப்பார்கள் அதில் மேலே படர்ந்திருப்பது வளையலுப்பு அந்த வளையலுப்பை எடுத்துக்கொண்டு வளையல் கட்டிகளை அடுக்கி வைத்திருப்பார்கள். அந்த கட்டிகளில் மழை காலங்களில் வடிவது வளையல் கொழுப்பு. இதுவே வளையல் நஞ்சு, இதுவே இடியுப்பு, ஈசனுப்பு, பிர்மகற்பம் என்று முன் கண்டுபிடித்து எழுதியிருக்கிறோம். இந்த இடத்தில் பெண் யாரென்று கண்டுபிடிக்க வேண்டிய இடமானதால்

சிவம் என்பது வளையல் நஞ்சு என்றும்,
சத்தி என்பது பூநீரி என்றும்,
தெரிந்துகொண்டோம்.

இது இரண்டும் பூமியில் சேர்ந்து பிறந்த பிள்ளைக்கு வளையலுப்பு என்றும் இதில் முதல் பாராவிலும் எடுத்துக்காட்டி விட்டேன் ஆகையால் பூநீர் என்பது சத்தி என்றும் அது மண்ணென்றும் அந்த மண்ணினால் வளையல் செய்தார்கள் என்றும் அந்த மண்ணே வண்ணான் வெளுக்க உபயோகித்தான் என்றும் அந்த மண்ணாகிய சத்தி ஆணாகிய சிவஉப்பைக்கூடி வளையலுப்பைப் பெற்றாள் என்று 2-வது காண்டம் 85-வது பாட்டில் சொல்லப்பட்டிருப்பதால் பூநீரே சத்தி என்றும் பெண்ணென்றும் நன்றாய்த்தெரிகிறது.

ஆகையால் இந்தப்பெண்ணாகிய பூநீரின் ஆணாகிய சிவஉப்பின் பிறப்புவளர்ப்பினைத் தெரிந்துகொண்டோம் இனி எடுக்கும் விதம் தெரியவேண்டும்.

பிர்மகற்பம் என்பது பொல்லாத பொருள்
இதை யாருக்கும் சொல்லக்கூடாது
வெளியிடாதே என்பதற்கு ஆதாரம்

அகஸ்தியர் பரிபாஷை 500-ல் 5-வது காண்டம் 32-வது பாட்டு

சொல்லாத பொருளைய்யா பிரமகற்பம்
சொல்லாமல் மறைத்தார்கள் சித்தர்தாமும்
கொல்லாமல் கொல்லுமையா வெளிவிடாதே
கோதையர்க ளாசையிலே சிக்கிடாதே
பொல்லாத பொருளது கைக்கொண்டாயானாற்
புகலறிய பிரமலபி தவறிப்போகும்
வெல்லாமல் வெல்லுமந்த தீட்சைகண்டால்
வெகுகோடி வித்தையெல்லா மாடலாமே.

கெவுனமணி 100-ல்
சத்தி சிவஉப்பை வெளியிட்டால் அண்டஇடி விழுந்து தலை
தெரித்துப்போகும் என்று திருவள்ளுவர் கெவுனமணி 100-ல்
சொல்லப்பட்டிருக்கிறது.

பிரபு! மன்னிக்கவும் பிர்ம ரகசியமடங்கிய அகஸ்தியர் பரிபாஷை 500-ல் மறைத்துப்பாடிய பிர்மகற்பமாகிய மகாமகத்துவம் பொருந்திய சிவஉப்பை வெளியிடக்கூடாது என்று சொல்லியிருந்தும் உலகோர்க்கு எடுத்துக்காட்டிவிட்டேன்

இந்த உப்பைத்தான் 18-சித்தர்களும் ஒளித்தது
சதாசிவ உப்பைக் கண்டால் சத்தியுப்பு சொன்னபடிதானே
கேட்கும் என்று ரோமரிஷி சொல்கிறார்.
மற்றோர் சித்தர் சத்தியுப்பைக்கண்டால் சிவஉப்பு
சொன்னபடி தானே கேட்கும் என்று சொல்லியிருக்கிறார்.
பூகிமுனியும் சத்தியின் தீட்சையால் சிவஉப்பு கட்டும்
என்று சொல்கிறார். அதற்கு ஆதாரம்

அஞ்சு பஞ்சபூதம தாகிய வுப்பது
மிஞ்சு தீய்க்கி வெறுங்குகை யாய்விடு
துஞ்சு மாஞ்சிவம் சத்தியின் தீக்ஷையால்
துஞ்சிடா தது தோஷமு மில்லையே.

உரை

பிரணவநீரில் சிவஉப்பு கட்டும்

என்பதற்கு ஆதாரம்

5-பஞ்ச பூதமான உப்பு என்பது நஞ்சு, அதிக தீய்க்கு ஓடிவிடும் ஓடாமல் நிறுத்த வேண்டுமானால் சத்தியின் தீட்சையால் அதாவது 2-சத்தியாகிய பூநீர் பாறையுப்பு செயநீரால் அதாவது பிரணவநீரால், துஞ்சும் என்கிறார் துஞ்சும் என்பதற்கு விரிவுரை துஞ்சுதல்-தூங்குதல், தொழிலின்றிஇருத்தல், சோம்புதல், சோர்தல், இறத்தல், வலியழிதல், குறைதல், தங்குதல், நிலைபெறுதல், தொங்குதல் (அகராதி)

துஞ்சுதல் சோர்ந்து நித்திரை செய்தால் அதாவது ஓடாமல் படுத்துக் கொள்ளுதல். சிவஉப்பின் பலம் குறைந்து ஓடமுடியாமல் தங்கி நிலை பெற்றிருத்தல், அதாவது சத்தியைவிட்டு ஓடாமல் காமக்களையால் மயங்கி கட்டுண்டு அவளுடன் தொங்கிக்கொண்டிருத்தல் எனவரும். துஞ்சுதல்– அதாவது இறந்துபோதல், துஞ்சிடாதது– இறந்தும் போகாதது என்று உரை வருவதால் கட்டும் என்பதைக்குறிக்கிறது, ஆனால் இறந்துபோகாத நிலைமையையடைதலாலும் தோஷமுமில்லையாம். அதாவது சத்தியின் சேர்க்கையால் ஓடாமல் தீய்க்கு அசையாமல் கட்டுப்பட்டிருத்தலேயாம். இதனால் சத்தியைக்கண்டால் சிவஉப்பு சொன்னபடிதானே கேட்கும் என்று ஒரு சித்தர் சொன்னதற்கும் சரியான உரை வந்துவிட்டது ஆனால் பஞ்சசுன்னம் கலந்த அமுரிதிராவகத்தில் சிவஉப்பை 10-தீட்சை செய்தபின்பு பிரணவநீரில் புதைத்து தீட்சை செய்ய வேண்டும்.

பிரவநீரில் கட்டுப்பட்ட சிவஉப்பால் வெடியுப்பும் கட்டும்.

என்று நாம் கண்டுபிடித்து எழுதியிருக்கிறோம்.

அடியில் கண்ட பாட்டில் சந்திரனுப்பாகிய சிவஉப்பால் வெடியுப்புக்கட்டும் என்று மட்டும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஓது பூரணச் சந்திர னுப்பினால்
வாது சூரிய னுப்பு வசப்படும்
போது வானத் தெழுந்திடும் பூவினால்
சூத மாமணி யாடித் துலங்குமே.

நஞ்சுக்கு முதல் வழலை என்று பெயர்

இது நாதமென்ற வெடியுப்பு

ஓது பூரணச்சந்திரனுப்பு என்பது நஞ்சு. இதற்கு முதல் வழலை என்றும் 1-வது பிர்மகற்பமென்றும் நிலஉப்பென்றும் ஈசனுப்பு என்றும் முடி என்றும் மதியுப்பென்றும் பெயர் என்று அகஸ்தியர் பரிபாஷை 500-ல் 2-வது காண்டம் 17-வது பாட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. மதியுப்பு என்று சொன்ன அகஸ்தியரே இந்தசிவஉப்பு சூரியன்கனலினால் பிறந்ததென்றும் அதற்கு சூரியனுப்பு என்றும் பரிபாஷை 1, 15-வது பாட்டில் சொல்லியிருக்கிறார். லாடர் 101-ல் ஆகாயவிந்தென்ற அக்கினியாகிய இடியால் பிறந்தது சிவஉப்பு என்று சொல்லியிருக்கிறார். ஆகையால் இதற்கு ஆகாய உப்பென்றும் இடியுப்பென்றும் ஈசனுப்பென்றும் பெயர்.

வாணமருந்துக்கு உபயோகிக்கும்

வெடியுப்புக்கு 7-வது வழலை என்றும் 7-வது பிர்மகற்பம் என்றும் பெயர்

இது விந்துவென்ற வெடியுப்பு

வாணமருந்து, துப்பாக்கி மருந்து, மத்தாப்பு முதலியவைகள் செய்யஉபயோகிக்கும் வெடியுப்புக்கு 7-வது வழலை என்றும் சூரியனுப்பு என்றும் அகஸ்தியர் பரிபாஷை 500-ல் 2-வது காண்டம் 18-வது பாட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் இந்த இடத்தில் சூரியனுப்பு என்பது வெடியுப்பைக் குறிக்கும். வாது சூரியனுப்பு என்பதால் வலியச் சண்டைக்குப் போகும் உப்பு அதாவது துப்பாக்கிக்கு உபயோகிக்கும் மருந்தைச்செய்ய மூலகாரணமான உப்பு என்பதைக் குறிக்கிறது.

இது 7-வது வழலை ஆகும்போது இதை 7-வது பிர்மகற்பமென்றும் 7-வது அண்டமென்றும் சொல்லலாம். இதில் மண்ணான அக்கினி அடங்கியிருக்கிறது.

நஞ்சுக்கும், வெடியுப்புக்கும் மதியுப்பு என்று பெயர்

இந்த வெடியுப்புக்கும் மதியுப்பு என்று போகர் 7000-ம் 2-வது காண்டம் 85-வது பாட்டில் சொல்லியிருக்கிறார் 1-வது வழலையாகிய நஞ்சுக்கு சூரியனுப்பு என்றும், மதியுப்பென்றும் அகஸ்தியர் சொல்கிறார் 7-வது வழலையாகிய வெடியுப்புக்கு அகஸ்தியர் சூரியனுப்பு என்று சொல்லியிருக்கிறார். போகரோ இந்த வெடியுப்புக்கு மதியுப்பென்று சொல்கிறார் இப்படி 2-சித்தர்கள் சொல்லியிருப்பதற்கு ஆதாரம்.

அகஸ்தியர் பரிபாஷை 500-ல் 2-வது காண்டம் 17-வது பாட்டில் பேசாத பூ வழலை பிற்மகற்பம் பின்னுமொன்றுமில்லை நிலஉப்பே ஈசன் என்றும், முதல் வழலை என்றும் (இது நஞ்சு) 18-வது பாட்டில் பொட்டலுப்பென்ற வெடியுப்பு கடைசி வழலை என்றும் கம்பியுப்பென்றும் சிவமென்றும் ஈசனென்றும் 20 - வது பாட்டில் நிலஉப்பு வெடியுப்புக்கு பாஷை என்ன ஒனறல்லால் இரண்டுமுண்டோ என்றும் சொல்லியிருப்பதால் இரண்டுக்கும் ஒரே பெயரிட்டதற்கு ஆதாரம் காட்டிவிட்டேன், ஏற்கனவே ஈசனுப்பு இரண்டு என்ன ஒன்றேயாச்சு என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஓதுதல்-காதில் ரகசியமாயுரைத்தல்

ஓது என்பதற்கு உரை :- ஓது என்பது படி என்றும், தெரிந்துகொள் என்றும் வழங்குதல். ஓது என்பது காதில் உரைக்கும் ரகசியம் எனவாம்.

ஓதுதல் :- ஒருவரும் அறியாதபொருளை காதில் ரகசியமாயுரைத்தல். காதில் ரகசியமாயுரைத்தல் என்பதால் அப்படியுரைப்பதை ஒருவருக்கும் தெரிவிக்கக்கூடாது என்பதைக்குறிக்கிறது.

ஒருவராலும் அறியமுடியாத குருசிஷ்ய பரம்பரையில் உபதேசிக்கத்தக்கது நஞ்சாகிய பிர்மகற்பம் எனல்.

அப்பொருள் அப்படி ரகசியமாயுரைக்கப்பட்ட, மற்ற யாராலும் அறியமுடியாத குரு சிஷ்ய பரம்பரையில் உபதேசிக்கத்தக்கது. அப்பேற்கொற்ற மகிமையுடைய ஒரு வஸ்துவை இதில் ஏற்கனவே நான் உங்களுக்கு தெளிவாய் எடுத்துக்கூறிவிட்டேன்.

பிர்மகற்பத்திற்கு வழங்கக்கூடிய சில முக்கிய பெயர்கள்

ஓது பூரணச்சந்திரனுப்பு என்பது நஞ்சு, இதற்கு பிர்மகற்பம் என்றும், முதல் வழலை என்றும், நிலஉப்பு என்றும், ஈசனுப்பு என்றும், சிவஉப்பு என்றும், இடியுப்பு என்றும், அக்கினியுப்பு என்றும், மதியுப்பு என்றும், ரவியுப்பு என்றும், சமாதியுப்பு என்றும், அண்டமென்றும், விடக்கல் என்றும், அண்டக்கல் என்றும், காந்தமென்ற விஷக்கல் என்றும், காந்தமென்ற உப்பு என்றும் பெயர்.

சிவபெருமானுக்கு சுப்பிரமண்யர் ஓம் என்ற பிரணவத்தை காதில் ரகசியமாக உரைத்தார். ஓம் என்பது பிரணவம், இதுவே ரகசியப்பொருள் என்று சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

அப்படியானால் பூரணச்சந்திரனுப்பு என்பது ஓம் என்ற பிரணவத்திற்குச் சமானமாகிய பிரணவஉப்பு என்பதைக் குறிக்கிறது.

ஓது என்பது பிரணவத்தை வருவிக்கிறது பூரணச்சந்திரனுப்பு என்பது சந்திரனுடைய 16-கலையும் அடங்கிய உப்பு என்பதைக் குறிக்கிறது. இந்த உப்பானது உலகோர் அறியாதபடி 18-சித்தர்களும் மறைத்து மாறுபாடான பெயர்களைக்கொடுத்துப் பாடிவிட்டார்கள்.

காதில் ரகசியமாக உரைப்பதும் மற்ற யாராலும் அறியமுடியாததும் குருசிஷ்ய பரம்பரையில் உபதேசிக்கத்தக்கதுமானது பிர்மகற்பம் என்ற நஞ்சு என அறியவும்.

பூரணச்சந்திரனுப்பு

பூரணச்சந்திரனுப்பாகிய ஈசனுப்பு என்ற இடியுப்பு வளையலில் வடிந்த நஞ்சு என்று தெரிந்து கொண்டோம். வளையலில் வடிந்த வளையல் நஞ்சானது தீயில்வெந்ததால் காரம் கெட்டுப்போயிற்று என்று முன் எழுதியிருக்கிறோம் ஆகையால் பூமியிலிருந்து எடுக்கும் விடக்கல்லைத்தான் ஓது பூரணச்சந்திரனுப்பாக உபயோகிக்க வேண்டும்.

வளையல் நஞ்சை முப்புவாக

முடிக்கச் சட்டம்

இந்த விடக்கல்லை பூமியிலிருந்து எடுக்கத் தெரியாதவர்கள் எடுக்க முடியாதவர்கள் கைக்கு அகப்படாதவர்கள் இந்த வளையல் நஞ்சையாவது வளையல்காரர்களிடம் வாங்கி முப்புவாக முடித்தால் சரக்குகள் கட்டும் வேதையாகும் வாதம் விழலாகாது என்று போகர் 7000-ம் 2-ம் காண்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

வளையல் நஞ்சை முப்புவாக முடிக்கும் விதம் போகர் 7000-த்தில் சொல்லப்படவில்லை அகஸ்தியர் 8000-த்தில் வளையல் நஞ்சை குரு முடிக்கும் விதமும் அதனால் வேதையும் சொல்லப்பட்டிருக்கிறது.

பிர்மகற்பம் என்பது விடக்கல் இதை தொட்டால் கொன்றுவிடும்

இதற்கு அகஸ்தியர் பரிபாஷையில் 320 பெயர் எழுதியிருக்கிறார். அவைகளை பின் விரிவாய் எழுதப்படும். இதைத்தொட்டால் கொன்றுபோடும் என்று போகர் 7000-ம் 4-வது காண்டம் 38-வது பாட்டில் சொல்லப்பட்டிருக்கிறது அப்படியானால் கை தொடாதெடுக்கவேண்டும் என்று தெரிகிறது. இதில் ஜலமான அக்கினி அடங்கியிருக்கிறது.

விரிவுரை

ஓது பூரணச்சந்திரனுப்பு என்பது :- (வளையலிலிருந்து நஞ்சாக வடிந்தது) தீயிலேவெந்து தீயாத அதாவது வேகாததுமான பூமியிலிருந்து எடுத்த நஞ்சு. இந்த நஞ்சால் வாது சூரியனுப்பு வசப்படும். அதாவது சூரியனுப்பாகிய பொட்டலுப்பு என்ற வெடியுப்புக்கட்டும் என்கிறார்.

வாணத்தெழுந்திடும் பூவினால் அதாவது கட்டுப்படுமுன் வெடியுப்பானது ஆகாயத்தில் பூ மாதிரி எழும்பி ஓடக்கூடியது. ஆகாயத்தில் எழுந்து ஓடி பூவாக உதிரும் குணத்தையுடைய வாண மருந்துக்கு உபயோகிக்கும் வெடியுப்பால் சூதம் கட்டும் அதாவது பிரணவநீரால் கட்டுப்பட்ட நஞ்சால் வெடியுப்புக்கட்டும். அப்படிக்கட்டுப்பட்ட வெடியுப்பால் சூதம்கட்டும். உருக்கினால் உருகும், மணியாகும், அம்மணி பிரகாசத்தோடு ஜொலிக்கும் என உரை விளங்குகிறது.

கருத்துரை

இப்படி சத்தியின் தீக்ஷையால் கட்டுப்பட்ட நஞ்சால் அதாவது சிவஉப்பால் வெடியுப்புக்கட்டி சுன்னமாகும் அதால் சூதம் கட்டிச்சுன்னமாகும் செம்பிலிட மாத்து பத்தாகும் காயசித்தியாகும் என்ற உரை பொதிந்துள்ளது

ஆனால் மேற்படி நஞ்சு என்பது உயிர் என்று அகஸ்தியர் பரிபாஷை 1-வது காண்டம் 14-வது பாட்டில் சொல்வதை கவனியுங்கள். உயிரிருக்குமிடந்தானே பிர்மகற்பம், உடலிருக்குமிடந்தானே பிண்டவித்து என்றம் சொல்லப்பட்டிருப்பதால் பிண்டவித்து என்பது என்ன! மனித அமுரி என்று பரிபாஷை 1-18-வது பாட்டில் சொல்லி அதே பாட்டில் பிர்மகற்ப கற்சுண்ணாம்புக்கு உயர்ந்த சிவ தீட்சை இந்த செயநீராமே. அதாவது அமுரி என்றும் 19-வது பாட்டில் பிர்மகற்பத்தில் அமுரி சேர்த்தால் குருவாச்சு சிவனுமாச்சு என்றும் சொல்லியிருப்பதால் உயிராகிய பிர்மகற்பத்திற்கு உடலாகிய மனிதஅமுரி சேர்க்கவேண்டும். உடல் சேர்க்காவிடில் உயிர் நிலைக்காது என்றிருப்பதால் அமுரியைச் சேர்க்கவேண்டும் என்று தெரிகிறது எப்படிச்சேர்ப்பது? அமுரியிலுள்ள எண்ணையை நீக்கிச் சேர்க்கவேண்டும், எப்படி எண்ணையை நீக்குவது? அமுரியிலுள்ள எண்ணையை நீக்க திராவகம் இறக்கவேண்டும் எண்ணையை நீக்க கடுங்கார அமுரிதிராவகம் இறக்கும் விதமும் அதில் சுண்ணாம்புக் காரமேற்ற பஞ்சசுன்னம் கலக்கும் விதமும் அதில் நஞ்சாகிய பிர்மகற்பத்தை தீட்சைசெய்யும் விதமும் அடியில் எழுதப்பட்டிருக்கிறது.

பொட்டலுப்பு என்ற வெடியுப்பு 7-து வழலையாகும்போது அவ்வெடியுப்பு என்பதும் உயிராக இருக்கிறது. இவை இரண்டும் உயிராயிருப்பதால் 2-க்கு உடல் சேர்க்க வேண்டும். உடல் சேர்க்காவிடில் இந்த உயிர் நிலைக்காது உடல் என்பது மனித அமுரி என்று ஏற்கனவே எடுத்துக்காட்டியிருக்கிறோம். இதற்குவேண்டிய கடுங்கார அமுரிதிராவகம் இறக்கும் விடம் அடியில் காண்க.

கடுங்கார அமுரிதிராவகமிறக்கும் விதம்

8-படி மனித அமுரியில் ஒரு படி மனிதர் மலமும் 1-படி மண்இல்லாத நயம் பூநீரும், கால்படி கல்ச்சுண்ணாம்புமிட்டு குச்சியால் காலை மாலை கலக்கி இப்படி 3-நாளும் கலக்கி வைத்திருந்து 4-ம் நாள் தெளிவை இறுத்து வாலைபிட்டு திராவகமிறக்க வேண்டும் இந்த திராவகமானது சகல சரக்குகளிலுமுள்ள எண்ணையை நீக்கும் வல்லமையுடையது. இதினால் சகல சரக்குகளையும் கட்டி சுன்னம் செய்யலாம் விளையவானுக்கு இவ்வளவு எழுதினதேபோதும். இது நாம் கண்டுபிடித்துச் செய்தது.

நஞ்சு வெடியுப்புச்சுன்னம் செய்யும் விதம்

இந்த கடுங்கார அமுரிதிராவகம் ஒரு படியில் அகஸ்தியர் பரிபாஷை 500-லுள்ள பஞ்சசுன்னம் 5.ரூ. எடை கலந்து நஞ்சு பூநீர் பாறைஉப்பு வெடியுப்பு 4-ம் தனித்தனியாக 10-தீட்சை செய்து பின் தனித்தனியாக சிப்பி திராவகத்தில் 10-தீட்சை செய்து பின் தனித்தனியாக வெண்கருவிலரைத்து ஒரே வில்லைகளாகத்தட்டி உலர்த்தி ஒரு சட்டியில் சிப்பிச்சுண்ணாம்பிட்டு மேலே 1-வில்லை வைத்து மேலேயும் சுண்ணாம்பிட்டு அமுத்தி

மூடி 3-சீலை மண்செய்து மழைவிழாத இடத்தில் ஒருகெஜ ஆழத்தில் புதைத்து 49-ம் நாள் எடுத்து பிரணவநீர்செய்து பிரணவநீரில் நஞ்சு வெடியுப்பை தனித்தனியாகக் கரைத்து ரவியிலுலர்த்தி ஒருபாடஞ்செய்து ரவிவிந்தாகிய பொட்டலுப்பு என்ற வெடியுப்பு மூன்று பங்கும் மதிவிந்தாகிய நஞ்சும் இரண்டு பங்கும்கூட்டி வெண்கருவிலாட்டி உலர்த்தி பஞ்சசுன்னக் குகையிலிட்டு பஞ்சசுன்ன வில்லையால் மூடி 3-சுண்ணாம்புச் சீலைசெய்து புடமிட நஞ்சும் வெடியுப்பும் ஓடாமல் எடை குறையாமல் கட்டிச் சுன்னமாகும். இந்த நஞ்சு வெடியுப்புச் சுன்னத்தால் சூதம் கட்டிச்சுன்னமாகும். மேல்கண்ட பாட்டில் மேல்கண்ட தீட்சை பாகம் சொல்லாமல் மறைக்கப்பட்டிருக்கிறது. அதில் அநேக ரகசியங்களிருக்கிறது அவைகளைப்பின் எழுதப்படும்.

ரவிவிந்து 3-பங்கும் மதிவிந்து 2-பங்கும் கூட்டும்படி அகஸ்தியர் பரிபாஷை 2-வது காண்டம் 18, 19-வது பாட்டுகளில் சொல்லப்பட்டிருக்கிறது.

பஞ்ச சுன்னக்குகை

செய்யும் விதம்

அகஸ்தியர் பரிபாஷை 500-லுள்ள பஞ்சசுன்னம் வகைக்கு ஒரு ரூ. எடை கூட்டி ஜலம் விடாமல் வெண்கருவிலரைத்து குகையும் மூடியும் செய்து ரவியிலுலர்த்திக் கொள்ளவும்.

நஞ்சுக்கு 2-வகை பாடம்

தேவையில்லாத இடம்

நஞ்சுச்சுன்னம் சிப்பியில் வைத்து செயநீர் இதறக்குவதற்கானதால் நஞ்சை சிப்பி திராவகத்தில் 10-தீட்சை செய்யும் விதமும் ஒரு தரம் பிரணவநீரில் கரைத்து ரவியில் உலர்த்தி பாடம்செய்யும் விதமும் அதற்கு தேவையில்லை என்று எழுதவில்லை.

தீயில் வெந்து வடிந்த வளையல் நஞ்சையும்
இப்படி தீட்சை செய்தால் வெடியுப்புக்கட்டும்.

ஓது பூரணச்சந்திரனுப்பு என்பது இடியுப்பாகிய நஞ்சு

இது பூநீருக்கு அடியில் 16-முழத்துக்குங் கீழ் அண்டம்போல் உருக்கொண்டு கிழங்கு மாதிரி இடியினால் விளைந்து சுக்கான் கல்லுக்குங்கீழிருக்கிறது. இதைஎடுக்கும் விதமும் பூமிமேல் வருங்காலமும் பின் விரிவாய் எழுதப்படும்.

அரசர் வெல்லும் வெடியுப்பு

போகர் 7000-ம் 2-வது காண்டம் 851-வது பாட்டு

போச்சென்று விடுகாதே புண்ணியாகேள்
போக்கான வெடியுப்பு வதிதமெத்த

நீச்சென்ற பேரண்டந் தன்னால்த்தானும்
நிலையாக மதியுப்புக் கட்டலாச்சு
மாச்சலென்ற வுப்பாலே சகலசித்தும்
மாற்கமுட னாடலாங் கோடிவித்தை
பாச்சலுடன் துரைத்தனத்தார்க் கேற்றவுப்பு
பாருலகில் ராஜர்வெல்லும் உப்புமாச்சே

முடிசூட்டும் வெடியுப்பு

ஒரு ராஜனுக்கு கிரீடம் தரிக்கச் செய்வதற்கும், ஒரு அரசனை பட்டமிழக்கச் செய்வதற்கும் மூல காரணமானது

பொட்டலுப்பு என்ற வெடியுப்பு

ஒரு அரசனின் கோட்டை கொத்தளங்களை எல்லாம் அதம் செய்து அழித்து மற்றோர் அரசனை முடிசூட்டும் வல்லமை பொருந்தியது 7-வது வழலையாகிய வெடியுப்பு என்று இப்பாட்டினால் தெரிகிறது.

ஈசன் தொழில்

ஆக்கவும் அழிக்கவும் உள்ள வல்லமை கடவுளுக்கே உரியது இரண்டு ராஜாக்களிடமும் இந்த வெடியுப்பால் செய்த மருந்துகள் இருந்தும் ஒரு அரசனைத்தோற்கடித்து ஒரு அரசனுக்கு முடிசூட்டுவதால் கடவுள் அம்சம் பொருந்தியது இந்த வெடியுப்பு என்பதைக் குறிக்கிறது.

வெடியுப்பே சிவம் என்பதற்கு ஆதாரம்

அகஸ்தியர் பரிபாஷை 500-ல் 2-வது காண்டம் 18-வது பாட்டில் வெடியுப்பு தீயைக்கண்டால் தீப்பிடித்து வெந்து ஓடும். ஓடினாலும் சிவமென்று உரைப்பாரைய்யா ஈசனுக்கு மரணமுண்டோ வென்றும், 21-வது பாட்டில் வெடியுப்பே சிவனுமாகும் சிலநாளில் சித்தி என்று செப்பலாகுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

அகஸ்தியர் திராவகம் 800-ல் நாலாங்காய்ச்சல் வெடியுப்பைக் கட்டியிருக்கும் முறை 596-வது பாட்டில் தேசியல்லோ இந்த உப்பு என்கிறார். தேசி என்பது சிவம்.

அகஸ்தியர் பரிபாஷை 500-லுள்ள வெடியுப்புக் கட்டு

அதை பரிபாஷை 4-வது காண்டம் 13, 14, 15-வது பாட்டுப்படி முட்டையை இடித்து ஜெயநீராக்கி அதில் பொட்டலுப்பாகிய வெடியுப்பைக்கரைத்து ஒருச்சாமம் தீ எரிக்கக் கட்டிப்போகும் சிவந்து காணும் இந்த வெடியுப்பே சிவஉப்பாகும் என்று சொல்லப்பட்டிருக்கிறது இதனால் கடவுள் அம்சம் பொருந்தியது என்று நன்றாய்த்தெரிகிறது கடவுள் அம்சம் பொருந்தியதானால் வாதம் சித்திக்கவேண்டும்! ரோமரிஷியும் வெடியுப்புக்கு வழலை என்றும் சவுக்காரம் என்றும் பெயர் சொல்லியிருக்கிறார்.

7-வது வழலையாகிய வெடியுப்பே சிவமானால்
ஏன் வாதம் சிதத்திக்கக்கூடாது

பொட்டலுப்பென்ற வெடியுப்பால் வாதம் சித்திக்கும் என்பதற்குச் சட்டம்

வழலை விட்டால் வாதம் இல்லை என்று போகர் நிகண்டு 1200 லுள்ள 15 - வது பாட்டில் சொல்லப்பட்டிருப்பதால் பொட்டலுப்பு என்ற வெடியுப்பும் 7 - வது வழலை என்று அகஸ்தியர் பரிபாஷை 2-18-வது ப்ாட்டில் சொல்லப்பட்டிருப்பதாலும் சிவஉப்பு என்று தெரிவதாலும்பொட்டலுப்பு என்ற வெடியுப்பிலும் வாதம் சித்திக்கும் என்று தெரிகிறது. ஆகையால் வெடியுப்புக் கட்டுவதை 18-சித்தர்களும் சொல்லவில்லையாம்.

1-வது வழலை விடக்கல் கிடைப்பது

அரிதாயிருப்பதால் அதற்கு ஒரு யோசனை

1-வது வழலையாகிய நரதமென்ற வெடியுப்பாகிய விடக்கல் கிடைப்பது அரிதாயிருப்பதால் 7-வது வழலையாகிய விந்துவென்ற வெடியுப்பாகிய துப்பாக்கி மருந்து செய்யும் வெடியுப்பைக் கட்டினாலும் சித்திக்கும் என்றும் எடுத்துக்காட்டிவிட்டேன்.

எப்படி இடியுண்டாகிறது மின்னல் உண்டாகிறது

என்பதைக் காட்டும் கருவி

இடி மின்னல் உண்டாகும் காரணத்தைக்காட்டும் கருவியாகிய இறப்ஸ்றய்ண்ஸ்ரீ ஆஹற்றங்ழ்ஹ என்னும் ஒரு வித கருவியால் இடியும் மின்னலையும் உண்டுபண்ணிக்காட்டி பாடம் பள்ளிக்கூடங்களில் சொல்லிக்கொடுக்கப்படுகிறது.

வெடியுப்பு சிவமென்றும் 7-வது வழலையென்றும்
தெரிந்துகொண்டோம், ஆனால்

பொட்டலுப்பு என்ற வெடியுப்பு குருவுக்கு எடுத்ததாவென ஆராய்வோம்

கொங்கணவர் 3000-ம் 1-வது காண்டம் 78, 79, 80, 81-வது
பாட்டுகளை கவனியுங்கள்

வளப்பமெல்லாம் உப்பாலேயாகும் மைந்தா
வரிசையாய்ச் சொல்லுகிறேன் உப்பின் மார்க்கம்
தளப்பமென்று மெண்ணாதே புற்றுக்கேளு
தனித்த முதற் குருலவணம் வழலையப்பா
வளப்பமென்ற பாறையுப்பு ரெண்டாம்பக்ஷம்
இதின்பிறகு வெடியுப்பா மறிந்துகொள்ளு

இளப்பமல்ல அமுரியுப்பும் இதை விட்டாக்கால்
இசைந்த மற்ற ல்வணமெல்லா மிழுக்குத்தானே.

வழலையாகிய நஞ்சுக்கும் பாறையுப்புக்கும் வெடியுப்புக்கும் அமுரி சேர்க்கா விடில் பலமிழந்து போமெனல்.

அமுரியின் ரகசியம்.

25-வகை உப்புக்களுக்கும் அமுரி சேர்க்காவிடில் கேவலத்திற்காகும் என்று கொங்கணவர் சொல்கிறார்.

இதிலிருந்து நாம் தெரிந்துகொள்வத என்னவென்றால் முதற்குருவாகிய வழலைக்கும் அதாவது நஞ்சுக்கும் 2-வது குருவாகிய பாறையுப்புக்கும் 3-வது குருவாகிய வெடியுப்புக்கும் அமுரிசேர்க்க வேண்டும். அமுரியினால் இந்த 3-உப்பும் வலுவாகும் இந்த மூன்று உப்புக்கும் அமுரி சேர்க்காவிடில் அவ் உப்புகள் ஒன்றுக்கும் உதவாது கேவலத்துக்காகும் ஒரு தொழிலும் செய்யாவெனல்,

வழலைச்சுன்னம் 25-வகை உப்புக்களைக் கட்டும் சகல புகைச்சரக்குகளையும் புகையடக்கிக்கட்டி சத்துவாக்கும் வெண்மையாய் நீற்றும்.

இழுக்கான உப்பையெல்லாம் வலுவேயாக்கு
எடுத்திடப்பா முந்திமுந்தி வழலைச்சுன்னம்
அழுக்கான சரக்கையெல்லாஞ் சலவையாக்கும்
அடங்காத புகையடக்கிச் சத்துப்பண்ணும்
பழுக்காத சரக்கையெல்லாம் பழுக்கப்பண்ணும்
படுமுன்னே தாதுவெல்லாம் படுந்தீ பற்றும்
கொழுக்காதே யிதைக்கண்டு கொர்ச்சிக்காதே
கொள்ளாதே கர்மநோய் குடிலமாமே

உரை

அமுரி 25-வகை உப்புக்களையும் வலுவாக்கும் ஆளால் முதலில் வழலைச்சுன்னம் செய்துகொள். அழுக்கடைந்த சரக்குகளையெல்லாம் சலவையாக்கும் அதாவது வெண்மை நிறமாய் மாற்றும் புகைந்தோடும் சரக்குகளைக்கட்டி சத்தாக்கும். பழுக்காத சரக்கையெல்லாம் பழுக்கவைக்கும். தாதுவாகிய 61-பாஷாணங்களும் வழலைத்தீயால் வேகும். இதைக்கண்டு கொழுத்துப்போய் கர்ச்சிக்காதே என்கிறார்.

பாறையுப்பால் சூதம் கட்டும் வெடியுப்பு சரக்கையெல்லாம் கட்டும்

என்பதற்கு ஆதாரம்

குடிலமா மகாரமென்ற மூன்றுக்கேதான்
குறிப்பாக வறிந்துகொள்ளு வழலைராஜன்

குடிலமப்பா பாறையுப்பைச் சூதத்திற்கு
குமுறிடவே கட்டியது மணிபோலாடும்
குடிலமப்பா வெடியுப்பு சரக்கையெல்லாங் கொல்லும்
கூறரிது யிதின்பெருமை கூறினேன்யான்
குடிலமப்பா லவணமென்ற கூற்றதெல்லாங்
குறிப்பறிந்து கொள்ளுதற்குக் கூறினேனே

கூறினேனுப்பினது பெருமையெல்லாங்
குவிந்தடியேன் பார்த்ததின் பின் னறிந்தமட்டு
மாறினேனென்னாலே முடியாதென்று
மறிந்துணர்ந்த பெரியோரரே யறிந்து பாருந்
தேறினேனுப்பை முதற்றொட்டே யாடி
செகசாலங் கடந்தபின்பு சித்திகூடி
மாறினேன் குளிகையிட்டு வீதியோடி

மகத்தான பெரியோரை வணங்கினேனே.

என்று கொங்கணர் 3000-ம் 1-81-வது பாட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. அமுரியில் ரகசியமிருபபதால் அமுரியுப்பு செய்யும் விதம் தெரிய வேண்டும்.

சுப்பிரமணியர் ஞானம் 500-ல் அமுரியுப்பு செய்யும் விதம்.

2-வது குருவாகிய பாறையுப்பில் சூதம் கட்டுவதாக தெரிந்துகொண்டோம். 1-வது குருவாகிய வழலையால் சூதம் கட்டுமா என்பதற்கு ஆதாரம் ஆராய்வோம்.

அண்டவன்னியினால் ரசம் கட்டும்

அண்டவன்னி என்பது இடியுப்பு.

அண்ட வன்னியி னால்ரசம் சிக்கிடும்
கண்ட போதினில் கற்பம தாகிடும்
உண்ட போதினிற் காய முறுதியாம்
பண்டை யீசன் பகர்ந்த முறையிதே.

உரை

அண்டவன்னி என்பதில் அண்டம் என்பது ஆகாயம், வன்னி என்பது அக்கினி. அப்படியானால் ஆகாய அக்கினி என்றாகிறது ஆகாய அக்கினி என்பது ஆகாயத்திலிருந்து வந்த அக்கினியாகிய இடியால் பூமியில் விளைந்த உப்புக்கு ஆகாயஉப்பென்றும் முதல் வழலை என்றும் பெயர். இதுவே நஞ்சு, நஞ்சுச்சுன்னத்தாலும் ரசம் கட்டும் கற்பத்திற்காகும் காயம்பலக்கும் உடல் அழியாது ஈசன் சொன்னமுறை இது என்கிறார்.

தன்னை அறிந்தவர்கட்கு யோகமும் சூதமும் சித்தி எனல்

வன்னி யுண்டு ரசஞ்செய மாகினால்
மன்னி யோர்பொருள் பேசவும் வேண்டுமோ
தன்னை யேயுணர்ந் தார்தமக் கல்லவோ
சொன்ன யோகமுஞ் சூதமுஞ் சித்தியே.

உரை

வன்னியுண்டு ரசஞ்செயமாகினால் :- வன்னி என்பது அக்கினி அக்கினியையுண்டு ரசம்ஜெயமானால், மன்னியோர் பொருள் பேசவும் வேண்டுமோ! வேறு ஒரு பொருளும் பேசாதே, அதாவது ரசம்கட்ட வேறு ஒரு சரக்கையும் நினையாதே அதுவே போதும் என்கிறார். அப்படியானால் அக்கினியில் 3-வகை அக்கினியுப்பு உண்டு. அந்த மூன்று வகை அக்கினியுப்புக்களினாலும் சூதம்கட்டும் என்றாகிறது. அப்படியானால் மூன்று வகை அக்கினியுப்பைத் தெரிய வேண்டும்.

மூன்று வகை அக்கினியுப்புக்கும் விபரம்

ஆகாய அக்கினியுப்பாகிய முதல் வழலையையாவது அல்லது பூமி அக்கினியுப்பாகிய 7-வது வழலை என்ற வெடியுப்பையாவது 2-வது குருவாகிய ஜலத்தில் விளைந்த அக்கினி என்ற பாறையுப்பையாவது ரசம் சாப்பிட்டு ஜெயமானால் வேறு ஒரு பொருளும் பேச வேண்டாம் என்ற உரை தொக்கி நிற்கிறது.

கருத்துரை.

இந்த மூன்று வகை அக்கினியுப்புக்களாலும் சூதம் கட்டும் எள உரை எழுத இக்கவி இடங்கொடுத்தாலும், முன் பாட்டில் அண்ட வன்னியினால் ரசம் சிக்கிடும் என்று மட்டும் சொல்லி, இந்தப்பாட்டில் வன்னியுண்டு ரசம் செயமாகினால் என்று சொல்லியிருப்பதால் முன்கவியிலுள்ள அண்டவன்னியையுண்டு ரசம் செயமானால் எனும்கருத்துரையையே இங்கு உபயோகிக்கவேண்டும்.

தன்னையே புணர்ந்தார் தமக்கல்லவோ :- தன்னையறிந்த மகான்களுக்கு அல்லவோ யோகமும் சூதமும் சித்திக்கும் என்கிறார். அப்படியானால் யோகாப்பியாசம் பூர்த்தியாகாதவர்களுக்கு சூதம் கட்டாதா! யோகி அல்லாதவர்களும் மேற்படி உப்புக்களினால் சூதம் கட்டலாம் என்று முன்னமே எடுத்துக்காட்டியிருப்பதால் நம்மீது இறக்கம் வைத்த மகான் இவரேயாவார்.

இதுவரை விளைவு சவுக்காரமாகிய அண்டவன்னி என்ற நஞ்சின்
சுன்னத்தால் ரசம் கட்டும் என்று தெரிந்து கொண்டோம்.
இனி வைப்புச்சவுக்காரச் சுன்னத்தால் ரசம் கட்டுமா
வென்பதை ஆராய்வோம்.

வைப்புச்சவுக்காரச் சுன்னத்தாலும்
சூதம் கட்டும். தங்கமாகும்

ஆனால் கரியில் வைத்து உருக்கினால் அந்தத்தங்கம்
ஓடிவிடும். புடத்திற்கும் நிற்காது.

என்பதற்கு ஆதாரம் தங்கம் ஓடாமல் புடத்துக்கு செயித்து
நிறுத்த வேண்டிய விதமும் ஆதாரமும்.

தரயை விட்டால்•புடம் நிற்காது என்று கொங்கணர் 3000-ம் 3-வது காண்டம் 880-வது பாட்டில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஊத்துக்கும் உருக்குக்கும் புடத்துக்கும்
தங்கம் ஜெயித்து நிற்கவேண்டும்

சூதமுடன் தங்கம் சேர்த்து சுன்னம்செய்தால்தான்
ஊத்துக்கும் புடத்திற்கும் ஜெயித்துநிற்கும்
தங்கமாகும் என்பதற்கு ஆதாரம்.

அகஸ்தியர் பரிபாஷை 2-வது காண்டம் 41, 48, 49, 50, 52, 79, 80-வது
பாட்டுக்களை கவனியுங்கள்

பேதத்தைக் காண்பதென்றோ கற்சுண்ணாம்பை
பெரியசத்து வாங்கி முத்தைப் பிரிப்பதென்றோ
தாதுற்ற மதிசாரந் தன்னிற்றாக்கி
சமுத்திரமாஞ் சிவகெங்கை சார்வதென்றோ
சூதத்தை மணியாக்கி ஏமபீஜஞ்சூட்டி
யொரு குருவாக்கித்தோமிவ் வைம்பொன்
வாதத்தைக் காண்பதென்றோ
காயசித்தி வரகாகச்செய்வதென் வயசு நூறே. 41

உரை

கற்சுன்னம் என்பது பிர்மகற்பக்கல்

கற்சுண்ணாம்பு என்பது பிர்மகற்பக்கல் என்று அகஸ்தியர் பரிபாஷை 500-ல் 1-வது காண்டம் 16-வது பாட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் கற்சுண்ணாம்பை சத்து வாங்கி என்பது பிர்மகற்பக்கல்லில் சத்தைப்பிரித்தெடுப்பது. அப்படி பிரித்தெடுக்கும் சத்தானது முத்தைப்போல் பிரகாசிக்கும். அந்த சத்தாகிய பிர்ம உப்பை, மதிசாரம் என்பது பூநீர். பூநீரில் தாக்கி, சமுத்திரமாம் சிவகெங்கை சார்வதென்றோ என்பது:- பிரணவநீருக்கே சிவகெங்கை என்று பெயர். பின்னும் பிரணவநீரில் சேர்த்து சூதத்தை மணியாக்கி அதாவது ரசத்தைக்கட்டியுருக்கி மணியாக்கி ஏமபீஜம் சூட்டி (ஏமபீஜம் என்பது தங்கச்செம்பு) இதில் தங்கச்செம்பைக் கூட்டி, குருவாக்கினால் அதாவது சுன்னம் செய்தால் செம்பு பசும்பொன்னாகும் காயசித்தியாகும் என்கிறார்.

பிர்மகற்பத்தை பிரணவநீரில் புதைத்து சமாது வைத்து அதில் முத்துப்போல் விளைவதே சத்து. (பிர்மகற்பத்தில் சத்தைப்பிரித்தெடுக்கும் விதம் அடுத்த பக்கம் பார்க்கவும்)

இந்தச் சத்துக்கு பிர்மஉப்பு என்று அகஸ்தியர் பரிபாகைஷ, 500-ல் 1-வது காண்டம் 16,வது பாட்டில் சொல்லப்பட்டிருக்கிறது.

பிர்மகற்பத்தில் சத்தைப் பிரித்தெடுப்பதற்கு ஆதாரம்

பெண்ணாரும் புருடருமே சேர்ந்தாரானால் பொன் போலே ஒரு பிள்ளை பிறக்கும் என்று அகஸ்தியர் பரிபாகைஷ 1-வது காண்டம் 15-வது பாட்டிலும், 16,வது பாட்டில் அந்தப் பிள்ளைக்குப் பெயர் பிர்மஉப்பென்றும் 69,70-வது பாட்டுகளில் பஞ்சசுன்னத்தால் பூநீரைச்சுன்னம் செய்து அதில் பாறையுப்பைச் சேர்க்க தண்ணீராகுமென்றும், அந்தத் தண்ணீரே சிவகெங்கையென்றும் சுத்த கெங்கையென்றும் சத்திநாதமென்றும், இந்த சத்திநாதத்தில் பரப்பிர்ம விந்தாகிய, பிர்மகற்பம் என்ற இடியுப்பாகிய நஞ்சு கலக்க விந்தாகிய நஞ்சு குருவுமாச்சு

தங்க ரசம் என்பது பிர்மஉப்பு

ஒகோகோ தங்க ரசம் உதித்ததம்ம மண்ணோடு புனல் முதலாய் ஏமமாகும். மக்களே இந்திரன் போல் வாழ்வுண்டாகும் என்றும், இந்த செயநீரே பிரணவநீரென்றும் சவுக்கார செயநீரென்றும் 71-வது பாட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தத் தங்கரசமாகிய பிர்மஉப்புக்கு ஏமப்பால் என்று 52-வது பாட்டிலும் சொல்லப்பட்டிருக்கிறது கவனத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

74-பாட்டில் ஆணாகிய சிவஉப்பை 2-பெண்ணாகிய பூநீர் பாறையுப்புச் செயநீரில் தீட்சை செய்தால் கலக்கும். அப்படி கலந்த போது அழகு பொருந்திய ஒரு பிள்ளை பிறக்கும். இதனால் எல்லாமுண்டாகும் என்றும், பரிபாஷை 5-வது காண்டம் 28-வது பாட்டில் பஞ்ச அமுதமாகிய பிரணவ நீர் 10-பங்கில் ஒரு பங்கு சிவஉப்பிட்டு சமாதுவைக்க பூ பூர்க்கும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் பூவே சத்தாக விளைந்து வந்திருக்கிறதென உரை அறியவும்.

சத்தாகிய பிர்மஉப்பின் மகிமையும் சுன்னம் செய்யும் விதமும்

மேற்படி 5-வது காண்டம் 32 முதல் 41-வது பாட்டு வரை அதன் மகிமையைப் பற்றியும் சுன்னம் செய்யும் விதத்தையும் சொல்லப்பட்டிருக்கிறது. பார்த்துக் கொள்ளவும்.

ஏமபீஜம் என்பது தங்கச் செம்பு

என்பதற்கு ஆதாரம்
சட்டைமுனி வாதகாவியம் 1000-த்தில்
725-வது பாட்டில் தங்கச்செம்பு
செய்முறை சொல்லப்பட்டிருக்கிறது

தங்கச் செம்பு செய்வதற்கு வேண்டிய சித்தர் சூரணம் மற்றும் அதற்கு வேண்டிய கிராவணம் அடுத்துவரும் பாடல்களிலேயே பார்த்துக் கொள்ளவும். கொங்கணவர் 3000-ம் 2-வது காண்டம் 865-வது பாட்டில் கிராவணமில்லாமல் தங்கச் செம்பு செய்யும் விதமும், சித்தர் சூரணமும் சொல்லப்பட்டிருக்கிறது.

வைப்புச்சவுக்காரம் செய்தாலும்
அதில் தங்கம் சேர்க்க வேண்டும்

அகஸ்தியர் பரிபாஷை 2-வது காண்டம் பாட்டு 48-ல்,

வழலைமுறை வரிசையாய்ச் செய்தாலுந்தான்
மக்களே தங்கம் விட்டால் வன்னமில்லை
வீஎவென்று சொன்னதென்ன ஆகாசத்தின்
விந்தென்ற ஈசனுப்பை விட்டதாலே
தொழின்முறையாய் முடித்துவைத்த வழலையையா
சொர்ணமல்லஉற் சொர்ணமுண்டு சுயம்பேயானால்
பழனையென்ற ரசனையடா ஈசன்விந்து
பட்டவிடந் தொட்டவிடம் பசும்பொன்னாமே 48

உரை

வழலைமுறை வரிசையாய்ச் செய்தாலும் என்பது வைப்புச்சவுக்காரம் செய்வது என்பது, அப்படி வைப்புச்சவுக்காரம் செய்தாலும் அதில் தங்கம் சேர்க்க வேண்டும். வைப்புச் சவுக்காரத்தில் தங்கம் சேர்க்காவிடில் பிரயோஜனமில்லை. ஏன் பிரயோஜனமில்லாமல் வாதம் வீணாய்ப்போய்விட்டதென்றால் வைப்புச்சவுக்காரத்திலும் ஆகாசத்தின் விந்தென்ற ஈசனுப்பை விட்டதாலே அதாவது நஞ்சை சேர்க்காததாலே என்கிறார். ஆகாசவிந்தென்ற ஈசனுப்பு என்பது நஞ்சு. இது பூமியிலிருந்தெடுத்துச் சேர்க்க வேண்டும். (வளையலில் வெந்து வந்தது ஆகாது) அது கடவுளால் இயற்கையாய் நடக்கும் தொழில் முறையில் முடித்து வைத்த வழலையாம். இந்த வழலை சுயம்பாகக் கிடைத்து சவுக்கார வைப்பில் சேர்த்தால் தங்கம் சேர்க்காமலும் தங்கமாகும். ஏனென்றால் பழனை என்ற ரசனையடா அதாவது ஆதியிலே முடிந்த இடியாகிய ஈசன்விந்து பழைய ரசமாக முடிந்திருக்கிறது. அந்த இடியுப்பாகிய ரசம் பட்டவிடம் தொட்டவிடமெல்லாம் பசும்பொன்னாகும் மாற்று அதிகம் இந்த மாத்துக்கு ஆணியில்லை. சாப்பிட்டால் ஊழி காலம் வரை அதாவது யுகமுடிவு வரை சாகாதிருப்பீர் என்று அகஸ்தியரால் சொல்லப்பட்டிருக்கிறது. பழனைரசம் என்பது இடியுப்பு.

- முற்றும் -